உதயன்
விலை ரூபா 15.00
www.uthayan.com
சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 04 செவ்வாய்க்கிழமை (18.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 053

# நமது நாட்டில் தனித்தோ, பிரிந்தோ எவரும் வாழ்வதற்கு முடியாது

## யாழ்.நகரில் நடந்த பொங்கல் விழாவில் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், ஜனவரி 18

**எமது நாடு 30 வருடம் பின்னடைவில் இருந்து மீண்டு இப்போது சுபீட்ச மான எதிர்காலத்தை நோக்கி வீறுநடைபோடுகிறது. நமது நாட்டில் எவரும் தனித்தோ அல்லது பிரிந்தோ வாழ்வதற்கு முடியாது. நாம் எல்லோரும் இந் நாட்டின் ஒரு தாய் பிள்ளைகளாக வாழவேண்டும்.**

**இவ்வாறு யாழ்.நகரில் நேற்று நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.**

துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற இவ் விழாவில் ஜனாதிபதி உரையாற்றுகையில் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து உங்களைச் சந்தித்து பொங்கல் விழாவில் கலந்து கொண்டிருப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நாட்டின் மீது அன்பு செலுத்துவதைப் போல கலாசார விழுமியங்களிலும் அன்பு செலுத்தி அவற்றைப் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்ததியினரிடம் கையளிக்க வேண்டும்.

வடக்கின் வசந்தத்தின் மூலம் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். வடக்கின் வசந்தமானது உங்கள் பிள்ளைகளின் வசந்தம். நேற்றையதினம் கூட கேரதீவு சங்குப்பிட்டிப் பாலத்தை நவீன முறையில் புனரமைத்துத் திறந்து வைத்துள்ளோம்.

எங்கள் அரசு மேற்கொண்டு வரும் அபி

(27ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய நிகழ்வில் ஜனாதிபதி பொங்கல் விழாவை ஆரம்பித்து வைக்கிறார்.

## யாழ்ப்பாணத்தில் மீண்டும் துப்பாக்கிச் சூடு ஆரம்பம்

### நேற்றிரவு பெண் ஒருவருக்கு காயம்

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாணத்தில் நேற்று மீண்டும் துப்பாக்கிச் சூடு ஆரம்பமாகி உள்ளது. இதில் அந்தணப் பெண் ஒருவர் காயமடைந்தார்.

தற்போதைய அமைதியைக் குழப்ப வடக்கிலும் தெற்கிலும் பாதாள உலகக் குழுக்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் முறியடிக்கப்படும் என்று யாழ். நகரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேசிவிட்டுச் சென்ற சில மணி நேரங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மானிப்பாய் வைத்தியசாலை வீதியில் இரவு 8 மணியளவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில்

(28ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபை வேட்பு மனுத்தாக்கல் திட்டமிட்டபடி 20 முதல் 27ஆம் திகதி வரை

### மேலதிக தேர்தல் ஆணையாளர் தகவல்

கொழும்பு, ஜன.18

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி இம்மாதம் 20ஆம் திகதிமுதல் 27ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.பி.சுமணசிறி நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலையால் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பெருமளவிலான மக்கள் பாதிக்கப்பட்டும், இடம் பெயர்ந்தும் இருக்கின்றனர். இந்நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்யும் திகதியைப் பிற்போடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதேவேளை, வேட்புமனுக்கள் ஏற்கும் திகதியை நீடிக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

(28ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டி: 20இல் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவிக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 18

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவது குறித்து த.தே.கூ. 20ஆம் திகதி பகிரங்கமாக அறிவிக்கும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஒன்றிணைந்து தேர்தலில் களமிறங்க தமிழர் விடுதலைக் கூட்டணியும்(புளொட்), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் விருப்பம் தெரிவித்துள்ளன. நான் கொழும்புக்கு திரும்பியவுடன் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு, ரெலோ ஆகியவற்றுடன் பேச்சுக்கள் நடத்தி இறுதி முடிவு எடுக்கவுள்ளேன் - என்றார்.

கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி வருகிறார் என மாவை தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் நிவாரணம் போதாமல் இருக்கின்றது என்றும் கூட்டமைப்பு இலங்கையில் உள்ள இந்தியத் தூது வரைச் சந்தித்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க நிவாரணப் பொருள்கள் இலங்கை வந்தடைந்தன என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)



இன்னும் மூன்று நாட்கள்
JAFFNA International 2011 TRADE FAIR 2nd Edition
ஜனவரி 21, 22, 23 திகதிகளில்
சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக
மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

## கிழக்கில் பொருள்களின் விலை விஷம்போல் உயர்ந்து வருகிறது

### தேங்காய் நூறு ரூபாவுக்கு விற்பனை

கொழும்பு, ஜன. 18

கிழக்கு மாகாணத்தில் வெள்ளம் படிப்படியாக வடிந்து வரும் நிலையில் பொருள்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. தேங்காய் நூறு ரூபாவாக விற்கப்படுகின்றதென எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பில் மரக்கறி வகைகளின் விலைகளும்

(27ஆம் பக்கம் பார்க்க)

சபரிமலை யாத்திரிகர்களே!
சபரிமலை செல்ல இருக்கும் யாத்திரிகர்களே மிகவும் குறைந்த கட்டணங்களில் விமானப் பயணச் சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
METRO TRAVELS & Tours (pvt) Ltd.,
No. 62/33, Stanly link Road, Jaffna.
Tel.: 0215673555, 0215673666
Fax: 0212220404

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222




பகல் இரவு இரு நேரங்களிலும் வானம் தெளிவாக இருக்கும்.

# வெள்ளப் பாதிப்பைப் பார்க்க வருகின்றார் ஐ.நா. பிரதிநிதி

கொழும்பு, ஜன. 18

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளரும், அவசர நிவாரண பிரதி இணைப்பாளருமான கதரின் பிரேக் இலங்கை வரவுள்ளார்.

மூன்று நாள்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணம் உட்பட அனைத்துப் பகுதிகளுக்கும் செல்வார் என்று ஐ.நா. கொழும்பு அலுவலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வெள்ளத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்திற்குச் செல்லும் கதரின் அங்குள்ள நிலைமையை மிக விரிவாக ஆராய்வார் என்று



ஐ.நா. கொழும்பு அலுவலகம் மேலும் தெரிவித்தது. அவரது மூன்று நாள்கள் பயணத்தின் போது வடக்கில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள இடங்களுக்கும் சென்று அம்மக்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்வார்.

அரச அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாக அவர் கலந்தாலோசிப்பார் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# தமிழினிக்கு விளக்கமறியல் தொடர்கிறது

கொழும்பு, ஜன. 18

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு முன்னாள் பொறுப்பாளர் தமிழினி எனப்படும் சுப்பிரமணியம் சிவகாமியைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இறுதிப் போரின் போது படையினரிடம் சரணடைந்த தமிழினி பின்னர் கைது செய்யப்பட்டு தடுத்து நீதிமன்றத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி வரை அவரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி உத்தரவிட்டுள்ளார்.

விசாரணைகளை நடத்துவதற்கு போதியளவு கால அவகாசம் வழங்குமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நீதிவானிடம் கோரிக்கை விடுத்தனர். நீதிவான் அதனை ஏற்றுக் கொண்டு விளக்க மறியலை நீடித்தார்.

# முற்றுகையிட்டு மக்கள் தாக்கியதில் செயலக அலுவலர் இருவர் காயம்

## நிவாரணம் பதுக்கல் என்ற வதந்தியால் ஆரையம்பதியில் நேற்றுப்பகல் சம்பவம்

கொழும்பு, ஜன. 18

வெள்ள நிவாரணப் பொருள்களைப் பதுக்கி வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்குத் திரண்டு வந்த மக்களுக்கும் அங்கிருந்த அலுவலர்களுக்குமிடையில் ஏற்பட்ட கை கலப்பில் பொது மக்கள் நால்வரும், பிரதேச செயலக அலுவலர்கள் இருவரும் காயமுற்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 10.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருபவை வருமாறு:-

வெள்ள நிவாரணப் பொருள்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன எனத் தகவல்கள் வெளிவந்ததை அடுத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சுமார் ஆயிரத்துக்கும் அதிகமானோர் நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரையம்பதி பிரதேச செயலக வளாகம் முன் திரண்டனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான தகவல் மக்கள் மத்தியில் பரவியதை அடுத்து மக்கள் பிரதேச செயலக வளாகத்தினுள் அத்துமீறிச் சென்றபோது, பொலிஸார் குறுக்கிட்டதால் மோதல் சம்பவம் இடம்பெற்றது. எனவே, இம்முறையும் அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெறாத வகையில் காத்தான்குடி பொலிஸார் பிரதேச சபை வளாகத்தினுள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர்.

நிவாரணப் பொருள்கள் முறையாகக் கிடைக்காமை ஒருபுறமிருக்க, பொருள்களைப் பதுக்கி வைத்திருப்பதாக மக்கள் மத்தியில் எழுந்த சர்ச்சையை அடுத்து பிரதேசசபை வளாகத்தில் பொதுமக்கள் குழுமினர். இதன்போது செயலகத்திற்குள் நுழைய முற்பட்ட பொது மக்களைப் பொலிஸார் தடுத்துள்ளனர். இதனால் இரு பகுதியினருக்குமிடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பொதுமக்கள் நால்வர் காயமுற்றனர். அத்துடன் பிரதேச செயலக ஊழியர்கள் இருவரும் காயமடைந்தனர். ஆத்திரமுற்ற மக்கள் செயலகத்தினுள் நுழைந்து அங்கிருந்த சில பொருள்களைச் சேதப்படுத்தினர்.

இந்த மோதல் சம்பவத்தை அடுத்து ஆரையம்பதி பிரதேச செயலாளர் பி.தனபாலசிங்கம் காத்தான்குடி பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். *(முன்னர் வந்த செய்தி 11ஆம் பக்கத்தில்)*

**COLOMBO STOCK EXCHANGE**

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
தை 17, 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7008.06↓
மிலங்கா(MPI) 7240.04 ↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப் புரள்வு(Rs.) 3176.18Mn
பங்குகளின் அளவு(No.) 156.69Mn
வியாபாரம்(No.) 35142
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
சிங்கர் பினான்ஸ் 50.00
சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் 700.00
சிரிலங்ஸ் டிவலொப்மன்ர் 71.00
ஜெ எல் மொறிசன் 1600.00
ஏசியா கபிர்ரல் 86.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
அசோக் லேடன்ட் 3980.00
பாகியூர் 3.60
ஈ பி கிறிபேசி 2000.00
உடப்புசலாவ 47.80
றோயல் பாம் பீச் 82.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# யானைகள் நான்கு சாவு

கொழும்பு, ஜன. 18

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் 4 யானைகள் பலியாகி உள்ளன. ஹபறனை, கரிதலை, கவுதுல்ல, மின்னேரியா ஆகிய இடங்களில் யானைகள் உயிரிழந்துள்ளன. 50 யானைகள் பலியானதாக வெளியான செய்திகளை அமைச்சர் மறுத்தார்.

# ஐயப்ப பக்தரின் சடலம் இலங்கை வந்தது

கொழும்பு, ஜன.18

சபரிமலையில் சன நெரிசலில் சிக்கி உயிரிழந்த தெனியாய பகுதியைச் சேர்ந்த ஐயப்ப பக்தர் உஷாந்காந்தின் சடலம் நேற்று இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தியாவின் கேரள மாநிலம் சபரிமலை அருகே கடந்த சனியன்று அதிகாலை சன நெரிசலில் சிக்கி சுமார் 106 ஐயப்ப பக்தர்கள் பலியாகினர். சபரிமலையில் மகர ஜோதியைத் தரிசித்து விட்டு திரும்பிக்கொண்டிருந்த போது இடுக்கி மாவட்டம் - உப்புபாறைப் பகுதியில் இந்தச் சோகச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் தெனியாய பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய உஷாந்காந்த் என்ற ஐயப்ப பக்தர் பலியாகினார். இவரின் சடலம் நேற்று மாலை 4 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது என உறவினர்கள் தெரிவித்தனர். இவரின் இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை நடத்தப்படும் எனவும் அவர்கள் கூறினார்கள். சபரிமலை விபத்தில் 106 பேர் உயிரிழந்தனர்.

# நிகழ்வுகள்

## நாளை

**குருபூசை தினம்**

கைதடி மாதவி லிங்கேஸ்சுவரர் ஆலயத்தின் ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தில் தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்தா சுவாமிகள், தவத்திரு ஸ்ரீ திருப்புகழ் சுவாமிகள், தவத்திரு சுவாமி செல்லம்மா மாதவி ஆகியோரின் குருபூசை தின நிகழ்வுகள் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

சமாதான நீதவான் இ.குழந்தை வடிவேலு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கரும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் ச. சந்திரகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது மாணவர்களுக்கான வினாடிவினாப் போட்டிகளும் நடைபெறும். (ற-313)

**வடமாகாண அலுவலக திறப்பு விழா**

வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளர் அலுவலகத் திறப்பு விழா யாழ். நாவலர் வீதியில் உள்ள கட்டடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண பொதுநிர்வாக செயலகம் யாழ். நாவலர் வீதியில் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் இயங்கும் எனப் பிரதி பிரதம செயலாளரும், கிளிநொச்சி-முல்லைத்தீவுப் பிராந்திய ஆணையாளருமான தி.இராசநாயகம் தெரிவித்தார். (ற-302)

**மரதன் ஓட்டப் போட்டி**

ஆனைக்கோட்டை விநாயகர் சனசமூக நிலையத்தின் 5 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு 7 கி.மீ. மரதன் ஓட்டப் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் ஆனைக்கோட்டைப் பிரதேசத்திற்கு உட்பட்ட வீரர்கள் கலந்துகொள்ள முடியுமென விழா ஏற்பாட்டாளர் க. இராசேந்திரம் தெரிவித்துள்ளார். (ற-302)

**நூல் வெளியீடும் இசையரங்கமும்**

கலாவித்தகர் நாகரட்ணம் மாதவன் எழுதிய தண்ணுமைத் தண்ணொலி என்னும் நூல் வெளியீடும் இசையரங்கமும் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடப் பேராசிரியர் நா.ஞானகுமரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும், கௌரவ விருந்தினராக யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் ஆறு. திருமுருகனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். முதற்பிரதியை உ.இராதாகிருஷ்ணன் பெறவுள்ளார். (ற-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் தேசிய பொங்கல் விழா ஜனாதிபதிக்கு சிறப்பான வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜன. 18

தேசிய பொங்கல் விழா யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பால் ஊற்றி பொங்கல் விழாவை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்துதார். தவில், நாதஸ்வர கலைஞர்கள் 50 பேரின் மங்கள வாத்தியம் அங்கு முழங்கின.

நேற்று முற்பகல் 10 மணியளவில் ஹெலிகொப்ரர் மூலம் வந்திறங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மங்கள வாத்தியம், பாரம்பரிய கலை நிகழ்வுகளுடன் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.

அங்கு பொங்கல் விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்த விசேட வழிபாட்டுப் பந்தலில் பூசை வழிபாடுகளை மேற்கொண்டுவிட்டு பொங்கல் பானையில் பால் ஊற்றி பொங்கல் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து விழா மேடையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலில் தேசிய கீதம் சிங்கள மொழியில் இசைக்கப் பட்டது. வரவேற்புரையை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நிகழ்த்தினார். ஆசியுரையை மகேஸ்வரதேவா குருக்கள் நிகழ்த்தினார்.

விழா ஏற்பாட்டுக் குழவின் சார்பாக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா சிறப்புரையாற்றினார். நினைவுப் பரிசொன்றையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

இந் நிகழ்வில் புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், திருமதி மகேஸ்வரன் விஜயகலா, யாழ்.மாவட் டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். பொது மக்களும் ஆயிக்கணக்கானோர் பங்கு பற்றினர்.

இந்த விழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்வேறு உதவிகளையும் வழங்கியிருந்தார்.

யாழ்.மாவட்டத்தில் சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைப்பதற்கு 34 லட்சம் ரூபாவுக்கான காசோலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கையளித்தார்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக் கழக புகுமுக மாணவர்கள் நூறு பேருக்கு மடிக் கணினிகளையும் கையளித்தார்.

நிகழ்வில் மங்கள வாத்தியங்கள் இசைத்த தவில் நாதஸ்வரக் கலைஞர்களையும், நடன நிகழ்வுகளை நெறியாள்கை செய்த இசைக் கலைஞர்களையும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இதேவேளை சிவாச்சாரியர்களையும் கலைஞர்களையும் பாரம்பரிய மற்றும் சிறுகைத் தொழில்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஒ-09)

## சங்குப்பிட்டிப் பாலத் திறப்பு விழாவில்

# அமைச்சர் ரிஷாத் பங்கேற்காதது ஏன்?

கொழும்பு, ஜன. 18

வன்னி மாவட்டத்தையும், யாழ். மாவட்டத்தையும் இணைக்கும் சங்குப்பிட்டிப் பாலத் திறப்பு விழாவுக்கு வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கலந்து கொள்ளாதது ஏன் என பல தரப்புக்களிலிருந்தும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

வன்னி மாவட்டத்தில் நூறு கோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட சங்குப்பிட்டி பாலம் வன்னி மாவட்ட அபிவிருத்திக்கு உந்துசக்தியாக விளங்கும் பெரும் திட்டமாகும். அரச அமைச்சரான ரிஷாத் பதியுதீனின் பெயர் அழைப்பிதழில் இடம் பெறாததே விழாவில் அவர் கலந்துகொள்ளாததற்கான காரணமென ஒரு தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாலம் திறக்கும் வைபவத்துக்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலம் ஊடாக ஏராளமானோர் போக்குவரத்து

## இ.போ.ச. பஸ்கள் நேற்றுமுதல் சேவையில்

யாழ்ப்பாணம், ஜன.18

கேரதீவு-சங்குப்பிட்டி ஊடாக போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை நேற்று ஆரம்ப மாகியது.

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ நேற்று முன்தினம் வைபவ ரீதியாக கேரதீவு-சங்குப்பிட்டிப் பாலத்தைத் திறந்து வைத்திருந்தார்.

அதை அடுத்து யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஸ்கந்தபுரத்துக்கு நேற்று பஸ் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப் பட்டது.

கேரதீவு-சங்குப்பிட்டி ஊடாக இன்று முதல் இடம்பெறவுள்ள சேவைகள் குறித்த விவரங்களை போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் க.கணேசபிள்ளை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி-நல்லூர் வரையான பஸ் சேவை இன்றிலிருந்து யாழ். பஸ் நிலையத்தில் இருந்து தினமும் காலை 7-பி.ப 2மணிக்குப் புறப்பட்டு சாவகச்சேரி, தனங்கிளப்பு ஊடாக பூநகரி-நல்லூர் வரை செயலாற்றப்படும் என்பதுடன் பூநகரி-நல்லூரில் இருந்து இதே பாதை வழியாக தினமும் காலை 9 மணிக்கும் மாலை 4.30க்கும் சேவையில் ஈடுபடும் தினமும் காலை 6.30 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இருந்து கிளிநொச்சிச்சாலைப் பேரூந்து ஒன்று நாவற்குழி, தனங்கிளப்பு, பூநகரி ஊடாக ஸ்கந்தபுரத்துக்குச் செயலாற்றப்படும் என்பதுடன் ஸ்கந்தபுரத்தில் இருந்து இதே பாதை வழியாக பி.ப 1.45 மணிக்குப் புறப்பட்டு யாழ். பஸ் நிலையம் வந்தடையும்- என்றுள்ளது.

இதேவேளை இப் பாதையூடாக நேற்றுப் பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டன. மோட்டார் சைக்கிளிலும் பலர் பிரயாணம் செய்தனர். அரச உத்தியோகத்தர்களும் பிரயாணம் செய்ததைக் காண முடிந்தது.

இளைஞர்கள் பொதுமக்கள் பலரும் திறந்து வைக்கப்பட்ட பாலத்தைப் பார்வையிட சென்று திரும்பியதைக் காணக் கூடியதாக இருந்தது. சுற்றுலா செல்வதைப் போல பலர் சென்று திரும்பினர். (ஒ-ஐ-131)

# விமானப் படையின் ஏற்பாட்டில் நாளை சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன.18

இலங்கை விமானப்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு நாளை ஒட்டி வட மாகாணத்தில் மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்று நாளை புதன் கிழமை நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் இன்று காலை 9 மணியில் இருந்து யாழ். பொது நூலக உணவகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து அனுராதபுரம் வரையான 50 கி.மீ தூரம் இடம்பெறும் இந்தச் சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாம் பரிசாக 25 ஆயிரம் ரூபா, இரண்டாம் பரிசாக 20 ஆயிரம் ரூபா, மூன்றாம் பரிசாக 15 ஆயிரம் ரூபா, நான்காம் பரிசாரக 10 ஆயிரம் ரூபா, 5ஆம் பரிசாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ஒ-10)



இந்திய விமானப் படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் பிரதீப் வசந்த் நாயக், இலங்கை விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ஷல் றொசான் குணதிலக்கவை சந்தித்தவேளை.

# கிழக்கில் சடலங்களை அடக்கம் செய்வதில் சிரமம்

கொழும்பு, ஜன. 18

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட மழை, வெள்ளம் காரணமாக உயிரிழந்தோரின் சடலங்களை அடக்கம் செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மயானங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் சடலங்களை அடக்கம் செய்வதில் அல்லது தகனம் செய்வதில் மாற்று வழிகளைத் தேடவேண்டியுள்ளது என மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் 28 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 4 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

கூடுதலான உயிரிழப்புகள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே பதிவாகி உள்ளன.

# குழாயடியில் குடிதண்ணீருக்கு காத்திருந்தவேளை

# யாழ். நகரில் அதிகாலை தாலிக்கொடி அபகரிப்பு

யாழ்.நகரில், கஸ்தூரியார் வீதியில் - கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில் நேற்று பொழுது புலரும் வேளையில் வயோதிபப் பெண் ஒருவரின் தாலிக்கொடியைப் பறித்துச்சொன்றார் இளைஞர் ஒருவர். அதிகாலை வீதியோரக் குழாயில் குடிதண்ணீர் எடுத்துக் கொண்டிந்த பிரஸ்தாப மூதாட்டியை தள்ளி விழுத்தி கழத்தை நெரித்தவாறு தாலிக்கொடியை அபகரித்த அந்த இளைஞர் அங்கிருந்து தப்பியோடிவிட்டான். ஆறுபவுண் நிறையுடைய தாலிக்கொடியை பறிகொடுத்த மூதாட்டிக்கு காயமும் ஏற்பட்டுள்ளது. (ஒ-ஐ)

# தப்பியோடிய திருடன் தவறி வீழ்ந்தான்கிணற்றில்

யாழ்ப்பாணம், ஜன. 18

சுண்டிக்குளியில் வீடொன்றில் திருடச் சென்றவர்களை மக்கள் துரத்திச் சென்றார்கள் என்று கூறப்படும் சம்பவத்தில் கிணற்றுக்குள் வீழ்ந்த ஒருவர் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டார். திருட்டுச் சந்தேகத்தின் பேரில் அவர் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப் பட்டார்.

அச்சுக்கூட ஒழுங்கைப் பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தமது வீட்டின் வெளிப் பகுதியில் ஆள்நடமாட்டம் கேட்டதை அடுத்து விழித்துக் கொண்ட உரிமையாளர்கள் வீட்டைச் சுற்றி வெளிப்பகுதியில் இருந்த 'லைட்'களைப் போட்டுள்ளனர்.

உடனடியாகச் சுதாகரித்துக் கொண்ட மர்ம நபர்கள், தாம் முன்வீட்டுக்காரர்கள் என்றும் கதவைத் திறக்கும்படியும் வீட்டுக்காரர்களிடம் தெரிவித்துள்ளனர். எனினும் குரலில் இருந்த வித்தியாசத்தைக் கண்டுபிடித்த வீட்டு உரிமையாளர்கள் கூக்குரலிட்டுள்ளனர்.

சத்தம் கேட்டு அயல் வீடுகளில் இருந்தவர்கள் திரண்டதும் மர்ம நபர்கள் அங்கிருந்த தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர். அயலில் இருந்த வெற்றுக் காணி ஒன்றின் ஊடாக அவர்கள் ஓடும் போது ஒருவர் கால் தடுக்கி அங்கிருந்த கிணற்றினுள் வீழ்ந்தார் என்று அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்.

உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. எனினும் காலை 7 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர். கிணற்றில் விழுந்ததில் காயமுற்ற குறிப்பிட்ட நபரை பொலிஸார் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவருக்கு வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புகள் இருக்கின்றதா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை, இந்த வீட்டில் அண்மையில் திருட்டு இடம்பெற்றிருந்ததால் வீட்டார் மிகவும் விழிப்புடன் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# இ.தொ.காங்கிரஸ், ம.ம.முன்னணி அரசுடன் இணைந்து போட்டியிடும்

## திகாம்பரத்தின் கட்சி தனித்துப் போட்டி

கொழும்பு, ஜன. 18

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியன ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளன.

இதேவேளை, அரசுடன் இணைந்து கொண்ட பழனி திகாம்பரத்தின் தொழிலாளர் தேசிய முன்னணி தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

முன்னாள் எம்.பி மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயகத் தேசிய முன்னணியும், முன்னாள் எம்.பி எஸ். சதாசிவம் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியும் இணைந்து கொழும்பு, கண்டி, பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சபைகள், பிரதேச சபைத் தேர்தல்களில் போட்டியிடத் தீர்மானித்துள்ளன.

ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிடும் ஏனைய சிறுபான்மைக் கட்சிகளின் வேட்பாளர்கள் ஐ.தே.கட்சியின் உறுப்புரிமை பெற வேண்டுமென ஐ.தே.க. அதிரடியாக அறிவித்ததையடுத்து சிறுபான்மைக் கட்சிகள் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளன. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18 ஜனவரி 2011 செவ்வாய்க்கிழமை

# மின்சாரசபை செலுத்த வேண்டிய கடனை திறைசேரி பொறுப்பேற்றுக் கொண்டது

கொழும்பு, ஜன. 18

எரிபொருள் விநியோகம் தொடர்பாகக் கடந்த 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் மின்சார சபை பெற்றோலியன் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகையான 5,300 கோடி ரூபாவை செலுத்தும் பொறுப்பை திறைசேரி ஏற்றுக் கொண்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரான பாடலீ சம்பிக்க ரணவக்க ஊடக மொன்றுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு கடந்த ஆண்டில் பெற்றுக்கொண்ட எரிபொருளுக்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள தொகைகள் மின்சார சபையினால் செலுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்விதமாக 2010 ஆண்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மின்சார சபையினால் செலுத்தப்பட வேண்டியுள்ள மொத்தப் பணத்தொகையையும் எதிர்வரும் மார்ச் மாதமளவில் செலுத்தி முடிக்கவுள்ளதாகவும் அமைச்சர் ரணவக்க தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து வழங்கியுள்ள அமைச்சர், மின்சார சபைக்குக் கிட்டும் வருவாயிலிருந்தே செலவீனங்களை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்று மின்சார சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் மின்சாரசபை பெற்றுக் கொள்ளும் எரிபொருள்களுக்கான கொடுப்பனவு மூன்று மாத காலத்துள் வழங்கப்படவுள்ளது. - என்றார். (ம-22)

திறமை...



கௌரவம்: களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறிய ஏழாலையைச் சேர்ந்த குணரத்தினம் குணரோயன் சகல துறைகளிலும் திறமைகளை வெளிக்காட்டியமைக்காக விசேட விருதை பொலிஸ் மா அதிபர் கலாநிதி மஹிந்த பாலசூரியவிடம் இருந்து பெற்றுக்கொள்கின்றார். அருகில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.கே.சங்கர் காணப்படுகின்றார்.

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு மின் இணைப்பில் சலுகை

கொழும்பு, ஜன. 18

சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் வருமானம் குறைந்தோருக்குப் புதிய மின்னிணைப்புக்கள் வழங்கப்படும்போது சலுகை முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

அவர்களுக்குச் செலவாகும் தொகையை அறுபது மாதத் தவணை முறையில் மின் கட்டணச் சிட்டைகள் மூலம் செலுத்தி முடிக்கத்தக்கதாக இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கொழும்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய புதிய மின்னிணைப்பு ஒன்று தொடர்பாகச் செலவாகும் தொகையில் முப்பதாயிரம் ரூபா வரையான கடன் தொகை ஒன்றை மின்பாவனையாளர் ஒருவருக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அந்தத் தொகையை அறுபது மாதங்களில் மின்கட்டணச் சிட்டை மூலம் அறவிட்டுக் கொள்ளும்போது மின்பாவனையாளரால் மாதம் ஒன்றில் செலுத்தப்படவேண்டி நேரும் தொகை அதிகபட்சமாக ஐந்நூறு ரூபாவாகும்.

சமுர்த்தித் திட்டம் மற்றும் சமுர்த்தி வங்கியின் ஒருங்கிணைவுடன் நடைமுறைப் படுத்தப்படும் இந்தச் செயற்திட்டத்தின் கீழ் இன்றைய அளவில் எழுபது லட்சங்கள் வரையில் 350 சமுர்த்திப் பயனாளிகளுக்குப் கடன் தொகைகளாக வழங்கப்பட்டுள்ளது.

அந்தச் செயற்றிட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அதன் முதற்கட்டமாக சமுர்த்திப் பயனாளிகளுக்கும் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும் கடன் தொகைகளாக வழங்குவதற்கு 25 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-22)

# அரச ஊழியர்கள் நாளொன்றுக்கு மூன்று மணிநேரமே பணியில்

கொழும்பு, ஜன. 18

அரச ஊழியரொருவர் நாளொன்றில் பணியாற்றும் நேரம் ஆக மூன்று மணித்தியாலங்களும் 20 நிமிடங்களுமே ஆகும் என்று ஜனாதிபதிச் செயலக ஆய்வறிக்கை ஒன்று வெளிப்படுத்தியுள்ளது.

நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் நிகழ்ந்த அரச அதிகாரிகள் சந்திப்பு ஒன்றில் வைத்து மாவட்டச் செயலாளரான டீ.ஜீ. குமாரசிறியே இந்தத் தகவலை வெளிப்படுத்தியிருந்தார்.


இவ்விதம் பணியாற்றியுள்ளதன் மூலமே ஐம்பதாண்டுகள் காலத்தில் எமது தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கு அரச உத்தியோகத்தர்கள் செயற்பட்டுள்ளனர் எனவும் எமது சேவையை மேலும் 40 நிமிடங்களால் அதிகரித்துக் கொள்வோமேயானால் 2016 ஆம் ஆண்டில் தனிநபர் வருமானத்தை 4000 அமெரிக்க டொலர்களாக அதிகரித்து எமது இலக்கை வெற்றி கொள்ள இயலும் எனவும் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பாகப் பொறுப்புடன் பணியாற்றுமாறும் உத்தியோகத்தர்களிடம் வேண்டுகோள் ஒன்றையும் அவர் விடுத்துள்ளார்.

(ம-22)

# முதலாமாண்டு நினைவஞ்சலி

## திருமதி விஜயரத்தினம் மகேஸ்வரி



ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தில்- வேண்டா!
நமக்கும் அதுவழியே! நாம்போம் அளவும்
எமக்கென்? என்(று) இட்டு, உண்டு, இரும்
-நல்வழி-



எம் ஆருயிர்த் தாயே! பாசமிகு அம்மம்மாவே!
எமை விட்டுப்பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்திட்டாலும்
உங்களைத் தேடுகின்றோம்... குரல் கேட்காது தவிக்கின்றோம்...
நாமனைவரும் பாசமாய்க் கூடி வாழ்ந்த கூட்டை விட்டு
எங்குதான் பறந்து சென்றீர்கள் விரைவாய்?

அன்னையே! எத்தனை கனவுகள் கண்களில் சுமந்து
நெஞ்சில் சுகமான பாரமாய் எமைத்தாங்கி வாழ்ந்தீர்கள்!
எம் வாழ்வின் முன்னேற்றத்தின் முதல்படியாய் இருந்து
முழுமுதற் தெய்வமாய் எமை வழிநடத்தினீர்கள்!
இமைப்பொழுதில் ஏனம்மா கண்மூடித் தூங்கினீர்கள்?

ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும் தாயே!
நிலவில்லா வானமாய் இருண்டு போனது எம் இல்லமது...
விழிகள் தேடுகின்றன உயிருக்குள் உறைந்த உங்களை!
கடந்தகால நினைவுகள் வாட்டுகின்றன எம் மனங்களை...

அன்னை மடியில்
28.04.1933

சிவன் அடியில்
28.01.2010

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...!

திதி: தைமாத பூர்வபக்க சதுர்த்தசி
(18.01.2011 செவ்வாய்க்கிழமை)

சரவணை மேற்கு,
வேலணை.

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(109267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## சங்குப்பிட்டி - கேரதீவுப் பாலம் திறப்பும் இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டமும்

கேரதீவுக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையில் அமைக்கப்பட்டுள்ள பாலத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகத் திறந்துவைத்து உரை நிகழ்த்தியுள்ள ஜானதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டு முக்கிய விடயங்களை தம் உரையில் தொட்டுக்காட்டியிருக்கிறார்.

ஒன்று, வடக்கு - கிழக்கின் அபிவிருத்தியில் தமது அரசுகொண்டிருக்கும் கரிசனை பற்றியது. உண்மையில் பார்த்தால் ஒரு பகுதி மக்களை ஏனைய பகுதிகளோடு இணைப்பதற்கும் பொருளாதார மற்றும் கலை கலாசார தொடர்புகள் விருத்தியடைவதற்கும் இவ்வாறான பாதைகளும் பாலங்களும் அவசியமாகின்றன. அந்த வகையில் வடக்குப் பகுதி மக்கள் தலைநகருக்கு செல்வதற்கான பாதை ஏ - 9 மட்டுமே கடந்த காலங்களில் புழக்கத்தில் இருந்து வந்துள்ளது. வசதி படைத்தவர்களுக்கு விமானப்போக்குவரத்து உதவியாக இருந்தது. முன்னொருகாலத்தில் கேரதீவு - சங்குபிட்டி பாதை கடல் மார்க்கமாகவே இடம்பெற்றதாக அறியப்படுகின்றது.

இப்பொழுது புதிதாக கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பாலம் அமைத்து தொடர்புகள் இணைக்கப்பட்டிருப்பது உண்மையில் மகிழ்ச்சிக்குரிய விடயமே. அதையே ஜனாதிபதியும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

வடபகுதியின் அபிவிருத்திக்கு பல்வேறு வகையிலும் இப்பாதை அமைப்பு உதவியாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஜனாதிபதி தொட்டுக்காட்டியுள்ள மற்றொருவிடயம் இனப்பிரச்சினை தொடர்பானது. எமது தேசத்தின் முக்கியபங்காளிகள் தமிழ் மக்கள். அவர்களைப் புறந்தள்ளிவைத்துவிட்டுத் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க மாட்டேன் - என்று குறிப்பிட்டுள்ளார் ஜனாதிபதி. மேலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் அவர் ஏற்கனவே பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்திருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இனப்பிரச்சினையானது நேற்று அல்லது நேற்றுமுன்தினம் ஆரம்பமானதொன்றல்ல. ஏன் முப்பது ஆண்டுகால ஆயுதப் போரின்போதும் அது உருவாக்கப்பட்டதன்று.

இந்தப் பத்திகளில் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளவிடயம் என்பதால் அதனை விரிவாக ஆராயத்தேவையில்லை. ஆனால் இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு பல்வேறு காலங்களிலும், பல்வேறு தரப்பினருக்கிடையிலும், நடைபெற்றுள்ள கலந்துரையாடல்கள், செய்துகொண்ட ஒப்பந்தங்கள் பற்றி மறந்துவிட முடியாது - மறைத்துவிடவும் முடியாது.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், சிறிமா - செல்வா இணக்கப்பாடு மற்றும் ஜே.ஆர் - ரஜீவ்காந்தி ஒப்பந்தம், ரணில் - பிரபாகரன் உடன்படிக்கை எல்லாம் இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கான எத்தனங்களே-

இந்த முயற்சிகள் எல்லாம் ஏன், எந்தவகையில், எந்த அடிப்படையில் தோல்வியைத் தழுவிக்கொண்டன என்பதெல்லாம் இந்த நாட்டு மக்களுக்கு, குறிப்பாக இனப் பிரச்சினை பற்றி ஆராய்பவர்களுக்கு அத்துப்படியானவை.

இருந்தாலும் அண்மைக்காலத்தில் அரச படைகளுக்கும் - தமிழீழவிடுதலைப்புலிகளுக்குமிடையில் நடந்து முடிந்த - இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட - அதைவிட ஆயிரம் ஆயிரம்பேரை அங்க வீனர்களாக்கிய - குடும்பங்களைப்பிரிந்தும், உறவுகளை இழந்தும் இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்கள் சொந்த இடங்களைவிட்டு உயிரைப் பிடித்துக்கொண்டு அகதிகளாய் ஓட வேண்டிய நிலைமையைத் தோற்றுவித்த போரின் பின்னராவது இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படவேண்டும் என்று இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதை இடித்துக் கூறாமல் இருக்க முடியாது.

ஜனாதிபதி ராஜபக்ஷ, ஏற்கனவே அரசமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் 13ஆம் திருத்தத்தின் அடிப்படையில் தீர்வொன்றை வழங்க தாம் விருப்பம் கொண்டிருப்பதாக அடிக்கடி கூறிவந்துள்ளார். அதற்கு அப்பாலும் - (மேலதிகமாக) தருவதற்கும் விருப்பம் கொண்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. அடுத்த கட்டம் தொடரவிருக்கின்றது. ஏனைய தமிழ் அமைப்புகளோடும் கலந்துரையாடல்கள் நடைபெற இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த வித பேச்சுக்களில் தமிழ்தரப்பினர் மத்தியில் கருத்தொற்றுமை இருப்பது அவசியம் என்பது ஒருபுறமிருக்க வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக இனப்பிரச்சினையில் கருத்தொற்றுமை சிதைந்து போகாமல் இருப்பது அவசியம்.

அதுவே அரசுடனான தீர்வுத் திட்டம் உருப்படியாக உருவாவதற்கு உதவியாக இருக்கும். தமிழர் தரப்பினர் ஒன்று பட்டு பேச்சுக்கு வருவதையே ஜனாதிபதியும் விரும்புவதாக முன்னர் கோடிகாட்டியிருந்தார்.

கேரதீவு - சங்குபிட்டி பாலம் அமைக்கப்பட்டமை வடபகுதியின் அபிவிருத்திக்கான நல்லதொரு அடையாளமாக அமையும் என்றால் தமிழர் தரப்பினருடன் ஜனாதிபதி ஆரம்பித்துள்ள பேச்சு வார்த்தைகளும் இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒரு நல்ல அடையாளமாக அமையவேண்டும்.

இவை நல்லபடியாக முன்னேறி இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு எட்டப்படவேண்டும். அது சகல மக்களுக்கும் ஏற்புடையதாக - தமிழ் மக்களின் நீண்ட நாள் அபிலாஷைகள் நிறைவேறுவதாக அமைய வேண்டும்.

பேச்சுக்களும் தீர்வுத்திட்டங்களும் கடந்த காலத்தில் எதிர்நோக்கிய தோல்வி நிலை இனிமேலும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது எல்லோரதும் பொறுப்பாகும்.

ஜனாதிபதி கூறியிருப்பதுபோல் இந்த நாட்டில் சகல மக்களும் ஒற்றுமையாக, ஒன்றுபட்டு சகோதரர்களாக வாழவும் இந்நாட்டை ஆசியாவின் ஆச்சரிய நாடாக மாற்றவும் இப்பிரச்சினைக்குக் காணப்படும் தீர்வே உறுதுணையாக இருக்கும்.

# செனட் சபை அமைப்பு ஜனாதிபதி சிந்திக்கிறார்

கொழும்பு, ஜன.18

மக்கள் பிரதிநிதிகள் சபையோடு செனட் சபையொன்றையும் செயற்படுத்தும் திட்டம் பற்றி ஜனாதிபதி ராஜபக்ஷ தொடர்ந்தும் சிந்தித்துவருகிறார்.

செனட் சபையை உருவாக்குவதில் இன்னமும் நீங்கள் ஆர்வம் கொண்டிருக்கிறீர்களா என்று வெளிநாட்டு நிருபர்கள் கேட்டபோது, நான் இன்னமும் அதைப் பற்றி யோசிக்கத்தான் செய்கின்றேன், இந்தக் கருத்து வடக்கிற்கும் தெற்கிற்கும் எடுத்துச் செல்லப்படவேண்டியிருக்கிறது என்று ஜனாதிபதி கூறினார். இருந்தபோதிலும் வேலுப்பிள்ளை பிரபாகரன் கேட்டதையோ அல்லது அவர் சார்பில் செயற்படுவோர்கள் கேட்பதையோ தாம் கொடுக்கத் தயாராய் இல்லையென்று ஜனாதிபதி கூறினார்.

வெளிநாடுகளுக்கு செய்தி வழங்கும் நிருபர்களுடனான காலை உணவு சந்திப்பின் போது இந்தக் கருத்துக்களை அவர் வெளியிட்டார்.

தேசிய கீதம் பற்றிய கேள்வியொன்றுக்கு அவர் பதிலளிக்கையில் தம்மைப் பொறுத்தவரை அதில் பிரச்சினை ஒன்றும் இல்லை என்றார். ஆனால் அதுபற்றி பேச விரும்பவில்லையென்று மேலும் கூறினார்.

இருந்த போதிலும் நிர்வாக மட்டத்தில் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே இசைக்கப்பட வேண்டும் என்று அரச அதிகாரிகளும் திணைக்களங்களும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகக் கொழும்புப் பத்திரிகையொன்று தெரிவித்திருக்கின்றது. சிங்களத்தில் தேசிய கீதத்தைப் பாடுவதற்கு வடக்கு - கிழக்கில் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (ப)

# 15 விவசாயிகளுக்கு ஜனாதிபதி கௌரவம்

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்.மாவட்ட விவசாயத்துறையின் அபிவிருத்திக்குப் பெரும்பங்களிப்பை வழங்கிய விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள் 15பேர் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பொன்னாடை வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜனாதிபதி சம்மேளனங்களின் தலைவர்களைப் பாராட்டி இந்தக் கௌரவத்தினை வழங்கினார்.

கமநலசேவைகள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் சிபார்சுக்கு அமைய இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கௌரவிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு -

எஸ்.சண்முகசுந்தரம் (சாவகச்சேரி), ரி.தங்கவேலு (கைதடி), ஆ.ஸ்ரீஸ்கந்தராசா (நல்லூர்), பி.தவபாலன் (வேலணை), கே.ஸ்ரீஸ்கந்தராஜா (புங்குடுதீவு), என்.தயாளலிங்கம் (தொல்புரம்), என்.கமலநாதன் (கீரிமலை), எஸ்.பத்மநாதன் (புத்தூர்), என்.சிவசுந்தரலிங்கம் (உரும்பிராய்), கே.தியாகலிங்கம் (உடுவில்), பி.சிவராசரட்ணம் (சண்டிலிப்பாய்). (த)

## மீன்பிடித் துறைமுக புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

பாஷையூர் கடற்றொழில் துறைமுகப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பின் நிதியுதவியுடன் இந்தப் புனரமைப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புனரமைப்பின் ஆரம்ப செயற்பாடாக பாஷையூர் கடற்கரைப் பகுதியில் கருங்கற் பாறைகள் வவுனியாவிலிருந்து வாகனங்களில் எடுத்துவரப்பட்டு குவிக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக இந்த மீன்பிடித்துறைமுகப்பாதுகாப்பு அணைகள் புனரமைக்கப்படாமையால் அப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் வள்ளங்களை நிறுத்தி வைப்பதில் பல சிரமங்களையும் பாதுகாப்பற்ற நிலைமைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். (த-135)

## ஒப்பந்தகாரர்களுக்கான விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கட்டட நிர்மாணப் பணிகள் மற்றும் திருத்த வேலைகளில் ஈடுபட்டுள்ள கட்டட ஒப்பந்தகாரர்கள், பாடசாலை அபிவிருத்தித்திட்டப் பிரதிநிதிகள் ஆகியோருக்கான விசேட கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகள் வேலைப் பகுதிப் பொறியியலாளர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் ஒப்பந்தகாரர்கள், பாடசாலை அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# தமிழீழ விடுதலைப் புலிகளின் 5 கப்பல்கள் தொடர்பாக தகவல்

## அரசுக்கு கிடைத்துள்ளதாம்

கொழும்பு,ஜன 18

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐந்து கப்பல்கள் தொடர்பான தகவல்களை சிங்கள ஊடகமொன்று வெளியிட்டுள்ளது.

புலிகளுக்குச் சொந்தமான எட்டு கப்பல்கள் தொடர்பான விசாரணைகளில் இந்த ஐந்து கப்பல்கள் தொடர்பான மேலதிகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக அரசு அறிவித்துள்ளது.

புலிகளின் ஐந்து கப்பல்கள் பழுதடைந்துள்ளதாகவும் அவற்றை பழுது பார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நீர் வடிகாலமைப்புத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த கப்பல்களின் நிறத்தையும், பெயரையும் மாற்றிப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கப்பல்களைக் கைப்பற்றி இலங்கைக்கு கொண்டு வரும் வகையில் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகசும் அவர் தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாடு முழுவதும் நேற்று அரச பஸ்சேவை பாதிப்பு

## பயணிகள் அந்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்.துரையப்பா விளையாட்ரங்கில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வுக்கு டிக்களை ஏற்றி, இறக்குவதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளும் தனியார் பஸ்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதால் அன்றாட தேவைகளுக்காக மக்கள் செல்வதற்கு மிக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தின் அனைத்து மார்க்கங்களிலும் இ.போ.ச பஸ்களும் தனியார் பஸ்களும் மிக நீண்டநேர இடைவெளியிலேயே நேற்றுச் சேவையில் ஈடுபட்டுள்ளன. இதனால் சேவையில் ஈடுபட்ட ஒரு சில பேருந்துகளும் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றியபடியே சேவையில் ஈடுபட்டன.

இதனால் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், வைத்தியசாலைக்குச்செல்ல வேண்டிய பொது மக்கள் என எல்லோரும் மிக நீண்டநேரம் வீதிகளில் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. குடாநாட்டின் சகல மார்க்கங்களிலும் இதே நிலைமையே காணப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது சேவைகளை நிறை வேற்றிக் கொள்வதற்காக போக்குவரத்தை நாடி நேற்று யாழ். பஸ் நிலையத்தில் குழுமியிருந்தனர். பேருந்து சேவைகள் திடீரென மாற்றப்பட்டு நிறுத்தப்பட்டி ருந்தமையால் இவர்கள் தமது கடமைகளுக்குச் செல்ல முடியாது பலத்த நெருக்கடிநிலைகளை எதிர்கொண்டனர்.

இந்த விடயங்கள் தொடர்பாக பஸ் நிலைய உத்தியோகத்தர்களிடம் கேட்டபோது ஜனாதிபதி தலைமையில் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் பொங்கல் விழாவுக்கு மக்களை ஏற்றிச் செல்ல வேண்டியுள்ளதால் சகல பிரதேசங்களுக்கும் பஸ்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதனால் பயணிகள் சேவையில் ஈடுபட போதிய பஸ்கள் இல்லை - என்றனர்.

இதேவேளை பொதுமக்கள் பலர் துரையப்பா விளையாட்டரங்குக்கு கொண்டு சேருமிடத்தில் வீடுகளுக்குச் சென்று "நாளை துரையப்பா விளையாட்டரங்கில் போட்டி வைத்துப் பரிசில்கள் வழங்க இருக்கிறோம்; பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் வரவேண்டும் என்று சொல்லி "டோக்கன்" வழங்கிச்சென்றதாகவும் கூறப்பட்டது. (த-15-7)

# 30 ஆண்டுகளாக திருத்தப்படாத வீதி

மந்திகை,ஜன.18

மந்திகை, வில்லிபாதி முருகன் கோயில் வீதியும் அதனோடு இணைந்த குறுக்குவீதி, தவசிக் கிணற்றடி வீதி என்பன கடந்த முப்பது ஆண்டுகளாகப் புனரமைக் கப்படாத நிலையில் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இந்த வீதிகளை மாணவர்கள், நோயாளிகள், பொதுமக்கள் எனப் பலரும் போக்குவரத்துக்குப் பயன்படுத்துகின்றனர். மழை காலங்களில் மேற்படி வீதியால் பயணிக்கும் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இந்தவீதிகளை புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதிப் பொது மக்கள் மற்றும் அறிவகம் சன சமூக நிலையத்தினர், பிரதேச சபை ஆகியன, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை வீதி புனரமைக்கப்படவில்லை என மக்கள்தெரிவிக்கின்றனர். (201-237)

# கைதடி சனசமூக நிலையத்தில் படைமுகாம்

நாவற்குழி, ஜன.18

கைதடி மத்திகுமரன் நகர் உதயசூரியன் சன சமூக நிலையத்தில் படை யினர் மீண்டும் நிலை கொண்டுள்ளனர்.

இப் பிரதேசத்தில் மிக அண்மையில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்தே மீண்டும் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

சிறுகுழுக்களாக இணைந்து கால்நடையாகவும் சைக்கிளிலும் இரா ணுவ வீரர்கள் பகல், இரவு வேளைகளில் ரோந்து நட வடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை இரவு வேளைகளில் விழிப்புக் குழுக்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

(201-121)

# பொலிஸார் - பொதுமக்கள் நட்புறவுக் கலந்துரையாடல்

கொடிகாமம், ஜன.18

பொலிஸார்- பொதுமக்கள் நட்புறவுக் கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கள்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது.

கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெகத் பண்டார தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு யாழ் பாணம்சிரேஷ்ட உதவிப்பொலிஸ் அதிகாரி ஜெயலத் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்வில் வரவேற்புரையைக் கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிகழ்த்தினார். மாவட்டத்தில் இடம் பெறும் குற்றச்செயல்கள் தொடர்பாகவும் அவற்றைத் தடுப்பதற்குப் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், அவற்றில் பொலிசாருக்கு பொதுமக்கள் வழங்கும் பங்களிப்பு மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பான தண்டனைக் கோவை என்பன தொடர்பாக விளக்கமளித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுவினர், பொதுமக்கள், கிராம அலுவலர்கள், தனியார் சிற்றூர் திச் சேவையாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (201-122)

# மண்டைதீவுக்கு வைத்தியசாலை அமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 18

மண்டைதீவுப் பகுதியில் தற்போது மீளக்குடியமர்ந்த மக்கள் தற்காலிகமாக ஒரு வைத்திய சாலையை அமைத் துத் தருமாறு யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 30 வருடங்களாக இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் தங்கியிருந்த மண்டைதீவு மக்கள் தற்போது அங்கு மீள் குடியமர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் அங்குள்ள வைத்தியசாலை இதுவரைக் கும் புனரமைக்கப்படாதிருப்பதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

மீளக்குடியமர்ந்த தமது பகுதியில் வைத்திய வசதிகள் இது வரைக்கும் ஏற்படுத்தப்படாததால் மிகச்சிறிய காயத்துக்குக் கூட மருந்துபோட யாழ்ப் பாணம் வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தற்காலிகமாக ஒரு வீட்டை எடுத்து வாரத்தில் இரண்டு நாள்கள் வைத்திய அதிகாரி வந்து சிகிச்சை அளிக்கக்கூடியதாக ஏற்பாடு செய்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-7)

# வரணியில் வர்த்தக நிலைய கட்டடங்கள் புனரமைப்பு

கொடிகாமம், ஜன.18

சாவகச்சேரி பிரதேசசபைக்குச் சொந்தமான வரணி பொதுச் சந்தையில் உள்ள இரு வர்த்தக நிலையக் கட்டடங்கள் மேற்படி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளன.

இரு வர்த்தக நிலையங்களும் கடந்த கால யுத்தத்தால் சேதமாகியிருந்தன.

மேற்படி கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படாததால் வர்த்தக நடவடிக்கை மேற்கொள்வதில் உரிமையாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். (201-122)

# யாழ்.பல்கலை மாணவர் சேகரித்த பொருள்கள் கிழக்கு மக்களிடம் பகிர்வு

யாழ்பாணம்,ஜன.18

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் குடாநாட்டில் சேகரித்த அத்தியாவசிய உதவிப் பொருள்களை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் அங்கு பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்துக் கையளித்தனர்.

கிழக்குப்பகுதியில் வெள்ளத்தில் சிக்கி பேரிடரைச் சந்தித்திருக்கும் மக்களுக்கு உதவும் பொருட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட 35லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இங்கிருந்து 3 லொறிகளில் எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த உதவிப் பொருள்களை 30பேர்கொண்ட மாணவர் குழு மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட விளான் தோட்டம், அரசடித்தீவு, பன்குடாவெளி, பண்டாரிவெளி, மகிழந்தீவு ஆகிய பகுதிகளுக்குச்சென்று மக்களை நேரில் சந்தித்துக் கையளித்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் சி.சிறிரங்கன் கடந்த சனிக்கிழமை உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை அம்பாறை மாவட்டம் மற்றும் ஏனைய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு உதவும் பொருட்டு இரண்டாம் கட்டமாகவும் உதவிப்பொருள்கள் சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். (ஒ-9)

## ஆண்டு நிறைவு விழா...



ஆரம்பம்: கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டுவிழா அண்மையில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வேள்ட் விசன் லங்கா நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் த.மொ.வசந்த நாயகம் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் விருந்தினர்கள் நிற்கின்றனர்.

# மானிப்பாய் மைதானத்தை விருத்தி செய்யக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜன.18

கால்நடைகளின் தங்குமிடமாக மாறியுள்ள மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள கலையரங்கையும் விளையாட்டு மைதானத்தையும் மக்களின் பாவனைக்கு ஏற்ற வாறு நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்து தரவேண்டும்.

வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமாரிடம் மக்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம், பிரதேச கலாசார மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் எம்.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் மேற்படி பிரதேசத்திலுள்ள பொது அமைப்புகள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக்கூறினர்.

பல வருடங்களுக்கு முன்பு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு அரங்கின் ஒரு பக்கமாக, பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கலையரங்கில் கடந்த காலங்களில் கலை நிகழ்சிகள் நடைபெற்று வந்தன.

இந்த அரங்கிற்கு போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் வாகனங்கள் தரிக்கக் கூடிய வசதி அமைந்துள்ளது. மக்களின் பொழுது போக்குக்காகத் தொடர்ச்சியாகக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்த இந்தக் கலையரங்கு தற்பொழுது பாவிக்க முடியாதவாறு, தேடுவாரற்ற நிலையில் காட்சியளிக்கின்றது. அத்துடன் கால்நடைகள் தங்கும் கொட்டகையாகவும் மாறியுள்ளது.

எனவே இந்தக் கலையரங்கைப் பயன்படுத்தக் கூடியவாறு நவீனமான முறையில் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை பல கிராமங்களைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களின் பல்வேறு விளையாட்டுகள் இடம் பெற்று வந்த செல்லமுத்து மைதானமும் திறந்தவெளி அரங்கு போல் காட்சியளிப்பதுடன் மைதானத்தின் ஊடாக போக்குவரத்தும் இடம் பெற்று வருகின்றது.

குடாநாட்டிலுள்ள பெரிய விளையாட்டு மைதானங்களில் ஒன்றான செல்லமுத்து விளையாட்டு மைதானத்தை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு போல் சகலவசதிகளுடன் அபிவிருத்தி செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (201-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்தியா வழங்கிய டிராக்டர்களை ஜனாதிபதி நேற்றுக் கையளித்தார்

யாழ்ப்பாணம், ஜன.18

இலங்கை அரசுக்கு இந்தியா வழங்கிய டிராக்டர்களில் யாழ். மாவட்டத்துக்கான டிராக்டர்களை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ நேற்று கமநலசேவைகள் திணைக்களத்தின் யாழ். மாட்ட உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சனிடம் கையளித்தார்.

நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த அங்கு வைத்து இந்த டிராக்டர்களைக் கையளித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத் துக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இந்திய அரசின் இந்த டிராக்டர்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் வைபவ ரீதியாகக் கையளித்திருந்தார். எனினும் அவை இதுவரை கமநலசேவைத் திணைக்களத்திடம் கையளிக்கப்படாமல் இருந்தன. இந்த நிலையில் நேற்று அவை கமநலசேவைத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்திடம் ஜனாதிபதியால் கையளிக்கப்பட்டன. 41 டிராக்டர்கள் வழங்கப்பட்டன. அவற்றின் மொத்தப்பெறுமதி 49.2 மில்லியன் ரூபாய்களாகும்.



டிராக்டர் ஒன்றை வழங்கிய பின்னர் ஜனாதிபதியும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரும் அதனைப் பரிசீலிக்கின்றனர்.

கமநலசேவைத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள இந்த டிராக்டர்கள் கமநல சேவை நிலையங்கள், விவசாய சம்மேளனங்கள் ஊடாக யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் பயன்பாட்டுக்காக வழங்கப்படும். விவசாயிகள் தமது சம்மேளனங்கள் ஊடாக ஏற்கனவே நடைமுறையில் உள்ள வாறு இந்த டிராக்டர்களை தமது விவசாய நடவடிக்கைகளுக்குப் பெற்றுப்பயன் படுத்த முடியும். அதற்கென அவர்களிடம் இருந்து டிராக்டருக்கான எரிபொருள் செலவு பெற்றுக்கொள் ளப்படும் என உதவி ஆணையா ளர் பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

தற்போது கிடைத்துள்ள டிராக்டர்கள் மூலம் யாழ். மாவட்ட விவசாயிகளின் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்ட விவசாயத்துறையில் மேலும் அபிவிருத்தியையும் வளர்ச்சியையும் ஏற்படுத்த முடியும்.

இதற்கு விவசாயிகளும் எமக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும். வழங்கப்பட்டுள்ள டிராக்டர்களை சிறந்த முறையில் பராமரிப்ப தன் மூலம் அவற்றை கூடிய காலம் பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

(த-9)

## வேம்பிராயில் பயணிகள் பஸ்தரிப்பிடம்

கொடிகாமம், ஜன.18

வரணி-வேம்பிராய் வீதியில் இயற்றாலை அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு அருகாமையில் பயணிகளின் நன்மை கருதி புதிய பஸ்தரிப்பு நிலையம் அமைக்கப்பட் டுள்ளது.

தாவளை, இயற்றாலையைச் சேர்ந்தவரும் தற்சமயம் சுவிற்சர்லாந்தில் வசித்து வருபவருமான எஸ்.நாகநாதன் வழங்கிய நிதியுதவியுடன் மேற்படி தரிப்பிடம் அமைக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இவர் மேற்படி பாடசாலைக்கு 400 அடி சுற்றுமதில், பாடசாலை நுழைவாயில் மற்றும் இரும்புக்கதவு என்பவற்றையும் அமைத்துக் கொடுத்துள்ளார். (201-122)

## பொங்கல் 'தாத்தா'க்கள் வீதி உலா

யாழ்ப்பாணம், ஜன.18

தைப்பொங்கலை முன்னிட்டு அதற்கு முதல் நாள் வெள்ளிக்கிழமை மாலை வேளையில் அச்சுவேலிப் பகுதிகளில் 'பொங்கல் தாத்தா'க்கள் பலர் வீதியில் உலா வந்தனர்!

இளைஞர்கள் சிலர் 'பொங்கல் தாத்தா' வேடம் தரித்து ஆடிப்பாடி குதூகலித்து வீதியுலா வந்ததைக் காணமுடிந்தது.

இவர்களைக் கண்டு திரண்ட சிலர் அன்பளிப்புக்களை வழங்கி மகிழ்ந்தனர். இன்னும் சிலர் ஏதோ முணுமுணுத்தவாறு விலகிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்து மக்களின் பாரம்பரியமான பொங்கல் பண்டிகையை தரம் தாழ்த்தி இழிவு படுத்தும் செயல் இது என்று ஒரு சாரார் விமர்சித்தனர். (ஓ-14)

# விரைவில் இயல்பு நிலை திரும்பும்

**தளபதி ஹத்துருசிங்க நம்பிக்கை**

யாழ்ப்பாணம், ஜன.18

நீதித்துறை, கல்வித்துறை சார்ந்தவர்களிமிருந்து பெற்றுக் கொண்ட ஆலோசனைகள் மற்றும் தகவல்களின் பிரகாரம் யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம் என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட சிவில் இராணுவ ஒருங்கிணைப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட தைப் பொங்கல் கலாசார நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:



ஆனையிறவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தைப் பொங்கல் விழாவை கொண்டியுள்ளோம். ஒன்பது ஆயிரம் மக்களுக்கு சக்கரைப் பொங்கல் பிரசாதம் வாங்கியிருந்தோம்.

பாடசலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டிகளை நடத்தி இளம் சமூகத்தினரின் எதிர்கால சிந்தனை பற்றி நாம் அறிந்திருக்கிறோம்.

யாழ். குடாநாட்டு மக்கள் மனங்களில் காணப்படும் நிலைப்பாடுகளையும் அறிந்திருக்கிறோம்.

இதேவேளை - நீதித்துறை சார்ந்தவர்களதும் கல்வித் துறை சார்ந்தவர்களதும் ஆலோசனைகளைக் கேட்டிருக்கிறோம்.

எனவே அவர்கள் வழங்கிய தகவல்களின் பிரகாரம் யாழ். குடாநாட்டு மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

அதற்காக மக்கள் தொடர்புகளை விரிவுபடுத்தவும் உள்ளோம். -என்றார்.

இந்த நிகழ்வின் போது தமிழ் - சிங்கள மக்களது கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க 'சமாதானப் மலர்' என்ற நூலையும் வெளி யிட்டு வைத்தார். அத்துடன் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி யீட்டியவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (201-14)

## 'செவ்வானம்' வெளிவந்தது

வண்ணை,ஜன.18

குருநகர் சென்.ஜேம்ஸ் கல்விக்கழகத்தால் இலவசமாக வெளியிடப்படும் 'செவ்வானம்' கல்வி, கலை, கலாசார காலாண்டு இதழ் வெளிவந்துள்ளது. இதழில் கதை, கவிதை, கட்டுரை அம்சங்கள் வழமை போல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (201-100)

# ஜன்னலை உடைத்து உள்ளே சென்று கத்தி முனையில் நகைகள் அபகரிப்பு

கொழும்புத்துறை, ஜன.18

அரியாலை ஆனந்தன் வடலி வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த தைப்பொங்கல் தினத்தன்று அதிகாலை 1.30 மணியளவில் வீட்டின் ஜன்னலை உடைத்து உள்சென்று தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

சுமார் 8 லட்சம் பெறுமதியான 22 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்ட கொள்ளையர்கள் அங்கிருந்த இளைஞருக்குக் கத்தியால் குத்திக்காயம் விளைவித்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது-

வீட்டிலுள்ளோர் உறக்கத்தில் இருந்த வேளை அதிகாலையின் பக்க ஜன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அறைக் கதவை திறந்து நகைகளைக் களவாடிய பின்னர் மேலும் தேடுதலில் ஈடுபட்டபோது சத்தம் போட்டு எழுந்த இளைஞர் இருவரைப் பிடிக்க முற்பட்டபோது கத்தியால் குத்தி காயப்படுத்தி விட்டுத்தங்க நகைகளுடன் தப்பிச் சென்றுள்ளனர்.

திருடரைப் பிடிக்க முற்பட்ட செலான் வங்கி ஊழியரான கோ. கோபிநாத் (வயது-29) என்பவருக்கு கழுத்திலும் கையிலும் காயம் ஏற்பட்டுள்ளது. இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இது தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டனர்.

# பண்ணை முதல் ஊர்காவற்றுறை வரை பாதுகாப்புப் பணி இராணுவத்திடம்

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்.பண்ணையில் இருந்து ஊர்காவற்றுறை வரையான பிரதேசத்தின் பாதுகாப்பை இராணுவத்தினர் பொறுப்பேற்றுள்ளனர் என்று பலாலி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

எனினும் கடற்படையினரும் குறைந்த எண்ணிக்கையில் பணிபுரிவர் என்றும் கடற்படையினரின் முழுப் பாதுகாப்பில் காரைநகர் இருக்கும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத் தலைமையகத்தில் இருந்து கிடைத்த உத்தரவின் பிரகாரம் பண்ணை முதல் ஊர்காவற்றுறை வரையான பிரதேசத்தில் பாதுகாப்பை இராணுவத்தினர் பொறுப்பேற்றுள்ளனர் என்றும் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது.

காரைநகர், நெடுந்தீவு ஆகிய இடங்களில் கடற்படையினரே தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைர விழாக்காணும் வித்தியானந்தக் கல்லூரி

வன்னிப் பெருநிலப்பரப்பில் கல்விக் கலங்கரை விளக்கமாகத் திகழும் மு/வித்தியானந்தக் கல்லூரியானது தனது கல்விச்சேவை வரலாற்றில் 60 ஆம் ஆண்டுகளை நிறைவு செய்து நேற்று வைரவிழா ஆண்டில் காலடி பதித்தது.

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன் 17.01.1951 இல் அன்றைய வன்னிப் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான பேராசிரியர் செ.சுந்தரலிங்கம் அவர்களிடம் மக்கள் முன்வைத்த வேண்டுகோளுக்கு அமைய உருவாக்கப்பட்டதே வித்தியானந்தக் கல்லூரி ஆகும்.

1951 ஆம் ஆண்டுக்கு முன்பு ஆங்கிலக் கல்வியைப் புகட்டக்கூடிய எந்தவொரு கல்வி நிறுவனமும் முல்லை மாவட்டத்தில் இருக்கவில்லை. அதே வேளை தமிழ்மொழி மூலம் எஸ்.எஸ்.சி. வகுப்பு வரை கற்பிக்கும் பாடசாலைகள் மூன்று இருந்தன. எனினும் 1948 இல் அரசு கொண்டு வந்த சட்ட திட்டங்களுக்கேற்ப மேற்படி பாடசாலைகளிலும் எஸ்.எஸ்.சி. தமிழ்மொழி மூலம் வகுப்புக்களை நடத்த முடியாதநிலை ஏற்பட்டது. இந்தவகையில் 1948 இல் இடைநிலைக் கல்வியைத் தமிழ்மொழி மூலமோ ஆங்கிலமொழி மூலமோ பெறக் கூடிய எந்தவொரு கல்வி நிறுவனமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கவில்லை. இதனால் வசதி படைத்த பெற்றோர் சிலர் தமது பிள்ளைகளை யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு அனுப்பி கல்வியைத் தொடர ஏனையோர் கல்வியைத் தொடர முடியாமல் இடையில் நிறுத்திக் கொண் டனர். இதேவேளை வவுனியா நகரில் 1931 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இரு மொழிப் பாடசாலை 1948 இல் கனிஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு எஸ்.எஸ்.சி. வகுப்புக்களை ஆங்கில மொழியில் நடத்த ஆரம்பித்தது. இப்பாடசாலை வவுனியாவில் இன்றுள்ள புகழ் பெற்ற பாடசாலையான வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயமாகும்.

இந்தவகையில் ஆங்கிலம் கற்றவர்களுக்குத்தான் உயர் கல்வி, அவர்களுக்குத்தான் நல்ல அரச உத்தியோகமும் மதிப்பும் என்ற நிலை காணப்பட்ட காலத்தில் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் முல்லை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட கல்லூரியே மு/வித்தியானந்தக் கல்லூரி ஆகும்.

சுந்தரலிங்கம் அவர்களது முன் முயற்சியினால் திராவிடக் கட்டடக் கலை அம்சங்களுடன் கூடிய நாற்சாரக் கட்டடமாக வித்தியானந்தா கட்டி முடிக்கப்பட்டது. கட்டடம் பூரணமாக்கப்படுவதற்கு முன்னரே கிழக்கிலும் மேற்கிலும் 10 வகுப்பறைகள் அடங்கிய

**வன்னிப் பெருநிலப்பரப்பில்**
**கல்விக் கலங்கரை**
**விளக்காய்த் திகழும்.**
**முள்ளியவளை**
**வித்தியானந்தாக் கல்லூரி**
**நேற்றைய தினம் வைர விழா**
**ஆண்டில் காலடி**
**பதித்ததையிட்டு இக்கட்டுரை**
**பிரசுரமாகின்றது.**

வகுப்பறைத் தொகுதியுடன் 17.01.1951 ஆம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 3 உதவி ஆசிரியர்களுடனும் 235 மாணவர்களுடனும் பாடசாலை ஆரம்பமானது. இதன் முதலாவது அதிபராகக் கடமையாற்றியவர் ஏ.எவ்.கே. ஞானப்பிரகாசம் ஆவார். தியாகராசா ஆசிரியர் உப அதிபராய்க் கடமையாற்றினார். 1952 ஆம் ஆண்டு இறுதியில் நிர்வாகக் கட்டடம் உட்பட நாற்சாரக் கட்டடம் பூர்த்தியடைந்தது. விளையாட்டு மைதானம் திருத்தப்பட்டது. அதிபர் விடுதியும் கட்டிமுடிக்கப்பட்டு பாடசாலை முழுமையான வசதியுடன் இயங்கத் தொடங்கியது. விளையாட்டுத்துறை, சாரணர் இயக்கம் என்பனவும் தோன்றி வளர்ந்தன. 01.01.1953 இல் முள்ளியவளை கனிஷ்ட பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு 01.06.1954 இல் வித்தியானந்தக் கல்லூரி முள்ளியவளை எனப் பெயர் மாற்றப்பட்டது.

பாடசாலை ஆரம்பித்த காலத்திலேயே நூல்நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் கல்லூரியில் தொழிற்கூடம் ஒன்று கட்டப்பட்டு அதன் திறப்புக்கள் 20.03.1956 இல் அதிபரிடம் கையளிக்கப்பட்டன. பாடசாலையின் சம்பிரதாயத் திறப்பு விழா நிகழ்வொன்று நாடாளுமன்ற உறுப்பினர் சுந்தரலிங்கம் தலைமையில் 27.03.1954 இல் நடைபெற்றது. இதில் முன்னாள் கல்வி அமைச்சரான ஈ.ஏ.நுகவெல நாடாவெட்டிப் பாடசாலைக் கட்டடத்தைத் திறந்து வைத்து வித்தியானந்தக் கல்லூரி என்ற பெயரையும் சூட்டினார். இது அக்காலக் கல்வி அமைச்சர் எம்.டி. பண்டா அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் கல்லூரியில் உயர்தர கலைப்பிரிவு வகுப்புக்களை நடத்துவதற்கான அனுமதி 23.12.1952 இல் வழங்கப்பட்டது. இங்கு விஞ்ஞானப் பாடங்களின் போதனை விஞ்ஞான ஆசிரியர் திரு.ரி.சின்னத்தம்பி, விவசாய ஆசிரியர் திரு.சி.இரத்தினபாலசிங்கம் ஆகியோர் கடமையேற்ற பின்னரே ஆரம்பமானது. 1975 இல் க.பொ.த. உயர்தரத்திலும் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

கல்லூரியின் அதிபர் சேவையிலே ஞானப்பிரகாசரைத் தொடர்ந்து திரு. எம்.லாம்ப் கடமையாற்றினார். இவரது காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் ஏற்பட்டதாய்த் தெரியவில்லை. அதன்பின் வி.சோமசுந்தரம், ஏ.மார்க் கண்டு, திரு. அ.க.மகாலிங்கம், திரு. சி. இராசநாயகம், திரு.வி.பொன்னம்பலம், திரு.நா.வேலுப்பிள்ளை, திரு.மு.சிவானந்தம், திரு.சி.கனகையன், பாலசிங்கம், தங்கராசா, திருஞானம், கணேஸ், எனக் காலத்துக்குக் காலம் பல ஆற்றல் வாய்ந்த அதிபர்களது சேவையால் நிமிர்ந்து பயணித்த எம் கல்லூரி போர்க் காலத்தில் திரு. கணேஷ் அவர்களது வழிப்படுத்தலிலும் போரின் இறுதிக் காலத்திலும், போருக்கு பிந்திய தற்காலத்திலும் திரு. கே.பி.சிவலிங்கம் அவர்களது அர்ப்பணிப்பு, மிகுதூர நோக்கு சிந்தனையுடனும் சிறப்பான முறையில் வழிநடத்தப்பட்டு வருகின்றது. இப்பாடசாலையில் கல்விப் பயணத்தை ஆயிரக்கணக்கில் மாணவர் மீண்டும் தொடர்கின்றனர். நாடறிந்த பொதுவுடைமைச் சிந்தனை வாதியாகவும், அரசியல் வாதியாகவும் விளங்கிய வி.பொன்னம்பலம் அவர்களது காலத்தையும் நாம் நினைவிற்கொள்ளவேண்டும். இவரது காலத்தில்தான் விஞ்ஞான ஆய்வு கூடம், நூல்நிலைய அறை, ஆசிரியர் விடுதி, ஒரு வகுப்பறைக் கட்டடம் (இன்றைய தியாகராசா மண்டபம்) என்பன கட்டி முடிக்கப்பட்டன. அத்துடன் வித்தியாதீபம் என்ற பெயரில் பாடசாலைச் சஞ்சிகை தமிழ் இலக்கிய மன்ற வெளியீடாக வெளியிடப்பட்டது. இதே

**வேல் நந்தகுமார்**
**ஆசிரியர்**

போலக் கனகையன் அவர்களது காலத்தில் தான் உயர்தர விஞ்ஞானக் கல்விப் பிரிவு, உயர்தரமாணவர் ஒன்றியம் என்பன ஆரம்பிக்கப்பட்டதுடன் கல்லூரி வெள்ளி விழாவையும் கொண்டாடியது.

போரின் போது அழிவைச் சந்தித்த போதும் சாம்பல்மேட்டில் இருந்து உயிர் தெழும் பீனிக்ஸ் பறவைபோல நிமிர்ந்து நிற்கும் இக்கல்லூரி நூற்றாண்டு விழாக் காண வேண்டும் என்பதே முல்லைத் தீவு மாவட்டக் கல்வியியலாளர்களின் வேண்டுதல் ஆகும்.

# ஒலுமடு அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள்

முல்லைத்தீவு,ஜன.18

நல்லொழுக்க முன்னேற்ற நிறுவனத்தினால் ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு பாடசாலைப் புத்தகப்பைகள், சப்பாத்துக்கள், கற்றல் உபகரணங்கள் என்பன இராணுவத்தினரின் அனுசரணையுடன் வழங்கப்பட்டன. இதனால் வறிய நிலையிலுள்ள பாடசாலை மாணவர்கள் பெரிதும் பயனடைந்ததோடு பெற்றோர்கள் நன்றியும் தெரிவித்துள்ளனர். (க-500)

## மரண அறிவித்தல்

## மாணிக்கம் சிவஞானசுந்தரம்



*( இளைப்பாறிய நில அளவையாளரும் சமாதான நீதிவானும்)*

பருத்தித்துறை, புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, இடைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிவஞானசுந்தரம் 14.01.2011 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் செல்லபாக்கியம் (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/ இடைக்காடு ம.வி.) அவர்களின் அன்புக் கணவரும் லோஜினி (கனடா), கஜனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானசேகரன் (கனடா), கனகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் சின்னையா - பரமேஸ்வரி (லண்டன்), கனகராஜா - மகேஸ்வரி (லண்டன்), பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் (தலைவர், நிதி முகாமைத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), மா.செல்வானந்த ராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னையா (லண்டன்), கனகராஜா (லண்டன்), காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் விஜயலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் புஸ்பராணி (கனடா), தங்கவேல் (லண்டன்), ஜெயராணி (லண்டன்), மலர்ராணி (லண்டன்), இன்பராணி(லண்டன்), ராதா (நியூஸ்லாந்து), கீத்தா (லண்டன்), முரளி (லண்டன்), கண்ணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாய் மாமனும் தமயந்தி (வர்த்தக வங்கி, நெல்லியடி), மயூரன் (பொறியியலாளர், சேவா - லங்கா வவுனியா), நிரூபா (கனடா), பிரணவன் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும் சகானா, சாயி அக்ஷனா (கனடா) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடைக்காட்டிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் சாமித்திடல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


"துவாரகை",
இடைக்காடு, அச்சுவேலி.
0213214308

தகவல்:
செல்லபாக்கியம்
(மனைவி)

(109395)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்





அமரர் பிரம்மஸ்ரீ
**கனகசபாபதிக் குருக்கள் இரகுநாதக்குருக்கள்**
(விசுவமடு அதிசய விநாயகர் ஆலயப் பிரதமகுரு)

அமரர் பிரம்மஸ்ரீ
**இரகுநாதக்குருக்கள் கேசவசர்மன்**
(முழங்காவில் கிருஷ்ணர் ஆலயப் பிரதமகுரு)

திதி: 18.01.2011 செவ்வாய்க்கிழமை

நேர்மையின் சின்னமாய், ஒழுக்கத்தின் சிகரமாய்
கண்ணியமிக்க கணவராய், பாசமுள்ள தந்தையாய்
தாயைப்பிரியாத தனயனாய்- வாழ்ந்த உம்மை
காலன் தான் பிரித்தானோ? உம் துணைக்குத்
தனயனையும் அழைத்தீரோ?- உம் இழப்பு
ஆண்டாண்டு சென்றாலும் எம்மை வாட்டுதையா!

முரசுமோட்டை,
பரந்தன்.

**குடும்பத்தினர்.**

(109074)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்குமிட வசதியின்மையால் ஒலுமடு மாணவர் கல்வி வீழ்ச்சி

முல்லைத்தீவு, ஜன.18

எமது பாடசாலைக்கான வளங்கள் இருந்தபோதிலும் ஆசிரியர் தங்குமிடவசதி, மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் என்பன இல்லாமையால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகிறது என ஒலுமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் நற்குணம் சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், எமது ஒலுமடு பாடசாலையில் 225 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 14 ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். தரம் ஒன்று முதல் க.பொ.த.சாதாரண தரம் வரை உள்ள இப்பாடசாலைக்கு கட்டடப்பற்றாக்குறை நிலவி வருகிறது. குறுகிய இடத்திலே கற்பித்தலில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தப்படாது எமக்குக் கிட்டாது போயுள்ளது. இதனாலேயே இந்த நிலை ஏற் பட்டுள்ளது.

புதுமச்சினாறிகுளம், அம்பகாமம் போன்ற கிராமங்களிலிருந்து வரும் மாணவர்கள் 10 கிலோ மீற்றர் நடந்தே வரவேண்டிய நிலையில் உள்ள தால் உரிய நேரத்திற்குப் பாடசாலைக்குச் சமுகமளிக்க முடிவதில்லை. அவர்களுக்கான போக்குவரத்துக்குப் பாடசாலை பஸ் சேவையினை வழங்க ஆவன செய்யப்படவேண்டும்.

அத்துடன் வெளிமாவட்டங்களிலிருந்து எமது பாடசாலைக்குக் கற்பித்தலுக்காக வரும் ஆசிரிய, ஆசிரியைகளுக்கான தங்குமிட வசதி இல்லாமையினால் அவர்கள் வகுப்பறையிலேயே தங்க வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

எமது பாடசாலை விளையாட்டு மைதானம் மிகவும் குறுகியதாக இருந்தாலும் மாணவர்களை ஆசிரியர்கள் சிறந்த முறையில் பயிற்றுவித்து 2008 ஆம் காலப்பகுதியில் உள்ளக விளையாட்டுக்களில் மாவட்ட மட்டத்தில் வெற்றிகளை ஈட்ட வைத்துள்ளனர்.

மேலும் சகல வளங்களோடும் மாணவரின் கல்வியில் சிறந்து விளங்கும் எமதுபாடசாலையின் குறைபாடுகளை அகற்ற கல்வி சார் நிறுவனங்கள் உதவ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(க-500)

## துரித நடவடிக்கையினால் கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டில்

முல்லைத்தீவு,ஜன.18

நாடாளுமன்ற உறுப்பினரின் துரித நடவடிக்கையால் முல்லைத்தீவு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்ந்த பின்னர் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்டன. பலர் இதை ஒரு குடிசைத் தொழிலாகவே மேற்கொண்டனர். இதனால் கசிப்பை வாங்கி அருந்துபவரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்பட்டன. இதன் காரணமாகப் பல குடும்பங்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டதுடன் இதனை அருந்துவோர் நோய்களுக்கும் ஆளாகி மிகுந்த வேதனைகளை அனுபவித்து வந்தனர்.

இதனையுணர்ந்த நலன் விரும்பிகள் இந்த மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தியைப் பூண்டோடு ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினரான யுனைட் பாரூக்கிடம் கோரிக்கை விடுத்தனர். இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் பொலிஸாருடன் தொடர்பு கொண்டார். உடனடியாக விசேட பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்பட்டு கசிப்பு உற்பத்தி செய்வோரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொலிஸாரின் திடீர்ப் பரிசோதனையின் போது சிலர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர். மற்றவர்கள் கசிப்பு உற்பத்தியைக் கைவிட்டனர். இதன் காரணமாகத் தற்போது இந்த மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி செய்வோரின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது.

தொடர்ந்தும் பொலிஸார் இவ்வாறான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென இந்த மாவட்ட மக்கள் எதிர் பார்க்கின்றனர். (க-500)

## தொடரும் மழையால் விவசாயிகள் பாதிப்பில்

முல்லைத்தீவு,ஜன.18


முல்லைத்தீவில் தொடரும் அடை மழையால் தமது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன் காலபோக நெற்செய்கையும் பொய்த்து விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்களால் செய்கை பண்ணப்பட்ட பயிர்களில் தற்போது நெற்கதிர்கள் வந்த நிலையில், தொடர் மழையினால் அவை நீர்ச்சாவியாகி பதர்நெல்லாக மாறியுள்ளன. அத்துடன் பயிர்கள் நீரில் விழுந்துள்ளதாலும் நீர் மூடிப் பாய்வதனாலும் எதிர்பார்த்த விளைச்சலைப் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் இயற்கையும் தம்மை வஞ்சித்துத் தமது வாழ்வாதாரமான விவசாயத்தை அழித்துவிட்டதாக இவர்கள் மனம் குமுறுகின்றனர்.

யுத்தத்தால் இழப்பு, மழையினால் அழிவு, குளிரினால் கால்நடைகள் இறப்பு, தொழில்கள் இல்லை எனத் துன்பங்களே தம்மைத் தொடர்வதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.(க-500)

**கால்கோள் விழா...**



*விளையாட்டு வீடுகள்: செம்மலை மகாவித்தியாலயத்தில் நடந்த தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழாவுக்கு முன்னர் மாணவர்கள் விளையாட்டு வீடுகளை அமைக்க ஆசிரியர்கள் அதனை அவதானிக்கின்றனர்.* (555)

## பளையில் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

பளை, ஜன.18

பளைப் பிரதேசத்தில் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

குறிப்பாகச் சிறுபிள்ளைகளே அதிக மாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வரு கின்றனர்.

இப்பகுதியில் பெய்த அடை மழையினால் தற்காலிக வீடுகளில் தங்கியிருப்போர் பெருமளவில் காய்ச்சலால் பீடிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

காய்ச்சலால் பீடிக்கப்படும் பெருமளவு நோயாளர்கள் பளைப் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் அப்பகுதிகளிலிருந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் நுளம்புகள் பெருக்கமடைவதும் குளிர் நிலவுவதும் இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-207)

# முல்லை மாவட்டத்தில் வெள்ளத்தால் தாழ்ந்த பகுதி மக்களுக்கு கடும் பாதிப்பு

முல்லைத்தீவு,ஜன.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் தாழ்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் தற்போதைய மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் முத்துஐயன்கட்டு, கற்சிலைமடு, பேராறு, கெருடமடு, மன்னாகண்டல் ஆகிய இடங்கள் தாழ்ந்த நிலப்பகுதியில் அமைந்துள்ளன. இதனால் சிற்றாறுகள் இந்தக் கிராமங்களை உடைத்துப் பாய்ந்து செல்கின்றன. இதனால் மழை வெள்ளத்தால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள இந்தக் கிராம மக்கள் மேலும் அவலங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இந்தப் பகுதிகளிலுள்ள கிணறுகள் நிரம்பிய நிலையில் காணப்படுகின்றன. குளங்கள் யாவும் நிரம்பி வான்பாய்கின்றன. சிற்றாறுகள் வற்றாத நதிகள் போல மேன்மேலும் நீர் பெருகிய நிலையில் காணப்படுகின்றன. இதைவிட முத்துஐயன்கட்டுக் குளத்தின் பிரதான வாய்க்கால் நிரம்பிப் பாய்கிறது. அத்துடன் தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளை, குமிழமுனை, முல்லைத்தீவு, கவைக்கேணி ஆகிய தாழ்ந்த இடங்களிலுள்ள மக்களும் இந்த மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட மக்களைத் தற்போது இயற்கையும் வஞ்சிக்கின்றது. (க-500)

## குளக்கட்டில் வெடிப்பு

முல்லைத்தீவு, ஜன.18

கற்சிலைமடு பெரிய குளக்கட்டில் பெரியளவிலான உடைப்பு ஒன்று ஏற்பட்டு அபாய நிலைக்குள் ளாகி இருந்தது.

இதனை அவதானித்த கற்சிலைமடுக் கமக்கார அமைப்பினரும் விவசாயிகளும் அதனை அடைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வெற்றிகரமாக அதனை அடைத்துள்ளனர். இக்குளத்தின் நீர்மட்டம் 12 அடி என்பது குறிப்பிடத்தக்கது.

(க-500)

## சிறப்பான ஒளிவிழா

முல்லைத்தீவு, ஜன.18

கூளாமுறிப்பு புனித சூசையப்பர் ஆலயத்தின் ஒளிவிழா நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் செயலாளர் தி.ஜெயபாலன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் ஆசியுரையினை முல்லைத்தீவு ஆலயப் பங்குத் தந்தை நிரூபன் வழங்கிச் சிறப்புரையினையும் ஆற்றினார்.

இந்த நிகழ்வில் மறைக்கல்வி மாணவர்கள்,பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் வெகு சிறப்பாக இடம்பெற்றன.

மக்கள் இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்த பின்னர் நடைபெற்ற இந்த ஒளிவிழா நிகழ்வு அனைவரதும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

# கிளிநொச்சியில் மீள்குடியமர்வு 98 வீதம் பூர்த்தி: அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜன.18

கிளிநொச்சி மாவட்டத்தில் 98 வீதமான மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தகவல் தெரிவித்துள்ளார்.

37 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 18 ஆயிரம் பேர் இதுவரை மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ளார்கள். ஏனைய இரண்டு வீதமானோர் விரைவில் மீள்குடியமர்வு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இவர்களின் வாழ்வாதாரத்துக்குத் தேவையான அனைத்து உதவிகளும் அரசினால் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்கள் தமது வியாபாரம் மற்றும் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உதவிகளும் வழங்கப் பட்டுள்ளன.

(க-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுளையில் தென்னங்கன்றுகள் விநியோகம்

பதுளை,ஜன.18

பதுளை மாவட்டத்தில் தென்னங்கன்றுகளை விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆதிவாசிக் கிராமங்களில் 2 ஆயிரத்து 300 வீட்டுத் தோட்டங்கள் என்ற திட்டத்தின் கீழ் 20 ஆயிரத்து 465 தென்னங் கன்றுகளும்-

கிராம எழுச்சி கூட்டிணைப்புத் திட்டத்தின் கீழ் 10,785 கன்றுகளும் விவசாய சேவைக் கூட்டிணைப்புத் திட்டத்தின் கீழ் 15, 017 கன்றுகளும்-

ஜனாதிபதியின் பிறந்ததினத்தையொட்டி 6,000 கன்றுகளும் என்ற அடிப்படையில் பதுளை மாவட்டத்தில் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தல்தென திறந்த சிறைச்சாலை வளாகத்தில் 15,000 கன்றுகளும் நடப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது.(ளி)

# மாத்தளை மாவட்ட மண்சரிவில் 96 வீடுகள் முற்றாகச் சேதம்

மாத்தளை, ஜன. 18

சீரற்ற காலநிலையால் மாத்தளை மாவட்டத்தில் மொத்தம் 347 வீடுகள் சேதம் அடைந்துள்ளன. அவற்றுள் 96 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன என மாவட்டத்தின் அனர்த்த நிவாரண முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

உக்குவளை, இரத்தோட்டை, தம்புள்ள, பல்லேபொல, யட்டவத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவிலேயே அதிகமான வீடுகள் சேதமாகியுள்ளன.

காலநிலையால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் விமானப்படை, இராணுவம், பொலிஸ் துறையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாத்தளை அரச அதிபர் திருமதி ஹெலன் ஏ. மீகஸ்முல்லவின் மேற்பார்வையில் அகதிகளுக்கான நிவாரண உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என அனர்த்த நிவாரண முகாமைத்துவ நிலையத்தின் பிரதம அதிகாரி இந்திக்க ரணவீர தெரிவித்துள்ளார்.

(ளி)

## தலைமறைவாகிய சந்தேக நபர் கைது

மாத்தளை,ஜன18

பல்வேறு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நிலையில் தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் ஒருவரை மாத்தளை பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை கைதுசெய்துள்ளனர்.

மினுவன்கொடை மற்றும் சீதுவைப் பிரதேசங்களில் இடம்பெற்ற பல கொலைகள் தொடர்பிலேயே பொலிஸாரால் மேற்படி நபர் தேடப்பட்டு வந்துள்ளார்.

(204)

# உலக வங்கியின் ஏழரைக் கோடி ரூபா நிதியுதவியில் சப்ரகமுவ பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகள்

பதுளை,ஜன.18

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 1,100 பாடசாலைகளில் குடிதண்ணீர், மலசலகூட மற்றும் சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்து அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு உலக வங்கி 7 கோடி 50 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்தத் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மாகாண சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தில் .196 தமிழ்ப் பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மாகாணத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் குடிதண்ணீர், சுகாதார வசதிகளின்றி மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக பாடசாலைகளில் இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(ளி)

# மலையகத்தில் புதிய நீரூற்றுக்கள்; மண்சரிவு அபாயமாக இருக்கலாம்

### தேசிய கட்டட ஆய்வு மையம் அறிவிப்பு

மலையகத்தில் பல பகுதிகளிலும் புதிய நீர் ஊற்றுக்கள் உருவாகி வருகின்றன என்றும் சிலவேளைகளில் இவை மண்சரிவுக்கு எச்சரிக்கையாக இருக்கலாம் என்றும் தேசிய கட்டட ஆய்வுமையம் அறிவித்துள்ளது.

இதுவிடயத்தில் பொதுமக்கள் மிகக் கவனமாக இருக்கும் படியும் அந்த மையம் கேட்டுக் கொண்டுள்ளது.

நிலக்கீழ் நீர்மட்டம் உயரும் போது இவ்வாறு ஊற்றுக்கள் ஏற்படுவதுண்டு. இருப்பினும் அது கலங்கல் நீராக இருக்குமாயின் மண்சரிவு ஏற்படும் சாத்தியம் உண்டு.

அப்படியான இடங்களில் அது ஊற்று நீராக இருக்க முடியாது என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக வலப்பனை பிரதேசத்தில் இவ்வாறான கலங்கல் நீர்க்குன்றுகள் காணப்படுவது வழக்கம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரூ:22 லட்சம் நிதி ஒதுக்கீடு

நுவரெலியா மாவட்டத்திற்கு வெள்ள அனர்த்தங்களால் ஏற்படும் சேதங்களைச் சரிசெய்வதற்காக 22 லட்ச ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என இயற்கை இடர் நிவாரண முகாமையாளர் எரந்த ஏமாவர்தன தெரிவித்துள்ளார்.

அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவினருக்கும், ஹற்றன் - டிக்கோயா நகரசபை பிரிவினருக்கும், காட்டாறுகள் பெருக்கெடுக்கும் போது அதனை தடுக்கும் நடவடிக்கைக்காக 7 லட்சத்து 48 ஆயிரம் ரூபாவும், இராகலைப் பிரதேசத்துக்கு 10 லட்சம் ரூபாவும், கொத்மலை பிரதேசத்துக்கு 10 லட்சம் ரூபாவும், சராசாரிகம வீதி புனர் நிர்மாணத்திற்கு 10 லட்சம் ரூபாவும், சாமிமலை கிரீன்னைட் பாம் ஜனபதயவினருக்கு 60 ஆயிரம் ரூபாவும், நானுஓயா பிரதேச புனர் நிர்மாணத்திற்கு 25ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன என்று எரந்த ஏமவர்தன தெரிவித்துள்ளார்.(ளி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் நெசவுத்துறையினை மேம்படுத்தப் புதிய திட்டங்கள்

மட்டக்களப்பு,ஜன18

கிழக்கில் நெசவுத்துறையின் மேம்பாடுகளுக்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன என்று அகில இலங்கை மக்கள் காங் கிரஸின் தலைவரும் கைத் தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சருமான றிசாத் பதியு தீன் தெரிவித்துள்ளார்.

கல்முனை அனைத்துப் பள்ளிவாசல்கள் மற்றும் பொது நிறுவனங்களின் சம்மேளனத்தின் வெள்ள நிவாரண செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

மருதமுனையில் 50 லட்சம் ரூபாய் செலவில் நெசவுத் தொழிலுக்கான துணிகளை நிறமூட்டும் நிலையமொன்றை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளேன். அங்குள்ள பல நெசவாளர்கள் கொழும்புக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் நிறமூட்டுவதற்காக துணிகளைக் கொண்டு செல்லவேண்டியுள்ளது. அதனால் அதிக செலவு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக நெசவு நிலையத்தை மருதமுனையில் அமைக்கவுள்ளேன்.

அதேபோல் கல்முனையில் கைத்தொழில் பேட்டையொன்றை ஏற்படுத்துவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பிரதேச இளைஞர்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவர்.

இந்தவிடயம் குறித்து எதிர்காலத்தில் நாம் கலந்துரையாடல்களை நடத்துவோம் என்று அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாருக் உட்பட பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (204)

# வெள்ளத்தில் அள்ளுண்ட இளைஞர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜன.18

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சம்பலவத்த பாலத்தடியில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நாவிதன்வெளி நடேசபிள்ளை பிரதீபன் (வயது - 18) என்ற இளைஞர் சடலமாகக் கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டார்.

தைப்பொங்கலுக்காக கடந்த 11ஆம் திகதி தனது தாயாருடன் ஆடைகளைக் கொள்வனவு செய்ய மேற்படி இளைஞர் கல்முனைக்கு வந்துள்ளார். மீண்டும் நாவிதன்வெளிக்குச் செல்ல முடியாதளவு நீர் பெருக்கெடுத்துள்ளது என அறிந்த குறித்த இளைஞரும் தாயாரும் களுவாஞ்சிக்குடிக்கு வந்து வள்ளத்தில் செல்ல முடிவு செய்துள்ளனர்.

வள்ளத்தில் செல்வதானால் மண்டூர் ஊடாக நாவிதன்வெளி செல்லும் சம்பல்வத்த பாலத்தைக் கடக்கவேண்டும். இந் நிலையில் வள்ளத்தினால் பாலத்தைக் கடப்பதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்காததால் நீர்மட்டம் குறைந்துள்ள பகுதியினால் கால் நடையாகச் செல்ல எத்தனித்துள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கே இளைஞரை இழுத்துச் சென்றுள்ளது.

சம்பவம் நடந்த தினத்திலிருந்து மூன்று தினங்களின் பின்னரே மேற்படி சடலம் சம்பலவத்த பாலத்திற்கு அண்மையில் கரை ஒதுங்கியுள்ளது.

(204)

# மலாக்கா பிராந்திய முதலமைச்சர் திருமலை வருகை

திருகோணமலை,ஜன18


மலேசியா, மலாக்கா பிராந்திய முதல் அமைச்சர் அலி குஸ்தான் திருகோணமலைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

திருகோணமலைக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வருகைதந்த அலி குஸ்தானுக்கு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் ஆகியோரால் வரவேற்பளிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலையைத் தொடர்ந்து ஏற்பட்ட அசாதாரண நிலைமை பற்றி ஆளுநருடன் அவர் கலந்துரையாடினார். சேதவிவரங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிவதும் இவரது வருகையின் நோக்கமாகும்.

(204)

ஆரம்பம்...



திறப்பு: திருகோணமலையில் புதிதாக அமைக்கப்பட்ட நீர்வழங்கல் வடிகால் அமைப்பு அலுவலகத்தின் திறப்புவிழாவில், அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாவை வெட்டித் திறந்து வைக்கின்றார்.அருகில் பிரதி அமைச்சர்களான எஸ்.குணவர்த்தன, சுசந்த புஞ்சிநிலம ஆகியோர் காணப்படுகின்றனர்.

# திருமலையில் போக்குவரத்து வழமைக்கு

திருகோணமலை, ஜன18

திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளம் படிப்படியாக வடிந்து வருகின்றது. தரை வழியாகத் துண்டிக்கப்பட்ட போக்குவரத்து மீண்டும் வழமைக்குத் திரும்பியுள்ளது.

கடந்த நான்கு வாரங்களாக பாடசாலைகளிலும், பொதுக் கட்டடங்களிலும் தஞ்சமடைந்திருந்த மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர்.

வேளாண்மைப் பயிர்கள் பல அழிவடைந்த போதிலும் சில பகுதிகளில் நீர் வடிந்து செல்வதனால் மீண்டும் பயிர்கள் தழைக்கக்கூடும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது நிலவிவரும் சீரான கால நிலை தொடர்ந்து நீடிக்குமாயின் முகாம்களில் உள்ள மக்கள் தமது சொந்த வீடுகளுக்குச் செல்லக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தொற்று நோய் பரவுவதைத் தடுப்பதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் முக்கிய பணி

## சிவநேசதுரை சந்திரகாந்தன்

திருகோணமலை,ஜன 18

தொற்றுநோய் பரவுவதைத் தடுப்பதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பணி உள்ளது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

தற்போது வெள்ளம் முற்றாக வடிந்துள்ள நிலையில் நிவாரணப் பணிகளை முன்னெடுப்பதுடன் கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தினை இயக்குவது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பாடசாலைகளை இயங்க வைத்தல், பாதைகளைப் புனரமைத்தல், அனைத்து அரச அலுவலகங்களின் செயற்பாடுகளையும் மீள ஒழுங்கமைத்தல், பிரதேசசபைகளின் செயற்பாடுகளை துரிதப்படுத்தல், கழிவுகளை அப்புறப்படுத் தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

பிரதேச சபைகள் மற்றும் நகரசபை மாநகரசபைகள் கழிவுகளை அகற்றுகின்ற பணியினை துரிதப்படுத்த வேண்டும் என்றும் பழுதடைந்த பாதை கள், மதகுகள், கல்வெட்டுக் களைச் சீரமைத்தல் மற்றும் சுகாதாரம் பேணல் போன்றவற்றை அதிகாரிகள் சிறப்பாகவும் விரைவாகவும் முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பூ.பிரசாந்தன், பிரதேசசபைகளின் தவிசாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.விமலநாதன், முதலமைச்சரின் செயலாளர் கலாநிதி அமலநாதன், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மா.உதயகுமார், மாநகர ஆணையாளர் எஸ். சிவநாதன்;, மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் சத்தியானந்தி பிரதேச சபையின் செயலாளர்கள் மற் றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (204)

# பிரதேச செயலகம் நொருக்கப்பட்டது

மட்டக்களப்பு,ஜன.18

வெள்ள நிவாரணம் வழங்குவதில் மோசடி இடம்பெற்றதாகக் கூறி; ஆரையம்பதி பிரதேச மக்கள் நேற்று திங்கள்கிழமை காலை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு அடித்து நொறுக்கியுள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டனர்.

வெள்ள நிவாரண பொருள்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படாமல் பிரதேச செயலாளரின் உதவியுடன் கிராம சேவகர்களினால் பதுக்கப்படுவதாக குற்றம் சுமத்தி பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

# அத்தியாவசிய சேவைகள் பிரிவால் உலர் உணவுப் பொதி விநியோகம்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நாவிதன்வெளி, சம்மாந்துறை, காரைதீவு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள மக்களுக்கான உலர் உணவுகள் கிழக்கு மாகாண விவசாய கால்நடைகள் அமைச்சின் அத்தியாவசிய சேவைகள் பிரிவினால் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. குழந்தைகளுக்கான பால்மா, பிஸ்கட், அரிசி, மருந்துப் பொருள்கள் ஆகியவை உட்பட அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகள் அமைச்சின் இணைப்பாளர் சசிதரனால் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை, அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் துரையப்பா நவரெட்ணராஜாவின் ஏற்பாட்டில் வழங்கப்படும் இந்த உலர் உணவுப் பொதிகள் குறைந்தளவில் தற்போது கையளிக்கப்பட்டுள்ளன. எனினும் இன்னும் ஒரிரு தினங்களில் அதிகளவிலான நிவாரண உதவிகள் அமைச்சினால் வழங்கப்படவுள்ளன என அமைச்சின் இணைப்பாளர் தெரிவித்தார்.

# மாவடிப்பள்ளி தாம்போதியை புனரமைத்துத் தரக் கோரிக்கை

அம்பாறை, ஜன.18

அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளியிலுள்ள பழைமை வாய்ந்த தாம்போதி திருத்தி அமைக்கப்படவில்லை. இதனால் கல்முனைப் பிரதேசம் வெள்ளப்பாதிப்புக்குள்ளாகிறது.

அம்பாறை- கல்முனை பிரதான வீதியிலுள்ள தாம்போதி கன மழை காலத்தில் நீரில் அமிழ்ந்து விடுகிறது. இதனால் இதனூடான போக்குவரத்துகள் தடைப்பட்டு விடுகின்றன. மக்கள் அசௌகரியங்களுக்குள்ளாகி விடுகிறார்கள். அம்பாறை - கல்முனை பிரதான வீதி நவீன முறையில் காபட் வீதியாகப் புனரமைக்கப் பட்டது. அச் சமயத் தில் கூட இப் பாலம் உயர்த்தப் படாமல் பழைய நிலையிலேயே செப்பனிடப்பட்டது.பழைமை வாய்ந்த இப் பாலம் வீதி மட் டத்தை விடத் தாழ்வாகவே உள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களுக்கு இவ்வீதியூடாகச் சென்று வரும் அரசியல்வாதிகள், நிபுணர்கள், அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் ஆகியோரில் எவருமே இத் தாம் போதிப் பாலத்தை புனரமைப்பதற்கு இதுவரை எந்தவொரு முயற்சியும் எடுக்க வில்லை.

ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபாடு கொள்வோர் இப்பாலத்தைப் புனரமைப்பதற்கும் முன்வர வேண் டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் விடுத்தது பயண எச்சரிக்கை இலங்கை அரசோ கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 18

பிரிட்டிஷ் அரசால் விடுக்கப்பட்டுள்ள பயண எச்சரிக்கைக்கு இலங்கை அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுகிறது என வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை எனப் பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசு அண்மையில் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள பயண எச்சரிக்கையில் பொதுவாகப் பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுகிறது எனத் தெரிவித்திருந்தது பயண எச்சரிக்கை விடுப்பதற்கு முன்னர் இலங்கை அரசுடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும் என்று பிரதமர் சாடியுள்ளார்.

இலங்கையில் பொதுவாகப் பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுகிறது எனக் கடந்த வெள்ளிக்கிழமை பிரிட்டன் வெளியிட்டுள்ள பயண எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தம் தொடர்பில் விடுக்கப்பட்ட பயண எச்சரிக்கையின் ஒரு பகுதியில் பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், இலங்கையில் தொடர்ச்சியாக அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டு வருகிறது என்றும் தாக்குதல் அபாயத்தை முற்று முழுதாக நிராகரிக்க முடியாது எனவும் பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

வடக்கில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் பிளவு ஏற்பட்டுள்ளது எனவும் பொதுவான பாதுகாப்பு நிலைமைகளில் எவ்வித பாதிப்பும் கிடை யாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# வெள்ளம் பாதித்த பகுதிகளில் தொற்றுநோய் அபாயமில்லை

கொழும்பு, ஜன.18

அண்மையில் பெய்த மழை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் லட்சக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். குறிப்பாகக் கிழக்கு மாகாணம் வரலாறு காணாத அழிவைச் சந்தித்தது.

தற்போது வெள்ளம் வடிந்து வரும் நிலையில் மக்களிடையே தொற்றுநோய் குறித்த அச்சம் நிலவுகின்றது.

எனினும் காலநிலை மாற்றத்தினால் மக்களுக்கு எதுவித தொற்றுநோய் அபாயமும் ஏற்படாது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் சுகாதார சூழ்நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான சிறந்த சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

வடமத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணங்களில் 5 நடமாடும் மருத்துவச் சேவை அணிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை மக்கள் நிதியம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கென பாதுகாப்பு ஆடைகளை வழங்கியுள்ளது . சவூதி அரேபிய நாட்டைச் சேர்ந்த வைத்தியக்குழு விரைவில் நாட்டிற்கு வரவுள்ளது - என்றும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வெள்ள அழிவு குறித்து பிரிட்டிஷ் இளவரசர் கவலை

கொழும்பு, ஜன. 18

நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளம், மண்சரிவு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குப் பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம் சார்ள்ஸ் தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

இளவரசர் வில்லியம் சார்ள்ஸ் இது தொடர்பான அனுதாபக் கடிதம் ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

வெள்ளத்தால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள அனர்த்தம் குறித்து நானும் எனது மனைவியும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்கள் மட்டுமன்றி, விவசாயக் காணிகளை இழந்து தவிக்கும் மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். - இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## உரையாடல்.....



இலங்கையின் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்காவின் தந்தையான ரஞ்சித் சேனாநாயக்காவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க உரையாடுகின்றனர். (204)

# கிழக்கு மக்களுக்கு ஜப்பான் அரசு நிவாரண உதவி

கொழும்பு, ஜன.18

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜப்பான் அரசு சுமார் இரண்டரைக் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளது.

இதில் 400 கூடாரங்கள், 2000 படுக்கை விரிப்புகள் உள்ளிட்ட பல நிவாரணப் பொருள்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு இலங்கையிலுள்ள ஜப்பான் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைய இந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டன என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைக் கவனத்தில் கொண்டு மேலும் சில நிவாரணங்களை வழங்க எதிர்பார்த்துள்ளதாக ஜப்பான் குறிப்பிட்டுள்ளது. (சி)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு சீனன்கோட்டையிலிருந்து நிவாரணம்

பேருவளை,ஜன.18

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சீனன்கோட்டை பள்ளிச் சங்கம் 30 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களைப் பொதுமக்களிடமிருந்து சேகரித்துள்ளது.

சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் பேருவளை சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலிலிருந்து நேற்றுத் திங்கட்கிழமை மாலை அஸர் தொழுகையின் பின்னர் கிழக்கு மாகாணத்திற்கு லொறிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்நிகழ்வு பள்ளிச்சங்கத் தலைவரும், சவூதி அரேபியாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவருமான தேசபந்து நவ்பல் எஸ். ஜாபிர், உப தலைவர் ராமிஸ் ஏ. கபூர் ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

சீனன்கோட்டையில் உள்ள ஜும் ஆ பள்ளிவாசல்கள், ஏனைய சாதுலிய்யா ஸாவியாக்களில் நிவாரணப் பொருள்கள் சேகரிக்கப்பட்டன.

இவற்றில் உலருணவு, பால் மா, பாடசாலை உபகரணங், குடிதண்ணீர்ப் போத்தல்கள் உட்படப் பல பொருள்கள் அடங்குகின்றன.

பொருள்களை அனுப்பி வைக்கும் நிகழ்வில் பள்ளிச் சங்க உறுப்பினர்கள் உலமாக்கள் பங்குபற்றுவர்.

இரு நாட்களுக்குள் சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களை கிழக்கு மாகாண வெள்ள அகதிகளுக்கு வழங்கிய சீனன் கோட்டை மக்களுக்கு தேசபந்து நவ்பல் எஸ். ஜாபிர், ராமிஸ் ஏ.கபூர் உட்பட பள்ளிச் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது. (ளி)

# விபத்தில் சிக்கியது ஜயசூரியவின் வாகனம்

கொழும்பு, ஜன.18

கிரிக்கெற்வீரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜயசூரிய பயணித்த வாகனம் மோட்டர் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இராணுவத்தினர் மூவர் காயமடைந்தனர்.

மாத்தறை எ்லிய கண்ட பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றது.

சனத் ஜயசூரியவுக்கு காயம் ஏதும் இல்லை. (சி)

# 106 வருடங்கள் பழமையான பெட்டகத்தின் கதவு திறப்பு

கொழும்பு, ஜன.18

*அண்மையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கட்டடமொன்றில் கண்டுபிடிக்கப்பட்ட 106 வருடங்கள் பழைமை வாய்ந்த மூன்று பெட்டகங்களில் ஒரு பெட்டகத்தின் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.*

*சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இந்தப் பெட்டகம் மூன்று கனமான இரும்புக் கதவுகளைக் கொண்டிருந்தது. அவை கனமான பூட்டுக்களால் பூட்டப்பட்டிருந்தன.*

*மிகுந்த சிரமத்தின் பின் வைத்தியசாலையில் பணிபுரிந்த மேசன் தொழிலாளிகள் இக் கதவுகளைத் திறந்துள்ளனர். இந்தப் பெட்டகத்துக்குள் எவ்வித பொருள்களும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.* (இ)

# பெருவெள்ளத்தினால் நாடு முழுவதும் பெரும்போக அறுவடையில் 15 வீதம் அழிவு

தொடர்மழையால் நாட்டில் ஏற்பட்ட வெள்ளத்தால் இந்த ஆண்டில் நெல் அறுவடை நான்கு லட்சம் மெற்றிக் தொன்னால் வீழ்ச்சியடையும் என்று அரச புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான குழுவின் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்ற போதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

இந்தஆண்டு பெரும் போகத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, அனுராதபுரம், பொலனறுவை, வவுனியா மாவட்டங்களில் அதிக அறுவடை எதிர்பார்க்கப்பட்டது.

அதிக அறுவடை எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆறு மாவட்டங்களிலும் 275, 000 ஏக்கர் நிலப் பரப்புக்களில் வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக அறுவடை இழக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு 210,000 மெற்றிக் தொன் அறுவடை இழப்பு ஏற்பட்டுள்ளது. அனுராதபுரத்தில் 62,000 மெற்றிக் தொன்னும், பொலனறுவையில் 26,000 மெற்றிக் தொன்னும் அறுவடை இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

பெருவெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள மொத்த அறுவடை இழப்பு 383,852 மெற்றிக் தொன்னாகும். இந்த ஆண்டு பெரும் போகத்தில் எதிர்பார்க்கப்பட்ட அறு வடையில் 15 வீத வீழ்ச்சி ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென காரைநகர் மருதடி இந்து இளைஞர் மன்றத்தினர் காரைநகர் மக்களிடையே சேகரித்த பொருள்களை உதயன் அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர். உதயன் ஆசிரிய பீட மூத்த உறுப்பினர் ஞா.குகநாதனிடம் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

# தமிழ்த்துறை தலைவராக பேராசிரியர் கி.விசாகரூபன்

யாழ்ப்பாணம், ஜன.18

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தமது அறுபத்தைந்தாவது அகவையைப் பூர்த்தி செய்துள்ளதையடுத்து தமிழ்த்துறையின் புதிய தலைவராகப் பேராசிரியர் கி.விசாகரூபன் பணிமூப்பின் அடிப்படையில் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகின் இணைப்பாளராகவும் இவர் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ம)

# அடியவர் பணத்தை வீணடிக்கும் அறங்காவலர்

அடியவர்கள் வழங்கும் பணத்தை ஆலய அறங்காவல் சபையினர் வீணடித்து வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாள் அறக்கொடை வழங்கும் நிகழ்வு கடந்த 07 ஆம் திகதி தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சமூகத்தில் மரபு நிலையில் ஆண்களுக்கேயான ஆலய நிர்வாகத் தலைமைப் பணியை அம்மையார் பொறுப்பெடுத்து குடாநாட்டு ஆலயங்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார் எனக் குறிப்பிட்டார்.

ஆலய நிர்வாகம், ஆலயப் புனரமைப்பு, ஆலயத்துக்கான நிதி நிலைப் பராமரிப்புக்களில் வெளிப்படைத் தன்மையைப் பேணிய அம்மையார், ஆலயத்தைச் சார்ந்து பல்வேறு அறப் பணிகளை முன்னெடுத்து தனித்துவமான ஆளுமையாக விளங்கினார்.

அடையாளப்படுத்திச் சென்றார். இது அவருடைய பிறிதொரு ஆளுமை. இந்தப் பண்பைக் காண்பது என்பது அரிதானதொரு விடயமாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வழியில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் போன்றவர்களை சைவத்தமிழுக்குப் புடம்போட்டுத் தந்தவர் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார்.

முப்பதாண்டு காலப் போரினால் பெற்றோர்களையும் வாழ்வாதாரங்களையும இழந்த எத்தனையோ சிறுமிகள் அன்னை ஏற்படுத்திய நிழலில் வாழ்வாங்கு வாழ்கின்றார்கள். சோறு மற்றும் தண்ணீருடன் மட்டும் அவர்கள் வாழ்வாங்கு நின்றுவிடவில்லை. அதற்கும் மேலாக அந்தப் பிள்ளைகள் எவையெவற்றை எல்லாம் அவாவி நின்றாரோ அவற்றையெல்லாம் அம்மையார் வழங்கினார். அவர்களில் சிலர் பல்கலைக் கழகம் சென்று பட்டதாரிகள் ஆனார்கள். பலர் இப்போதும் படிக்கின்றார்கள். இடப்பெயர்வுக் காலங்களில் இந்தச் சிறுமிகளைப் பாதுகாக்க அம்மையார் பட்டபாடுகளை யாழ்ப்பாணத்துச் சமூகம் நன்கறியும்.

குடாநாட்டு ஆலயங்களின் அறங்காவலர்கள் பலரும் திருப்பணி என்ற பெயரில் ஆலயங்களின் நிதியில் மோசடிகளில் ஈடுபட்டுவருகின்றனர். அடியவர்களால் ஆலயத் திருப்பணிகளுக்கென வழங்கப்படும் பணத்தைத் தமது முறைகேடுகள் தொடர்பான வழக்குகளுக்கு இவர்கள் தண்ணீராகச் செலவழிக்கின்றார்கள். ஆலயப் படிக்கட்டுக்களில் கால் வைக்கும் பொழுதுகளை விட நீதிமன்றப் படிக்கட்டுக்களிலே இவரது பொழுதுகள் கழிகின்றன. சிமெந்துக் கலவைகளால் ஆலயங்களை மீண்டும் மீண்டும் மெழுகுவதை விடுத்து ஆலயத்தை நோக்கி அடியவர்களைஈர்ப்பதையும் அறப்பணிகளை மேற்கொள்வதையும் உறுதிப்படுத்த வேண்டும்.- என்றார். (ம)

# பருத்தித்துறை கட்டைவேலி சேகர குரு ஜேர்மனுக்கு பயணம்

வடமராட்சி, ஜன.18

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை, கட்டைவேலி சேகர முகாமைக் குருவாக கடந்த 5 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய அருட் திரு என்.அருள்நாதன் திருச்சபையின் உயர் கல்விக்காக ஜேர்மன் செல்லவுள்ளார்.

இவரின் இடத்துக்கு புத்தூர் மெதடிஸ்த திருச்சபை இல்லத்தில் பணியாற்றிய அருட்திரு கிறிஸ்துகுமார் தங்கராசா நியமிக்கப்பட்டு முகாமைக்குருவாக பதவி ஏற்றுள்ளார். (ம)

# யாழ். குடாநாட்டுச் சம்பவங்களுக்கு முன்னாள் புலிகள் காரணம் அல்ல

யாழ்ப்பாணம், ஜன.18

அண்மைக்கால யாழ். குடாநாட்டுசம்பவங்களுக்கு முன்னாள் விடுதலைப்புலிகள் காரணகர்த்தா அல்லர் என்று யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அபயசிங்க பண்டார தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் பொதுமக்கள் - பொலிஸார் கலந்துரையாடல் அண்மையில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏனைய மாவட்டங்களைவிட இந்த மாவட்டத்தில் குறைவாகவே குற்றச் செயல்கள் நடைபெற்று வந்தாலும் இதனைக் கட்டுப்படுத்த வேண்டியகடமை எமக்கு உண்டு.

பலவருட காலமாக எத்தனையோ இன்னல்களை இந்த மாவட்ட மக்கள் சந்தித்துள்ளனர். அவற்றில் இருந்து மீண்டும் அமைதி வாழ்க்கையை வாழ முற்படும்போது இவ்வாறான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. மானிப்பாய், சுன்னாகம், கோப்பாய் பொலிஸ் பிரிவுகளில் அநேகமானசம்பவங்கள் அண்மைக் காலத்தில் இடம்பெற்றுள்ளன.

உங்களது உடைமைகளையும் உயிர்களையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உண்டு. இருந்தும் 50, ஆயிரம் பேரைக் கொண்டுள்ள இந்தப் பிரிவுக்கு 50 பொலிஸரே மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகின்றனர்.

இதனால், ஒவ்வொரு பொலிஸாரும் கிட்டத்தட்ட 1000 பேரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்க வேண்டிய நிலை உள்ளது. தற்போது பொலிஸாருடன் இணைந்து பாதுகாப்புப் படையினருடன், விசேட அதிரடிப்பொலிஸாரும் இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்த அவர்களின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

இவர்களின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தும் பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றி இவ்வாறான குற்றச் செயல்களை நாம் தடுத்து நிறுத்த முடியாது. பொலிஸார் சம்பவ இடம் ஒன்றுக்கு வருமுன் கிராம அலுவலரின் உதவியுடன் சந்தேகத்துக்கிடமானவர்களை இனங்கண்டு அவரிடம் ஒப்படைப்பது மக்களாகிய உங்களது கடமை எனவும் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கும் எமக்கும் பொதுப் பிரச்சினையாக மொழிப் பிரச்சினை உள்ளதை நாம் அறிந்துள்ளோம். இதனை நீக்குவதற்கு 260 தமிழ்ப் பொலிஸார் பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றவுள்ளனர். இதனால் இந்த மொழிப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம்.- எனவும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் மானிப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி மல்கப்பும்கலந்துகொண்டார். (ம)

# குடாநாட்டில் கடும் குளிர்

வடமராட்சி, ஜன. 18

யாழ்.குடாநாட்டில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக கடும் குளிர் நிலவி வருகிறது.

இரவு, பகலாகக் காணப்படும் கடும் குளிரால் பொதுமக்கள் குறிப்பாக வயோதிபர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எப்போதும் இல்லாதவாறு காணப்படும் இக்குளிரால் கால்நடைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. (ம-236)

# அரசியலில் பெண்கள் பங்களிப்புத் தேவை

யாழ். குடாநாட்டில் பெண்களின் அரசியல் பங்களிப்பு என்பது காலத்தின் தேவையாகவுள்ளது என்று தெரிவித்துள்ளார் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சரோஜா சிவசந்திரன். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்ப் பெண்கள் சமூகத்தில் பொதுமக்களுடன் தொடர்புகொள்வது பெரிய விடயமாக உள்ளது. பெண்களுக்கு வாக்குரிமை மட்டுமே என்ற நிலைப்பாட்டிலிருந்து பெண்களும் அரசியல் செயற்பாடுகளில் முன்னேற முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக 3ஆம் உலக நாடுகளிலேயே முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு, முதல் பெண் பிரதமரைக் கொண்டநாடு இலங்கை என்று பெருமைப்படும் அளவிற்கு ஏனைய பெண்கள் முன்னேறவில்லை.

சமூக சிந்தனையை பெண்கள் ஏற்படுத்திக்கொள்வதே பெரும் சிரமமாக இருக்கும். பாரம்பரியத்திலிருந்து வந்த நாம் இன்று பல்வேறு துறைகளின் முன்னோடியாகப் பெண்களைக் கொண்டு இயங்குகிறோம். பெண் தலைமைத்துவ குடும்ப மரபை தற்போதைய சூழ்நிலையில் நாம் பெருமளவில் கொண்டிருக்கிறோம். ஆனால், அரசியல் பிரவேசங்களில் பெண்களின் பங்கு மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

இந்த நிலையில் அரசியல்துறையில் பெண்கள் ஆர்வம் கொண்டு தம்மை இணைத்துக்கொள்வது பல யதார்த்தங்களை வெளிக்கொணர உதவும். அதிலும் பெண் பற்றிய அக்கறை கொண்ட பெண்களால்தான் இத்தகைய ஒரு மாற்றத்தினை ஏற்படுத்த முடியும். இன்றைய சூழலில் அரசியலில் பெண்கள் முழுவீச்சில் ஈடுபடாமைக்குப் போதிய ஆளணி பற்றாக்குறை, தகுந்த பாதுகாப்பின்மை, முடிவெடுக்கும் தகுதியைப் பெற்ற பெண்களின் வீத அதிகரிப்பின்மை போன்றனவும் சில காரணிகளாகும். தற்போதைய சூழ்நிலைகளில் உள்ளூராட்சிதேர்தலின்போது பெண்வேட்பாளர்களின் பங்களிப்பு விகிதம் அதிகரிக்கப்பட வேண்டும்.

யுத்தத்தின் பின்னரான குடாநாட்டின் பின்னணியில் பெண் தலைமைத்துவம் அதிகரித்துள்ள நிலையில் இவர்களின் சுகாதாரம், போசாக்கு, உரிமைகள், வாழ்வாதார அடிப்படைப்பிரச்சினைபோன்றவற்றையும் மாறும் சூழ்நிலைகளில் மனிதாபிமானத் தேவைகளை எதிர்கொள்ளவும் அரசியலில் பெண்களின் நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

நகர சபைக்கான 29 வேட்பாளர் தெரிவுக்கும், 16 பிரதேச சபைகளுக்கான 210 வேட்பாளர் தெரிவிற்கும் பெண்வேட்பாளர்களும் பரிசீலிக்கப்பட வேண்டும். பங்களிப்பு விகிதம் அதிகபட்சம் 3-2 ஆக இருந்தால் பெண்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் அது அமையும்.

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் பெண்வேட்பாளர்கள் தாம் தெரிவுசெய்யும் அரசியல் கட்சிகளில் போட்டியிடுவதற்கான தகுதியை உறுதிப்படுத்த வேண்டும். இதன் மூலம் புதியதோர் இலக்கை அடைய முடியும். கட்சிகள் பெண்வேட்பாளர்களைச் சேர்த்துக்கொள்ளாத விடத்து பெண்கள் அக்கட்சிகளுக்கு வாக்களிப்பது அர்த்தமற்றதாகி விடும். -என்று தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மற்றவர்களை நம்பி யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். வேண்டாத பொருள்களை வாங்குவீர்கள். பல நாள்களாகச் செல்ல நினைத்த ஒரு இடத்திற்குச் செல்லலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம்.

**இடபம்:**
எந்தக் காரியமும் தங்குத் தடையின்றி நடக்கும் நாள். உற்றார், உறவினர்கள் சிலருடன் உங்களின் அனுபவம் ஒன்றைப் பற்றி மனம் விட்டுப் பேசுவீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணவரவு ஒன்று, இன்று திடீரென வந்து சேரலாம். பெண்கள், மகிழ்ச்சி உற்சாகமாகக் காணப்படுவர். குழந்தைகளால் குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் உண்டு.

**மிதுனம்:**
நீண்டநாள்களாக எதிர்பார்த்த வாய்ப்பு ஒன்று தேடி வரலாம். மனைவி, குழந்தைகள் கேட்ட பொருள்களைத் தயங்காமல் வாங்கிக் கொடுப்பீர்கள். பண விடயங்கள் அல்லது உறவினர்கள் தொடர்பான முக்கிய தகவல்களைக் கேட்கலாம். சில பொருள்களை மறதியாக வைத்துவிட்டுத் தேடலாம். கனவுத் தொல்லையுண்டு.

**கடகம்:**
அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். உறவினர்கள் சிலரை எதிர்பாராமல் பார்க்க நேரிடலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். கடந்த காலத்தில் உங்களிடம் உதவி பெற்ற ஒருவர் இப்போது பதில் உதவி செய்யலாம். நண்பர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியலாம். பயணச் செலவு உண்டு.

**சிங்கம்:**
சிலரிடம் உங்களின் பிரச்சினைகளைச் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். உறவினர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான பலன் கிடைக்கலாம். பெண்கள் உதவி கிட்டும். ஊக்கம், உற்சாகத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**கன்னி:**
நண்பர்களுக்காக அல்லது முன்பின் தெரியாதவர்களுக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம். செய்ய நினைத்த வேலை ஒன்றைச் சோம்பலால் திடீரென மாற்றி அமைக்கலாம். கையிலிருக்கும் பணத்தைத் தாராளமாகச் செலவு செய்து விட்டுப் பிறரிடம் கடன் வாங்கலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**துலாம்:**
விளையாட்டாகப் பேசிய விடயங்கள் விபரீதமாக அமைந்து விடலாம். ஒரு செலவை நினைத்துக் கவலைப்படும் நேரத்தில் மற்றொரு செலவைச் சந்திக்கலாம். சிலரைப் பார்க்க முற்பட்டு அவர்கள் இல்லாமல் திரும்ப நேரிடலாம். குடும்பத்தினருடன் சண்டை, சச்சரவுகள் ஏற்படலாம். ஆசைப்பட்ட ஒன்று நடக்காமல் ஏமாற்றம் அடையலாம்.

**விருச்சிகம்:**
நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். நீண்டநாளைய உழைப்பு ஒன்றுக்கு இன்று பலன் கிடைக்கும். மங்கையர் வழியில் அல்லது மனைவி வழியில் திடீர்ச் செலவுகளைச் சந்திக்கலாம். போட்டிகள், எதிர்ப்புகள் விலகும் நாள். விருந்து, விசேடங்களால் வீட்டில் கலகலப்பு குடிகொள்ளும். அனுகூலமான நாள்.

**தனுசு:**
எதையும் வெற்றிகரமாகச் சமாளிக்கும் வல்லமை அதிகரிக்கும். நோய் உபாதைகள் நீங்கித் தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். பலமுறை அலைய நேரிடும் என நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிந்து விடலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது வாகன வசதி கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். கலகலப்பான அனுபவம் உண்டு.

**மகரம்:**
எதையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்துச் செய்யவேண்டிய நாள். வெளியூர்களில் இருக்கும் உறவினர் ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். மற்றவர்கள் செய்யும் காரியம் ஒன்றைப் பார்த்து நீங்களும் அதையே செய்ய முற்படுவீர்கள். பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம்.

**கும்பம்:**
சிலர் உங்களின் செயற்பாடுகளைப் பாராட்டலாம். பெரியளவில் எதிர்பார்த்த விடயம் ஒன்று பிசுபிசுத் துப் போகலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வேலை நெருக்கடிகளால் பரபரப்பாகச் செயற்படலாம். மற்றவர்களை வெறுப்பேற்ற வேண்டும் என்பதற்காகவே சில காரியங்களைச் செய்வீர்கள்.

**மீனம்:**
மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். கணவன், மனைவி இடையே அன்னியோன்யம் உண்டாகும். மற்றொருவர் வேலையையும் நீங்கள் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யலாம். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

# வாடகைக்கு வீடுமின்றி அந்தரிக்கும் மக்கள்

மனித வாழ்க்கையின் அத்தியாவசியங்களில் இருப்பிடமும் ஒன்றாகும். அதுவும் ஓலைக்கொட்டிலாக இருப்பினும் சொந்த வீட்டில் வாழ்வது போன்ற சுகம் போல வேறொன்றும் இல்லை. கூழைக் குடித்தாலும் சொந்தக் குடியில் வாழ்வதுபோல் வராது என்பது முன்னோர்களால் அனுபவித்துக் கண்டு தெரிவித்த உண்மை.

'சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப்போல வருமா? எந்நாடு என்றாலும் நம் நாட்டைப்போல வருமா?' இது சினிமாக் கவிஞனின் கருத்து. இதில் எவ்வளவு ஆழமுள்ளது என்பது ஒவ்வொரு இடம் பெயர்ந்தவரின் மனதிலிருந்தும் எழும் ஆதங்கங்களில் இருந்து உணரமுடியும்.

எமது நாட்டில் 1983ஆம் ஆண்டு தொடங்கிய இடப்பெயர்வுகள் இன்னமும் முடிவடையாத நிலையிலேயே காணப்படுகின்றது.

நான்காவது தசாப்தத்தை நெருங்கிக் கொண்டுள்ள நிலையில் இடம்பெயர்ந்த மக்களின் மூன்றாவது தலைமுறையினர் கூடத் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் அந்நிய வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அந்நியர் வீடுகளில் வாழும் போது ஏற்படும் அவலங்கள் அதனை அனுபவிப்பவர்களுக்கே தெரியும். இடம்பெயர்ந்து நிர்க்கதியாகி அலைவது எமது உறவுகள்தான் என்ற சிந்தனை இதுவரை எவருக்கும் ஏற்படவில்லை. வாடகை மாதாந்தம் அறவிடப்பட்டாலும் வீட்டுக்காரர் போடும் கண்டிஷன்களை இடம்பெயர்ந்த வாடிக்கையாளர்கள் கட்டாயம் செவிமடுத்தே தீரவேண்டும். கண்டிஷனில் கொஞ்சம் சறுக்கினாலும் அடுத்த நிமிடம் வீட்டை விட்டு எழும்ப வேண்டிய நிலை ஏற்படுகின்றது. வாடகைக்கு இருப்போர் காணியில் உள்ள பயன்தரு மரங்களில் எந்தவொரு பொருள்களையும் எடுக்கக் கூடாது. வீடுகளுக்குள் நாற்காலிகள் உட்படத் தளபாடங்கள் பாவிக்கக் கூடாது. நிலத்தில் அமர்ந்திருந்தாலும் சுவருடன் சாயக்கூடாது உட்படப் பல கண்டிஷன்கள் வீட்டுக்காரரால் போடப்படுகின்றன. அரண்மனை போன்ற வீடுகளில் வசித்தவர்கள் கூட இந்த கண்டிஷன்களை ஏற்று இரண்டு அறை, விறாந்தையுடன் கூடிய சிறிய வீடுகளில் வசித்து வருகின்றனர். குருபகவானின் இடப் பெயர்ச்சிகள் வருடா வருடம் மாறுவது போல இடம் பெயர்ந்தவர்களும் காலத்துக்குக் காலம் வேறு வேறு வீடுகளுக்கு மாறிக் கொண்டிருக் கின்றனர்.

நாட்டில் அமைதியான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இந்தச் சூழ்நிலையில் மிக மிக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் இடம்பெயர்ந்து வேறொரு வீடுகளில் தங்கியிருப்பவர்களே.

இடம்பெயர்ந்த வேளையில் அன்புருக வரவேற்று வீட்டைப் பாதுகாக்கும் நோக்கில் மாடி வீடுகளைக் கூட மானசீகமாகக் கையளித்து குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறியவர்கள் தற்போதைய சூழ்நிலையில் தாம் வசிக்கும் இடங்களிலிருந்து வீட்டினை விரைவில் விடுமாறு கடிதம் எழுதி வருகின்றனர்.


பல வருடங்களாக வீட்டினைப் பாதுகாத்த குடும்பங்கள் மறுப்புத் தெரிவிக்காமல் வீட்டினைக் கையளிக்கும் அதனை பெற்றுக் கொள்ளும் வீட்டு உரிமையாளர்கள் தாங்கள் குடியிருக்காமல் அதனை விடுதிகளாக மாற்றுகின்றனர். மட்டுமன்றி வேறு தேவைகளுக்கும் பயன்படுத்த ஆயிரக் கணக்கான தொகைக்கு வாடகைக்கு விடுகின்றனர்.

இவ்வாறு செய்யப்படுவதால் தற்போதைய சூழ்நிலையில் வீடுகளை வாடகைக்குக் கூடப் பெறமுடியாமல் தெரிந்தவர்களின் காணிக்குள் மண் வீடுகள் அமைத்து வாழ வேண்டிய இக் கட்டான நிலையில் எமது மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்தம் முடிவடைந்துவிட்டது. இன்னும் இரண்டு வருடங்களில் அனைத்து மக்களும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படுவர் என்ற அரசின் அறிவிப்பானது இடம்பெயர்ந்த மக்களுக்கு இனிப்பான செய்தியாக இருந்தது.


அறிவிப்பு வெளியாகி இரண்டு வருடங்களாகியும் நலன்புரி நிலையங்களிலிருந்த மக்களே இன்னமும் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத போது உறவினர், நண்பர்கள் வீடுகளில் உள்ளவர்களைச் சொந்த இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதிப்பது என்பது சாத்தியமல்ல என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது. அண்மையில் யாழ். மாவட்டத்தின் முதற் குடிமகன் எனப்படும் அரச அதிபர் அறிவிப்பால் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் வேதனைக்கு உள்ளானார்கள். "இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக மீளக்குடியமர இன்னும் பத்து வருடங்கள் செல்லும்" என்ற அறிவிப்பே ஒவ்வொரு இடம்பெயர்ந்த மக்களையும் மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது. குறிப்பாக குடாநாட்டின் வடக்குப் பகுதியான வலிகாமப் பகுதி மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி 25 வருடங்களுக்கு மேலாகிவிட்டன. இந்த அறிவிப்பானது மேலும் பத்து வருடங்கள் என்றால் மொத்தம் 35 வருடங்கள் செல்லும். அந்த வேளையிலும் மீளக்குடியமர்வதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

அறிவிப்பு உண்மையாயின் வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் மூன்றாவது தலைமுறை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யின்ரே அந்தக் காலப்பகுதியில் மீளக் குடியமரும் நிலை தோன்றும். இடம்பெயர்ந்த வேளையில் வந்த மக்கள் திரும்பிச் சென்றாலே தமது சொந்த இருப்பிடங்களைக் கண்டுபிடிக்க முடியாத நிலை இருக்கும் போது மூன்றாவது தலைமுறையினர் சென்று தமது இருப்பிடங்களைக் காணியைக் கண்டுபிடிப்பார்களா என்ற கேள்வியும் மனதில் எழுந்துள்ளது.

காணியைக் கண்டு பிடித்தாலும் அதனைப் பழைய நிலைக்குக் கொண்டு வர எவ்வளவு காலம் எடுக்கும் என்பது எவரும் அறியாத விடயமல்ல.

நாம் வசதிகளுடன் வாழ்ந்தால் போதும் அடுத்தவர் எப்படிப் போனாலும் போனாலும் பரவாயில்லை என்ற சிந்தனையுள்ள அரசியல் வாதிகளும் அரச அதிகாரிகளும் உள்ளனர். குடா நாட்டில் உயர்பதவி வகிப்பவர்களும் அரசியல் வாதிகளும் எம்மைப் போல் நீண்ட காலமாக இடம்பெயர்ந்து இன்னொருவர் வீட்டில் கண்டிஷன்களுடன் வாழ்ந்திருந்தால் எமது கஷ்டங்கள்



அவர்களுக்குத் தெரிந்திருக்கும். தமது வீட்டுக்கு மீளக்குடியமர அக்கறை எடுத்திருப்பர். அந்த எண்ணம் எழக்கூடிய எவரும் குறிப்பிட்ட பதவிகளில் இருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

அப்படிப்பட்ட ஒரு சம்பவம் அண்மையில் நடந்துள்ளது. இந்தக் கட்டுரையில் அந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுவது சாலச்சிறந்தது எனக் கருதுகிறேன்.

பளைப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகள் தொடர்பாக ஆராய மீள்குடியேற்ற அமைச்சரும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும் அண்மையில் பளைக்கு வருவதாகத் தினசரிகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அத்துடன் இடம்பெயர்ந்த மக்களும், மீளக்குடியமர்ந்த மக்களும் தமது அன்றாடத் தேவைகள் குறித்து எழுத்து மூலமும் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம் எனவும் அந்தச் செய்திகளில் பிரசுரமாகியிருந்தன. அன்றைய தினத்தில் மீளக் குடியமர்ந்த மக்களை விடப் பிரதேசத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர். தங்களை விரைவில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வலியுறுத்தவே அந்த மக்கள் வந்திருந்தனர்.

அந்த நடமாடும் சேவையில் கலந்துகொண்ட வெடி பொருள்கள் அகற்றும் பிரிவின் அதிகாரி தெரிவித்த கருத்து மக்களை வேதனையில் ஆழ்த்தியது. ஒவ்வொரு பிரிவினையும் ஆய்வு செய்ய மாதக் கணக்கில் செல்லுமெனவும் அதன்பின்னர் வெடிப் பொருள்கள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்திருந்தார்.

அந்தக் கருத்தினை அமைச்சர்களும் அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டிருந்தாலும் மக்கள் அக்கூற்றினை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்தது.

யுத்தம் முடிவுற்றதும் சர்வதேச நாடுகள் மக்களை துரிதகதியில் மீளக்குடியமர்த்த வெடிபொருள்கள் அகற்றும் பிரிவினரையும் வெடிபொருள்களைக் கண்டு பிடிக்கும் இயந்திர வாகனங்களையும் அனுப்பி வைப்பதாகத் தெரிவித்தன. அவையொன்றும் இலங்கைக்கு வந்து சேரவில்லையா? எமது பிரதேச அரச உயர் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் எமது மக்களில் அக்கறை இருந்திருந்தால் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்திருப்பர்.

தமக்கு ஆதரவான கருத்துக்களை மட்டும் தெரிவிப்பதில் அக்கறையுள்ளவர்கள் இடம்பெயர்ந்த மக்களில் அக்கறை கொள்வார்களா? அவர்களின் முழுச் சிந்தனையும் தமது சொகுசு வாழ்க்கையே தவிர அவல வாழ்க்கை வாழ்பவர்களில் அல்ல என்பது திடமான உண்மை.

இடம்பெயர்ந்த மக்களின் அவலத்தில் அக்கறை உள்ளவர்களாயின் நிச்சயம் இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் எப்பவோ தமது வசிப்பிடங்களில் மீளக்குடியமர்ந்திருப்பர்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்றாக ஒரே குடும்பமாக வாழ்ந்த மக்கள் இன்று மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். ஊர்மக்கள் ஒன்றுகூடிச் செய்த பல கருமங்கள் பத்திரிகைகள் மூலமே ஒன்றுகூட வேண்டிய அவலநிலை. பத்திரிகைகள் மூலம், தகவல்கள் மூலம் ஓரிடத்தில் கூடி அளவளாவும் நிலையில் உள்ளனர். எத்தனையோ பேர் எங்கு இருக்கிறார்கள் என்பது கூடத் தெரியாத நிலையில் கால் நூற்றாண்டுக் காலமாக ஏங்கும் உறவுகளும் அயலவர்களும் வாழும் நிலை. இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இருப்பிடங் களுக்குத் திரும்பும் வேளையில் அங்கு பழைய முகங்களை விடப் புதிய முகங்களே அதிகம் காணப்பட வாய்ப்புகள் உள்ளன.

எவ்வாறாயினும் இடம்பெயர்ந்து பல்வேறு அல்லல்களுக்கும் உள்ளாகிவரும் மக்கள் இவ்வருட இறுதிக்குள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்ப அனைத்துப் பிரிவினரும் முயற்சி செய்ய வேண்டும் என்பது மக்களின் அவா.

தை பிறந்துள்ள இந்த வேளையில் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வழி பிறக்குமா?.

**ஐயந்தன்**

# சிரிக்கலாம் சிந்திக்கலாம்



ஓர் ஊரில் விசித்திரமான ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் கொஞ்சம் வித்தியாசமான சுபாவமுடையவர். எப்போது பார்த்தாலும் முகத்தை உம் என்று வைத்துக்கொண்டிருப்பார். மிகச்சிறப்பான நகைச்சுவை சொன்னாலும் சிரிக்கமாட்டார்.

''என்னைச் சிரிக்க வைத்துவிடுங்கள் பார்க்கலாம்'' என்று சவால் விடுகிறமாதிரி இருக்கும் அவரது பார்வை. அந்தளவுக்குப் பிடிவாதமாக இருப்பார். ஆனால் ஓர் இரகசியம், அவரது எலும்பு விலாபகுதியில் யாராவது தொட்டுவிட்டால் போதும் அவ்வளவுதான். விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்துவிடுவார். சத்தம் போட்டுச்சிரிப்பார் துள்ளியெழுந்து சிரிப்பார். இத்தகைய விசித்திரமான பழக்கம் அவரிடம் உண்டு. இதைப்பற்றி யோசிக்கத் தொடங்கிய போதுதான் ஒரு சந்தேகம் வந்தது. அதாவது ஒருவருக்குக் 'கிச்சுகிச்சு' மூட்டினால் அவர் சிரிக்கிறார் அது ஏன்? ஒரு நகைச்சுவை சொன்னால் சிரிப்புவருகிறது. அதுமாதிரித்தான் ஆனால் விலாவைத் தொட்டால் எப்படிச் சிரிப்பு வருகிறது? நகைச்சுவையில் சிரிப்பதற்கான செய்தி இருக்கிறது. ஆனால் விலாவில் என்ன இருக்கிறது? என்ற கேள்விக்கு விளக்கம் கொடுகிறார் ஒரு நரம்பியல் நிபுணர். அதாவது அந்த உணர்ச்சியும் நரம்பு மண்டலத்தின் வெளிப்பாடுதான்!

நரம்பு மண்டலம் என்ன செய்கிறது தெரியுமா? உடம்பில் ஒருவகை தசை இயக்கங்களுடன் உருவாகின்றன.

அதன் மூலமாகச் சிரிப்பு, அழுகை, எரிச்சல் போன்ற உணர்வுகள் கூட வெளிப்படுகின்றன. எனவே சிரிப்பும் அப்படித்தான் வெளிப்படுகிறது ''சிரிப்பைப் பொறுத்தவரையில் உடம்பிலே உண்டாகின்ற மாறுதல்கள் என்ன தெரியுமா?''

முகத்திலும் மூச்சுக்குழாய்களிலும் உள்ள தசைகள் விரிந்து சுருங்குகின்றன ''கிச்சு கிச்சு மூட்டும்போது இது மாதிரியான மாறுதல்கள் உண்டாவதற்கு மூளை கட்டளை இடுகிறது.

இன்னொரு சந்தேகமும் எழுகின்றது.

'' உடம்பில் சில இடங்களிலே கிச்சு, கிச்சு மூட்டினால் தானே மனிதன் சிரிக்கிறான்...? அவன் கையைத்தொட்டல் சிரிப்பதில்லை தலையைத் தொட்டல் சிரிப்பதில்லை. இதற்கு என்ன காரணம் என்றால் நமது உடம்பிலே சில இடங்களில் நரம்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். அதைத் தவிர்த்த அந்த நரம்புகள் அமைந்திருக்கும் விதமும் காரணம்.

''அந்த நரம்புகள் மட்டும் அப்படி அமைந்திருப்பதற்கு இதுவரையில் அதற்கான காரணம் என்ன என்பதை யாரும் கண்டுபிடிக்கவில்லை'' பரிணாம வளர்ச்சியில் எங்கேயோ இதற்கான விடை ஒழிந்துகொண்டிருக்கிறது. அடுத்து இன்னொரு சந்தேகம்...!

நரம்புகளைத் தூண்டும் போது எந்த உணர்ச்சியும் உண்டாகலாம் இல்லையா...? ஆனால் எல்லோரும் குறிப்பாகச் சிரிக்கிறார்கள்... அதற்குக் காரணம் ''உடம்பில் ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு தொடு உணர்ச்சியைப் பெற்றிருக்கும் அதைத்தவிர மனவியல் காரணமும் இதிலே உண்டு.

''ஒரு மூன்றுமாதக் குழந்தையை நாங்கள் கிச்சு கிச்சு மூட்டும்போது தம்முகத்தைப் பார்த்து உர்...ன்னு வைத்திருப்பதில்லையே... அந்த நேரம் நாங்களும் சிரிக்கிறோம். குழந்தையையும் சிரிக்கச் செய்கிறோம். அதனாலே இடுப்பிலே கிச்சு கிச்சு மூட்டினால் அது சிரிப்புச் சம்மத்தப்பட்ட செயல் எனக் குழந்தை மனதில் பதிந்துவிடுகிறது.

''இன்னொரு சந்தேகம்? அடுத்தவர்கள் எங்களை விலாவிலே தொட்டால் சிரிப்புவருகிறது. எங்களை நாங்களே தொட்டுப்பார்த்தால் சிரிப்புவருவதில்லை இது ஏன்?'' என்று ஆராய்ந்தார். அதாவது நமக்கு நாங்களே கிச்சு கிச்சு மூட்டுவதில்லையே. இதற்கு என்ன காரணம் என்றால் தாங்குசக்தி உணர்ச்சி வெளிப்பாடு இதெல்லாம் மனிதனுக்கு மனிதன் வித்தியாசப்படுகிறது. சில இடங்களில் சிரிப்பு வந்தால் அடக்கிக்கொள்கிறோம். சில இடங்களில் மனது சிரிக்க வில்லை என்றால் கூட முகம் சிரிக்கும்... உதாரணத்திற்கு ஒருபெண் நடனமாடுகிறாள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த நடனமங்கை சிரிக்க வேண்டிய கட்டத்தில் சிரிப்புப் பாவத்தை அற்புதமாக வெளிப்படுத்துகிறாள். மனதிற்குள் மகிழ்ச்சி உணர்வு இல்லையென்றால் கூட முகத்தில் அதைக் காட்ட முடிகிறது. இதெல்லாம் மனதை 'கண்டிஷனிங்' செய்துகொள்வதைப்பொறுத்தது! என நரம்பியல் நிபுணர் விளக்கம் கூறுகிறார்.

சிரிப்புப் பற்றி சிந்திக்க வேண்டிய செய்திகள் அதிகம் இருக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டோம். ஒரு நண்பர் தனது குடும்பத்துடன் ஒரு சமயம் திருமண விழாவிற்குச் சென்றார். நண்பனின் திருமணம் என்பதால் முதல்நாளே சென்றுவிட்டார். கல்யாண மண்டபத்தில் சமையற் பொருள்கள் வைத்திருந்த பகுதியில் கொஞ்சம் இடம் இருந்தது. அங்கே உறங்கினார். நள்ளிரவு வேளையில் பக்கத்தில் உறங்கிக்கொண்டிருந்தவர் திடீரென்று சிரிக்க ஆரம்பித்தார். யாரோ கிச்சு கிச்சு மூட்டுவதுபோல் இடுப்பை நெறித்தார், உடம்பை வளைத்து நடனம் ஆடுவதுபோல ஆடினார்.

எல்லாக் கட்டத்துக்கும் சிரித்துக்கொண்டே ஆடினார். கடைசியாக ஒரு கட்டத்தில் ''அப்பாடா'' என்று நிம்மதியாக இருந்தார். சிரிப்பு ஓய்ந்தது. நண்பர் குடும்பத்துக்கு ஒன்றும் புரியவில்லை. மெல்ல அவர்கள் அருகில் நெருங்கி ''உங்களுக்கு என்ன நடந்தது?'' என்று வினவினார்கள். ''அது... ஒன்றுமில்லை நீண்ட நேரமாக எனது சேட்டுக்குள் துடித்துக்கொண்டு பக்கத்திலே தொந்தரவு செய்துகொண்டு இருந்தது இப்பத்தான் வெளியே போனது'' என்று நிம்மதியாகச் சொன்னார்.

''அது என்ன? என்று அவர்கள் கேட்டனர் அதற்கு அவர் ''ஒரு சின்னக் கரப்பான் பூச்சி!'' தான் அது என்று கூறினார்.

**கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்கள் கர்ப்பமாக நகைச்சுவையும் உதவும்...

''வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்'' என்பது பழமொழி. அந்த நகைச்சுவை உணர்வானது பெண்களைக் கர்ப்பம் தரிக்கச் செய்யும் அருமருந்தாகவும் உதவுகிறது. பெண்கள் கர்ப்பம் அடையச் சில கோமாளிகள் உதவி புரிந்து வருகின்றனர்.

சிரிப்பு என்பது நோய்களைத் தீர்க்கும் சிறந்த மருந்தாகவே செயற்பட்டு வருகிறது. அதன் மூலம் பெண்களும் கர்ப்பம் தரிக்கின்றனர் என்பது ஆய்வியல் உண்மை.

நகைச்சுவை உணர்வினால் கர்ப்பம் அடையலாம் என்பது குறித்த ஆய்வினை, இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ''டாக்டர் ஷேவாச் பரைட்லர்'' தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர்.

இக்குழுவினர் சோதனைக் குழாய்மூலம் குழந்தை பெறுவதற்குச் சிகிச்சை பெற்றுவரும் பெண்களிடம் ஆய்வு நடத்தினர். இவ்வாறாகச் சிகிச்சை பெற்ற 219 பெண்கள் ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டனர்.

அறிவியல் ரீதியாக மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுவரும் பெண்களுக்கு மருத்துவ சிகிச்சையின் இடையே கோமாளிகளின் நகைச்சுவைகளும் வழங்கப்பட்டன. இதற்காக நகைச்சுவை உணர்வு மிக்க கோமாளிகள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

அவர்கள் சிகிச்சை பெற்றுவரும் பெண்களிடம் நகைச்சுவை உணர்வுடன் பேசி பெண்களின் மனதில் உள்ள அழுத்தங்களைக் காற்றில் பறக்கச் செய்தனர். இவ்வாறு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தவர்களில் 36 சதவீதமான பெண்கள் கருத்தரித்தனர். கோமாளிகளின் நகைச்சுவையானது நல்ல பலனைத் தந்தது.

பொதுவாகவே பெண்கள் இது போன்ற நேரங்களில் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். மாறாக சோதனைக் குழாய் முறையிலாவது தாங்கள் கர்ப்பமாக வேண்டும் என்ற ஆதங்கத்துடன் பெண்கள் இருப்பதால் அவர்களிடையே மன அழுத்தமானது மேலோங்கிக் காணப்படுகிறது.

மன அழுத்தத்தைக் குறைத்து அவர்களை அமைதி பெறச் செய்து மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்வதே கோமாளிகளின் பணி. இதற்காகவேதான் கோமாளிகள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

கோமாளிகளின் நகைச்சுவை உணர்வுதான் பெண்களின் மன அழுத்தத்தைப் போக்கி, அவர்களைக் கருத்தரிக்கச் செய்தது என்று மருத்துவர் ''பரைட்லர்'' தகவல் வெளியிட்டுள்ளார்.

# உடல் இளைக்க வேண்டுமா? இஞ்சிச் சாறு சாப்பிடுங்கள்



உடல் பருமனாக உள்ளதே என்று நீங்கள் கவலைப்பட்டால் அந்தக் கவலை இனி உங்களுக்கு வேண்டாம். இஞ்சிப் பிரியர் ஆக நீங்கள் இருந்தால் இந்தக் கவலை உங்களுக்கு இல்லை.

இஞ்சிச் சாறை பாலில் கலந்து சாப்பிட, வயிறு நோய்கள் தீரும். உடம்பு இளைக்கும்.

இஞ்சித் துவையல், பச்சடி செய்து சாப்பிட மலச்சிக்கல், களைப்பு, மார்பு வலி தீரும்.

இஞ்சிச் சாற்றில், வெல்லம் கலந்து சாப்பிட வாதக் கோளாறு நீங்கிப் பலம் ஏற்படும்.

இஞ்சியைப் புதினாவோடு சேர்த்துத் துவையலாக்கிச் சாப்பிடப் பித்தம், அஜீரணம், வாய் நாற்றம் தீரும். சுறுசுறுப்பு ஏற்படும்.

இஞ்சியைத் துவையலாக்கிச் சாப்பிட வயிற்று உப்புசம், இரைச்சல் தீரும்.

காலையில் இஞ்சிச் சாற்றில் உப்பு கலந்து மூன்று நாள்கள் சாப்பிடப் பித்தம், தலைச்சுற்று, மலச்சிக்கல் தீரும்.

உடல் இளமை பெறும்.

# காமசூத்ரா; வருமுன் காப்போம்

கணினிகளின் செயற்பாடுகளைத் திறன் இழக்கச் செய்யும் காமசூத்ரா வைரஸ் கிருமி ஆனது தற்போது Real kamasutra.pps.exe என்ற பெயரில் மீண்டும் களம் இறங்கியுள்ளது.

கடந்த 2006ம் ஆண்டு, கணினி உலகில் மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட வைரஸ் காமசூத்ரா வைரஸ்.

அச்சமயம், காமசூத்ரா என்றழைக்கப்பட்ட இந்த வைரஸ் கிருமிகளினால் ஏராளமான கணினிகளின் செயல்பாடுகள் அனைத்தும் திறன் இழந்தன என்பது குறிப்படத்தக்கது.

இந்நிலையில் அது போன்ற வைரஸ் கிருமியானது மீண்டும் அதே பெயரில் வந்துள்ளதாக, அத்துறை வல்லுநர்கள் தக வல் தெரிவித்துள்ளனர்.

தற்போது வந்துள்ள வைரஸ் கிருமியாது ''Real kamasutra.pps.exe'' என்ற பெயரில் களம் இறங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இது போன்ற வைரஸ் கிருமி கள், பெரும்பாலும் தரவிறக்கம் செய்யும் பைல்களையே அழிக் கின்றன.

# சீனா வளர்ச்சிக்கு கொடுத்த விலை; அமில மழை

சீனா தனது அபரிமிதமான பொருளா தார முன்னேற்றத்திற்கு மிக அதிகமான விலை கொடுத்திருக்கிறது. அதன் 258 நகரங்களில் அமில மழை பெய் திருப்பதாக ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நிலக்கரி எரிவதால் சல்பர் டை ஒக்சைடு மற்றும் நைட்ரஜன் ஒக்சைடுகள் வெளியேறும். இவை காற்றில் கலக்கும் போது மழை பொழிந்தால் நீரோடு சேர்ந்து சல்ப்யூரிக் மற்றும் நைட்ரிக் அமிலங்களாக மாறும். உலகளவில் நிலக்கரியை அதிகமாகப் பயன் படுத்தும் நாடுகளில் சீனா முக்கிய இடம் வகிக்கிறது.

சீனாவில் ஆண்டுதோறும் 300 கோடிடன் நிலக்கரி பல்வேறு தொழில்களில் பயன்படுத்தப்படுகிறது. இதனால் உலகில் அதிகளவில் அமிலமழை பெய்யும் பகுதிகளில் சீனா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 2005 இன் அறிக்கை ஒன்று நாட்டின் 28 சதவீத பகுதிகள் குறிப்பாக யாங்க்ட்ஸி ஆற்றுப் பகுதி மிக மோசமாக அமில மழையால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது.

இந்நிலையில் சமீபத்தில் ப்யூஜியான் மாகாணத்தின் ஷியாமென் நகரில் நடந்த ஓர் ஆய்வு அதிர்ச்சியான தகவல்களை அளித்துள்ளது. கடந்த 2010இன் முற்பகுதி மழைக் காலங்களில் ஒவ்வொரு துளியிலும் அமிலம் கலந்திருந்ததாக அந்த ஆய்வு கூறுகிறது. கட்டடங்க ளில் படிந்த இந்த அமிலத் துளிகள் துருப்பிடித்தது போலக் காணப் படுகின்றன. அங்குள்ள பாறைப் பிளவில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய புத்தர் சிலையின் மீதும் இந்த அமில மழைத் துளிகள் விழுந்ததால் அதன் மூக்குக் கறுப்பாகி விட்டது. சிலையின் தலைமுடியில் உள்ள சுருண்ட பகுதிகள் கீழே விழுந்து விட்டன. இதுவரை செந்நிறமாக இருந்த அந்தச் சிலை தற்போது சாம்பல் நிறமாக மாறி வருகிறது.

# வேலைக்கு ஓய்வு கொடுங்கள்

அதிக நேரம் அமர்ந்திருந்து வேலை செய்பவர்கள் இடைவேளை எடுத்துக் கொள்வது அவசியம்

நீண்ட நேரம் அமர்ந்திருந்து வேலைகளில் ஈடுபடுவோர் சிறு சிறு இடைவேளைகளை எடுத்துக் கொள்வது ஆரோக்கியமா னது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறு சிறு இடைவேளைகளை எடுத்துக் கொள்வதன் மூலம் உடலை ஆரோக்கியமாகப் பேண முடியும் என சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக இருதயம் மற்றும் முதுகுப் பகுதிகளுக்கு இவ்வாறான இடைவேளைகளின் மூலம் நன்மை ஏற்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஒரு நிமிடம் எழுந்து நிற்றல் அல்லது படியேறுதல் போன்ற நடவடிக்கைகள் கூட சிறந்த உடற் பயிற்சியாக அமையும் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நீண்ட நேரம் அமர்ந்திருப்பது உடல் நலனுக்குத் தீங்கினை ஏற்படுத்தக் கூடுமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக் கழக ஆய்வாளர் ''டாக்டர் ஜெனீ வய்வ்'' இந்த ஆய்வை நடத்தியுள்ளார். இருபது வயதுக்கும் மேற்பட்ட சுமார் ஐயாயிரம் பேரிடம் ஆய்வுகள் நடத்தப் பட்டுள்ளன. சீரான உடற்பயிற்சி இருதய நோய்களைக் கட்டுப்படுத்தும் என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# தவளை பாதி; நண்டு பாதி சேர்ந்த கலவை இது



தவளை நண்டு என்ற ஓர் அதிசய உயிரினம், தவளை மற்றும் நண்டின் கலப்பு தோற்றத்துடன் காட்சியளிக்கும் தன்மையுடையன. இவை கேரளாவை ஒட்டியுள்ள வங்கக்கடல் பகுதிகளில் வாழ்ந்து வருகிறன என்பது தற்போது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

ஆழ்கடலில் வாழும் அரியவகை உயிரினங்கள் பற்றிய ஆய்வுகளை மத்திய கடல்வாழ் உயிரின ஆராய்ச் சிக் கழகம் தொடர்ந்து செய்து வருகி றது. ''சாகர் சம்ப்டா'' என்ற ஆராய்ச்சிக் கப்பலின் உதவியுடன் களமிறங்கிய ஆராய்ச்சிக் குழுவினர், கேரள மாநிலம் கொச்சி அருகே அமைந்துள்ள வங்கக்கடலில் தீவிரமாக ஆய்வு நடத்தி னர்.

அந்த ஆய்வின்போது அரியவகை உயிரினங்களான கத்தி மீன், வௌவால் மீன், தவளை நண்டு போன்றவை தற்போதும் ஆழ்கடலில் வாழ்ந்து வருகிறன என்பது தெரிய வந்தது. இந்த அற்புத உயிரினங்கள் 116 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உயிரினங்கள் ஆழ்கடலில் சுமார் 265 மீற்றர் முதல் 457 மீட்டர் ஆழத்தில் வாழக் கூடியவை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். மேலும் வௌவால் மீன்களில் 9 வகைகள் உண்டு என்றும் அவற்றில் 4 வகை இந்தியாவில் காணப்படுகிறது என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இவை கடற்பாசி, நுண்ணிய கடல் வாழ் புழுக்கள் மற்றும் சிறிய மீன்களையே அதிகம் உணவாக எடுத்துக் கொள்கிறன. இந்தியப் பெருங்கடல், பசிபக் பெருங்கடல், செங்கடல் மற்றும் வியட்நாம், மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா, தைவான், சீனாவை ஒட்டியுள்ள பகுதிகளில் இவை அதிகமாகக் காணப்படுகிறது என்றும் வௌவால் மீன்கள் பற்றி ஆராய்ச்சிக் குழுவினர் தங்களின் கண்டுபிடிப்பை விளக்கினர்.

கத்தி மீன்களைப் பற்றி அவர்கள் கூறும் போது இவை மன்னார் வளைகுடா பகுதிகளில் அதிகம் காணப்படுகிறது என்றும், பவளப்பாறை மற்றும் அதிகமான சேற்றுப் பகுதிகளில் தான் இவை உயிர் வாழ்கிறது என்றும் அவர்கள் கூறினர்.

வெள்ளை நிறத்தில் தட்டையாகக் காணப்படும் இந்த மீன்களை உண்ண முடியாது. இவை அழகுக்காக வளர்க்கப் படும் மீன்களின் இனத்தைச் சேர்ந் தவை. இவை சாதாரண மீன்களைப் போல் நீந் தாமல் செங்குத்தாக நீந்தும் தன்மையுடையன என்று ஆராய்ச்சியாளர்கள் கத்திமீனின் சிறப்புகளை விளக்கி கூறினர்.

மற்றொரு அரிய உயிரினமான தவளை நண்டு பற்றிக் கூறும் போது இவை தவளை மற்றும் நண்டின் கலப்புத் தோற்றம் கொண்டது. இவற்றில் 11 வகைகள் உண்டு. இதில் 3 வகை இந்தியாவிலேயே காணப்படுகிறன என்றும் அவர்கள் கூறினர்.

இருப்பினும், ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறனஒ. இந்த ஆராய்ச்சியின் மூலம், பல அரிய மற்றும் அற்புத உயிரினங்கள் கண்டுபிடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் பணியில் பருத்தித்துறைப் பிரதேச செயலகம்

பிரதேச செயலகங்களாவன 58 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் நிர்வாகத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காகவும் பிரதேச மட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்களின் பங்களிப்பினை ஏற்படுத்தவும் ஸ்தாபிக்கப்பட்ட அமைப்புக்களாகும். மக்களின் பங்களிப்பு டனான செயற்பாடுகள் மூலம் புதிய பிரதேச அபிவிருத்திச் செயற்பாடுகளை விஸ்தரிக்கவும் மக்களின் தேவைகளை விரைவாகப் பூர்த்தி செய்யவும் ஏதுவாக மக்கள் பணியை வட மராட்சியில் உள்ள பிரதேச செய லகங்கள் ஆற்றி வருவது குறிப் பிடத்தக்கது, பாராட்டப்படக் கூடியது. அந்தவகையில் மக்களுக்கான அரச பணியை 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற கூற்றுக்கிணங்க பருத்தித்துறைப் பிரதேச செயலகம் அரும் பணியாற்றி வருவது பாராட்டப்படக்கூடிய அம்சமாகும்.

இந்தவகையில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் வரலாற்றுப் பின்னணியை நோக்கலாம். பருத்தித்துறைப் பிரதேச செயலகம் ஆரம்பத்தில் உதவி அரச அதிபர் பிரிவாக இருந்தது. அதன்பின் 01.06.1996 முதல் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டது. இதன் முதல் பிரதேச செயலாளராக அ. சிவநாதன் கடமையாற்றி இருந்தார். இவர் இந்தப் பிரதேச செயலகத்தில் ஒரு தசாப்த காலம் கடமையாற்றினார். இவரின் பின் மக்கள் சேவையில் பல பிரதேச செயலர்கள் இப்பிரதேச செயலகத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

25.05.2005 அன்று தொடக்கம் இந்தப் பிரதேச செயலகப் பிரதேச செயலாளராக எஸ்.வரதீஸ்வரன் கடமையாற்றி வருகின்றார்.

இவரின் நிர்வாகத்திறமை இப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு இன்றும் ஊன்றுகோலாக, தூண்டுகோலாக இருந்து வருகின்றது. இச் செயலகம் காரியாதிகாரி அலுவலகமாக இயங்கி வந்த காலப்பகுதியில் தனியார் கட்டடங்களிலேயே இயங்கி வந்தது. 1950 ஆம் ஆண்டு முதல் வெவ்வேறு இடங்களில் இயங்கி வந்துள்ளது.

1950 ஆம் ஆண்டு பருத்தித்துறைக் கடற்கரை வீதியிலும் 1960 ஆம் ஆண்டு 1ஆம் கட்டைச் சந்தியிலுள்ள தனியார் கட்டடத்திலும் 1965 ஆம் ஆண்டில் மருதடியில் அதாவது தற்போதைய முருகானந்தன் மருந்தகக் கட்டடத்திலும் 1976ஆம் ஆண்டு பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அருகிலும் 1987 ஆம் ஆண்டில் புலோலி கமநல சேவை நிலையத்திலும் 1991 ஆம் ஆண்டு மீண்டும் பருத்தித்துறை சிவன் கோயிலுக்கு அருகிலும் 1998 ஆம் ஆண்டு பருத்தித்துறை இ.போ.ச முன்பாக உள்ள தனியார் கட்டடத்திலும் 2007 ஆம் ஆண்டு ஜனவரியில் வட இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலும் இயங்கிவந்தது.

இதன் பின்னர் முன்னாள் யாழ்.அரச அதிபர் கே.கணேஷின் அயராத முயற்சியும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ்.வரதீஸ்வன் மற்றும் சமூகப் பற்றாளர்களின் விடாமுயற்சியும் அர்ப்பணிப்பான சேவையும் இந்தப் பிரதேச செயலகப் புதிய கட்டடம் அமைக்கப் பேருதவியாக இருந்தது.

அந்தவகையில் புதிய பிரதேச செயலகத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா 19.03.2004 ஆம் திகதி அன்று இடம் பெற்றது. இந்த நிகழ்வில் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஏற்பாட்டில் இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக் கிளையின் தலைவர் சுவாமி ஆத்மாகானந்தர் மகாரிஜி, அருட்தந்தை சோபன் ரூபஸ் அடிகளார், பிரதேச செயலாளர், செயலக உத்தியோகத்தர்கள், காணிக் கொள்வனவு உறுப்பி னர்கள் ஆகியோரின் பங்குபற்ற லுடன் சம்பிரதாயபூர்வ அடிக் கல் நடும்விழா இடம்பெற்றது.

**இந்தப் பிரதேச செயலகம் கடந்த 2010 ஆம் ஆண்டில் புதிய தொழில்நுட்பங்களுடன் இணைந்த வினைத்திறனும் பயனுறுதியும் கொண்ட பொதுச்சேவை என்ற தூர நோக்கைக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது.**

இதன்பின்னர் கட்டட வேலைகள் பூர்த்தியாக 11.02. 2008 ஆம் ஆண்டு அப்போதைய யாழ்.மாவட்ட அரச அதிபராக இருந்த கே.கணேஷினால் புதிய கட்டடம் நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது. இதற்கான நிதி காணிக் கொள்வனவுக் குழுவினால் சேர்க்கப்பட்டது குறிப் பிடத்தக்கது.

இந்தப் பிரதேச செயலகத்தில் ஸ்தாபனக் கிளை, புனர்வாழ்வுக்கிளை, திட்டமிடற் கிளை, நிதிக்கிளை, சமுர்த்திக் கிளை, சமூகசேவைக்கிளை, காணிக்கிளை, தொழிற்துறைக் கிளை, பதிவாளர்கிளை, வெளிக்கள உத்தியோகத்தர் கிளை எனப் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, குறிப்பிடப்பட்ட கிளைகள் தமது பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றன. இந்தப் பிரதேச செயலகம் 2010 ஆம் ஆண்டளவில் புதிய தொழில்நுட்பங்களுடன் இணைந்த வினைத்திறனும், பயனுறுதியும் கொண்ட பொதுச் சேவை என்ற தூர நோக்கைக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது.

இந்தப் பிரதேச செயலகம் பல்வேறு சமூக சேவைகளைத் தொடர்ந்தும் ஆற்றி வருதல் பாராட்டப்படக்கூடிய அம்சமாகும். இப்பிரதேச செயலகத்தின் தகவல்களையும் செய்திகளையும் இலகுவாக அறிந்து கொள்ளும் முகமாக dsppd.org என்ற இணையத்தளம் கடந்த இரண்டு வருடங்களாக இயங்கி வரு கின்றது. இதன் மூலம் பருத்தித் துறைப் பிரதேச செயலகத்தின் வரலாறு, அதன் செயற்பாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் என்பவற்றை மக்கள் இலகுவாக அறிந்து அதன்மூலம் மக்கள் தமது வேலைகளை இலகுவாக மேற்கொள்ள பேருதவி புரிகின்றனர். எனவே இப்பிரதேச செயலகப் பணிகளையும் அதன் சேவைகளையும் மக்கள் தொடர்ச்சியாகப் பாராட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் நல்லதொரு மக்கள் பணியை அர்ப்பணிப்புடனும் சிறந்த முகாமைத்துவத்துடனும் மேற்கொண்டு வரும் இப்பிரதேச செயலகம் தொடர்ந்தும் தனது சிறப்பான மக்கள் பணியை ஆற்ற வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். *




# மாணிக்கவாசகர் வித்தியாலயம்



வடமராட்சியில் நூற்றாண்டு கடந்தும் நிமிர்ந்து நிற்கும் பாடசாலைகளில் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயமும் ஒன்று. இந்தப் பாடசாலை யாழ்.மாவட்டத்தின் ஆரம்பக் கல்வியிலும் இணைப்பாட விதான அடைவுகளிலும் முன்னணியில் நிற்கும் பாடசாலை ஆகும். 'இன்றைய சிறுவர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள்' என்ற அறிஞர்களின் கூற்றுக்கிணங்க வடமராட்சியின் கரவெட்டிப் பகுதியில் அமைந்திருந்து கல்விப் பணியாற்றி வருகின்றது கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம் .

இந்த வித்தியாலயத்தின் வரலாறு சிறப்பு வாய்ந்தது. கட்டைவேலி கோயில்பற்றுப் பகுதியில் ஆதிக்கம் செலுத்திய மெதடிஸ்த மிஷனரியைச் சேர்ந்தோரின் காலத்தில் இந்தக் கல்விக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் சமூகப்பற்றுடைய சமூகசேவையாளர்களுக்கு ஏற்பட்டது. இந்த நிலையில் வாழையப்பா வீட்டு நல்லதம்பிப் பெரியார் என்பவர் தனது காணியில் 1901 ஆம் ஆண்டு கொட்டிலிட்டு இந்தப் பாடசாலையை உருவாக்கி பேருதவி புரிந்தார்.

இந்தப் பாடசாலை அரச பாடசாலையாகப் பதிவு செய்யும் நடவடிக்கை சில சமூக சேவையாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் 1903 ஆண்டு பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற சித்தமணியம் பாடசாலையை அரசில் பதிவு செய்வதற்காக விண்ணப்பம் செய்தார். அவரின் விடாமுயற்சியின் பிரதிபலனாக 1905 ஆம் ஆண்டு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், இந்து தமிழ் ஆண்கள் பாடசாலை என அரசினால் பதிவு செய்யப்பட்டது. இப்பாடசாலையின் முகாமையாளராக இருந்த பெரியார் சிற்றம்பலம் முதலியார் இந்தப் பாடசாலையின் மூலம் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். அவரது மறைவைத் தொடர்ந்து அவரது மகன் சிற்றம்பலம் முதலியார் உடையார் தலைமைத்துவப் பொறுப்பேற்றார். இவரின் பின் அவரது மகன் முருகேசு சிவசிதம்பரம் முகாமையாளராக அரசினால் பாடசாலை பொறுப்பேற்கும்வரை இருந்தார்.

பாடசாலையின் வடக்குப் புறத்தில் உள்ள மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 15.09.1971 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இப்பாடசாலைக்குப் பல உதவும் உள்ளங்கள் [illegible] அன்பளிப்பாக [illegible] பக்கத்திலுள்ள கட்டடம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.இராஜலிங்கம் நிதி ஒதுக்கி 07.10.1983 ஆம் ஆண்டு அடிக்கல் நட்டு கட்டி முடிக்கப்பட்டது. இதன்பின்னர் நூற்றாண்டு மண்டபம் தற்போதைய அதிபர் இ.ராகவனின் விடாமுயற்சியால் கட்டிமுடிக்கப்பட்டது. இவரின் நிர்வாகத் திறன் மூலம் கட்டி முடிக்கப்பட்டு அன்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த வே.தி. செல்வரட்ணம் 26.05.2002 ஆம் ஆண்டு சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.


அந்தக் காலத்திலிருந்து இக்காலம் வரை பாடவிதான, இணைப்பாட விதான செயற்பாடுகளில் இப்பாடசாலை மாணவர்கள் பல வரலாற்றுச் சாதனைகளை நடத்தி வருதல் பாராட்டப்படக்கூடிய [illegible] [illegible] ஆக்கத்திறன் போட்டியில் வடமராட்சிப் பிரதேசத்தில் வெற்றி பெற்ற 7 பேரில் 5 பேர் குறிப்பிட்ட பாடசாலையை சேர்ந்தவர்கள் என்பது பாராட்டப்படக்கூடியது. அந்தவகையில் திருக்குறள் மனனப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற பானுஜா, இரண்டாம் இடம்பெற்ற தர்சிகா ஆகியோர் இந்தப் பாடசாலை மாணவிகள் என்பதால் பாராட்டப்படக் கூடியவர்கள். இதேவேளை இந்தப் பாடசாலையில் அளப்பரிய சேவை யாற்றிய அனைத்து அதிபர்களும் பாராட்டப் படக் கூடியவர்கள். அந்த வகையில் இந்தப் பாடசாலையின் வரலாற்றில் பல அதிபர்களைக் குறிப்பிடலாம் . தற்போது இந்தப் பாடசாலையின் அதிபராக இ.ராகவன் கடமையாற்றி வருகின்றார். இவரின் நிர்வாகத்திறமை இந்தப் பாடசாலை வளர்ச்சிக்குப் பெரும் உந்து சக்தியாக இருந்து வருகின்றது.

இவரின் காலத்தில் பல பௌதீக வளர்ச்சிகள் ஏற்பட்டது. அந்தவகையில் நீர் வசதி இப்பாடசாலையில் இல்லாமையை அடுத்து பிரபல வர்த்தகர் தவராஜா தனது சொந்தச் செலவில் தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார். இவரின் காலத்திலேயே நூற்றாண்டு மண்டபமும் கட்டப்பட்டது. இந்த அதிபரின் காலத்தில் 700 அடிச் சுற்றுமதில் அமைக்கப்பட்டதோடு முழு மின்சாரவசதிகள் கணினி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வாறு வளர்ச்சியும் எழுச்சியும் பெற்றுவரும் இந்தப் பாடசாலை மேலும் பல வரலாற்றுச் சாதனைகளையும் படைக்க வேண்டும். மேலும் அபிவிருத்தி பாதையில் பயணித்துப் பல இளம் கல்வியாளர்களை எமது மண்ணுக்குத் தரவேண்டும் என்பதே அனைவரது அபிலாஷையுமாகும். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை தொடர பாராட்டி வாழ்த்துகின்றோம்



சமூக சேவைக்கான ''விஸ்வ கீர்த்தி' எனும் கௌரவ விருதினையும் தங்கப் பதக்கத்தினையும் பெற்றுள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரும் சமாதான நீதிவானுமாகிய **திரு.ஜெகதீசசிங்கம் சந்திரேந்திரன்** அவர்களை நிறைவாக வாழ்த்துவதோடு இறையருள் நிறைவாகப் பெற்றுத் தொடர்ந்தும் தனது பணியினைச் சிறப்பாக ஆற்ற இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

வணபிதா. அருட்திரு. தே.செல்வரட்ணம்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.
(109252)

## தண்ணுமைத் தண்ணொலி
(மிருதங்க செயன்முறை விளக்கநூல்)
## நூல் வெளியீடும் இசையரங்கும்



**நூலாசிரியர்:** கலாவித்தகர் நாகரட்ணம் மாதவன் (M.A.)
**காலம்:** நாளை (19.01.2011) புதன்கிழமை
**நேரம்:** காலை 9.00 மணி
**இடம்:** குமாரசுவாமி மண்டபம் (யாழ். இந்துக் கல்லூரி).
**தலைவர்:** பேராசிரியர் திரு.க.கந்தசாமி
(பீடாதிபதி, விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
**பிரதம விருந்தினர்:** பேராசிரியர் திரு. நா. ஞானகுமரன்
(பீடாதிபதி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
**சிறப்பு விருந்தினர்:** கலாநிதி திரு.ந.வி.மு.நவரெத்தினம்
( தலைவர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
**கௌரவ விருந்தினர்கள்:** திருமதி அ. வேதநாயகம்
(கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)
செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன்
(அதிபர், யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
**ஆசியுரை:** கலாபூஷணம் க.ப. சின்னராசா
(முன்னாள் வருகை விரிவுரையாளர், கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
கலாபூஷணம் மா.சிதம்பரநாதன்
(முன்னாள் விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
**மதிப்புரை:** இசைமாணி தவநாதன் றொபேட்
(விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
**முதற் பிரதி பெறுபவர்:** இசைஞான திலகம் உ.இராதாகிருஷ்ணன்
**கௌரவ பிரதி பெறுபவர்:** வட இலங்கை சங்கீத சபை, யாழ்ப்பாணம்.

**அரங்கிசைக் கலைஞர்கள்**
**வயலின்:** இசைஞானசுரபி அ. ஜெயராமன்
**கீபோட்:** கலாவித்தகர் த.றொபேட்
**மிருதங்கம்:** கலாவித்தகர் நா.மாதவன்
**கடம்:** வித்துவான் ந. சிவகுந்தர்
**முகர்சிங்:** கலாவித்தகர் சி. செந்தூரன்

கலா ரசிகர்கள் அனைவரும் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(109057) **விழாக்குழு.**


## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 20.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.
★சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி - 0774656377
★முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
★துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 021 222 6944
(109021)


## 6 ஆம் ஆண்டு நினைவுகளில்...



அமரர் **செல்லையா ரஜனிகாந்**
(சுரேன், சங்கமன்)
திதி: தைமாத வளர்பிறை சதுர்த்தசி
(18.01.2011)

தோற்றம்
22.11.1974

மறைவு
25.01.2005

உன் - நினைவுகள் எம் நெஞ்சில்
ஊஞ்சல் ஆடுகின்றன
உன் - சிரிப்பின் ஒலிகள் எம் காதுகளில்
இன்றும் ஒலிக்கின்றன - சுரேன்!
நீ - மரணித்துவிடவில்லை - எம் நெஞ்சில்
நினைவாலயமாய் நிலைத்திருப்பாய்!

4/2, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,யாழ்ப்பாணம். (109386)
குடும்பத்தினர்.

## சர்வதேசக் கல்வி மாநாடு

யாழ்ப்பாணம்,ஜன.18

கொழும்பு விஞ்ஞான முகாமைத்துவப் பட்டதாரி நிறுவனத்தின் (GISM) 'சர்வதேச கல்வி' பற்றிய மாநாடு நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 5 மணிவரை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

''வெளிநாட்டுக் கல்வியின் சரியான பாதை'' என்ற தலைப்பில் பேராசிரியர் வைத்திய கலாநிதி சேனரட்ன விரிவுரையாற்றுவார். (ஐ)

## அறநெறிப் பாடசாலையில் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜன.18

வலி.கிழக்குச் சைவசமய அருள்நெறி மன்றத்தால் நடத்தப்படவுள்ள அறநெறிப் பாடசாலையில் தரம் 5 இற்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

சமயம், கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் இலவசக் கல்வி கற்க விரும்பும் கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்டோர் பிரவேசக் கட்டணமாக 200 ரூபாவைச் செலுத்தி 'வலி. கிழக்கு சைவ சமய அருள்நெறி மன்றம், வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் எனும் முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று வலி. கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (ம-313)

## பாலம் அமைப்பு

கொழும்புத்துறை,ஜன.18

கொழும்புத்துறை வீதியில் விதானையார் வீதிச் சந்தியில் உள்ள பிரதான பாலம் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

போதிய வடிகாலமைப்பு வசதிகள் இன்றி மழைகாலங்களில் நீர் தேங்கி நின்று மக்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படுவதையடுத்து அகன்ற பாலம் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாலம் அமைக்கும் பணிகளால் தடைப்படும் வீதிப் போக்குவரத்துக்கு மாற்றீடாகப் புதிய பாதையொன்று அமைக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-135)


### வீடு வாடகைக்குத் தேவை

மருதனார்மடம் தொடக்கம் கொக்குவில் வரை K.K.S. வீதியில் அல்லது அண்டிய தூரத்தில் அல்லது பலாலி வீதியில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை. முற்பணமும் மாத வாடகையும் 6000/= வரையிலும் தரப்படும்.
தொடர்பு:- 0771393670

### வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: எஸ்.எஸ். நாதன்,
16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776146434

### வகுப்புக்கள்

German, Swiss மொழிகள், German Swiss மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது.
10 Palaly Road, Jaffna. T.P. 0771604823

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 19.01.2011 ஆம் திகதி விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ P.ரவி,தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ ஜெஸ்சி பாம், 1ஆம்கட்டை, பருத்தித்துறை.
T.P No 021 222 2867, 0776090926

### காவலாளி/தோட்ட பராமரிப்பாளர் தேவை

கொக்குவிலில் உள்ள வீட்டுக்குக் காவலாளி/ தோட்ட வேலை செய்யக்கூடிய 50வயதுக்கு மேற்பட்ட ஆண் தேவை. சம்பளம் பேசித்தீர்க்கலாம்.
தொடர்பு: 0771965666


## நன்றி நவிலலும் நினைவலைகளும்...



தோற்றம் 04.11.1930 — மறைவு 29.12.2010

திருமதி
**அப்புத்துரை நாகலட்சுமி**

கடந்த 29.12 2010 அன்று அமரத்துவமடைந்த எமது அன்புத்தாயாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அன்னார் நோயுற்றிருந்த போது அவரைப் பராமரித்து உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
**பிள்ளைகள் உறவினர்கள்.**

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி தயாபரன் (தம்பி)



மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி தயாபரன் 11.01.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நல்லதம்பி-இரத்தினபூரணம் தம்பதியினரின் (லீலா) அன்பு மகனும் கைதடி வடக்கு சங்கரப்பிள்ளை-நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் சயந்தினியின் அன்புக் கணவரும், தரணியன், துளசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மற்றும் வசந்தா விக்னேஸ்வரன் (ஆசிரியை, நுணாவில் அமிர்தாம்பிகை வித்.), சசிகலா குகதாஸ் (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விக்னேஸ்வரன், குகதாஸ் , செல்வநாதன்(U.K) சிவயோகநாதன் (சுவிஸ்), சிவானந்ததேவி (ஆசிரியை, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்) ஆகியோரின் மைத்துனரும் ஜெயமாலா (U.K), குளோஜினி(சுவிஸ்) சிவசரணநாதன் (கிராம அலுவலர், சாவகச்சேரி நகரம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 19.01.2011 புதன்கிழமை சுவிஸ் பார்சல் நகரில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :
மட்டுவில் : 021321 3369
கைதடி : 021321 7339

தகவல்:
நா.நல்லதம்பி (தந்தை).
மட்டுவில் வடக்கு.

### தியாகராஜா வைத்திலிங்கம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸில் தற்காலிகமாக வசித்தவருமான தியாகராஜா வைத்திலிங்கம் (15.01.2011) சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா-தங்கம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு- நாகம்மா தம்பதியரின் மருமகனும், தேவியின் அன்புக் கணவரும், பொன்னம்பலம், பார்வதி ஆகியோரின் அருமைச் சகோதரனும், சிவனேஸ்வரி(மாதகல்), சந்திரகுமார் (சுவிஸ்), பத்மாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயகராசா (மாதகல்), கருணாகரன் (பிரான்ஸ்), சிவஞானஜோதி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், சோபனா, அச்சுதன், திருமாலவன், ஜோதிகா, ஜனனி, திவானா, திவ்ஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.01.2011) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

மாதகல் கிழக்கு,
மாதகல்.

தகவல்:
செ.விநாயகராசா
குடும்பத்தினர்.

### திருமதி இந்திராதேவி அம்பலவாணர்
(முன்னாள் உப அதிபர், முருங்கன் மகாவித்தியாலயம்)

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் கற்கிடந்தகுளம் முருங்கனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி அம்பலவாணர் 16.01.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவியும் பாமதி (ஆசிரியை, முள்ளியவளை) காலஞ்சென்ற சிவசங்கர் ஆகியோரின் அன்புத் தாயாரும் தாஷின் அன்பு மாமியாரும், மனோன்மணி (வவுனியா) விமலதேவி (தேர்தல் திணைக்களம், ராஜகிரிய), காலஞ்சென்ற பாலசிங்கம், தர்மராஜா (கஜபதி போட்டோ, வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவமனோரஞ்சிதம், திவமணோகரி, ஜெயகொடி ஆகியோரின் மைத்துனியும் யதுகுலன் (வவுனியா, மத்திய மகாவித்தியாலயம்), ஆரணி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பைரவி (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முருங்கனில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.19,குருமன்காடு,
வவுனியா.

தகவல்:
க.தருமராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்



6

எந்த இணையத்தையும் ஹக்கிங் செய்யலாம். ஆனால் அந்த வலையமைப்பின் பாதுகாப்பு வலயங்களை உடைத்து உட்புகுந்தால் கணினிகளுக்கோ, அதிலுள்ள கோப்புகளுக்கோ எந்த சேதத்தினையும் விளைவிக்கக்கூடாது. உட்புகுதலுக்கான ஆதாரங்களை அழிப்பதைத் தவிர வேறெந்த சேதத்தினையும் அவற்றுக்குச் செய்ய எத்தனிக்கக்கூடாது. இது யூலியன் தனக்குத்தானே இட்டுக் கொண்ட கட்டுப்பாடு. இதுவே அவனின் கொள்கை என்றுகூடச் சொல்லலாம்.

இந்த வழியையே இப்போது யூலியனின் பாதையில் பயணிக்கும் பல ஹக்கிங் விற்பன்னர்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

தான் விரித்துக்கொண்ட பாதை வழியே இம்மியும் பிசகாமல் நடந்து வந்த யூலியனுக்கு எப்படியாவது சிறைவாசத்தைப் பரிசளித்து விடவேண்டும் என அவுஸ்திரேலியப் பொலிஸ் கங்கணம் கட்டிக் கொண்டு, காத்திருந்தது. யூலியனுக்கும் இந்த விளையாட்டு மிகப்பிடித்திருந்தது.

நான் செய்வதைச் செய்துகொண்டுதான் இருப்பேன். முடிந்தால் பிடித்துப் பாருங்கள் என்று சவால் விடுவதைப் போல் தன்னுடைய ஹக்கிங் கைங்கரியங்களை யூலியன் அசாஞ்சே தொடர்ந்து கொண்டேயிருந்தான். ஏறக்குறைய 30 ஹக்கிங் வேலைகளை வெற்றிகரமாக- தங்குதடையின்றி- முடித்துவிட்டு, 31 ஆவது ஹக்கிங்காக யூலியன் தேர்ந்தெடுத்தது கனடா நாட்டைத் தளமாகக் கொண்ட நோர்டெல் தகவல் தொடர்பு நிறுவனத்தைத்தான்.

யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்

அந்த நிறுவனத்தின் அவுஸ்திரேலிய வழங்கியைத் (சேர்வர்) தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர யூலியன் திட்டமிட்டான். அதற்கும் ஒரு காரணம் இருக்கவே செய்தது.

அவுஸ்திரேலிய தொடர்பு நிறுவனங்களைக் காட்டிலும் நோர்டெல் நிறுவனத்தின் மீது அவுஸ்திரேலிய அரசு தனி அக்கறை கொண்டிருந்ததது. அதற்குச் சொல்லப்பட்ட காரணம் அவுஸ்திரேலியாவில் உள்ள தொடர்பாடல் நிறுவனங்களை விடவும் நோர்டெல் தரமும், பாதுகாப்பும் மிக்கது என்பதுதான்.

இதனால் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த தொடர்பாடல் நிறுவனங்கள் நோர்டெல் மீது உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டிருந்தன. ஆனால் எதுவுமே செய்யமுடியாது கையைப்பிசைந்து கொண்டிருந்தன. இந்த நேரத்தில்தான் யூலியன் நோர்டெல் மீது குறி வைத்தான்.

யூலியனின் சாதுர்யமான இணையக் கையாடலின் முன்னால் நோர்டெல் நிறுவனத்தின் பாதுகாப்புப் பொறிமுறைகளால் நீண்டநேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஒரேயொரு மணித்தியாலத்துக்குள் யூலியன் சொன்னதைக் கேட்டுத் தலையாட்டும் பொம்மையாக நோர்டெல் நிறுவனத்தின் கட்டளை அமைப்பு முறை மாற்றமுற்றது.

நாலைந்து நாள்களாக நோர்டெல் சேவை ஸ்தம்பித்துப்போனது. ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் நச்சரிப்புக்களால் அந்த நிறுவனம் திக்குமுக்காடிப்போனது. எங்கு தவறு நேர்ந்தது? என்பதைக் கண்டறியும் முயற்சிகள் தோல்விலேயே முடிவடைந்தன.

எல்லா இணைப்புக்களும் சரியாகவே இருந்தன. ஆனால் சேவை, பிடித்து வைத்த பிள்ளையார் போல எந்தவித அசைவுமின்றி அப்படியே உயிரற்றதாக மாறிப் போயிருந்தது. நான்கு நாள்களாக நோர்டெலைப் பீடித்திருந்த கிரகணம் ஐந்தாம் நாள் விலகியது.

அவர்கள் பட்டதுபோதும் என்ற நல்லெண்ணத்துடன் நோர்டெலின் பிரதான வழங்கி மீதான தனது கட்டுப்பாட்டை யூலியன் விலக்கிக்கொண்டான். இப்போதுதான் அந்த நிறுவனத்துக்குப் போன உயிர் திரும்ப வந்தது. எனினும் பிரதான வழங்கியின் முகப்பில் யூலியன் விட்டுச் சென்றிருந்த செய்தியைப் படித்த நோர்டெல் நிறுவனத்தின் இயக்குநருக்கு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்குமளவுக்குக் கோபம் உச்சத்துக்குச் சென்றது.உங்களுடைய நிறுவனத்தின் இணையப் பொறிமுறை எனக்கு நன்றாகவே ஒத்துழைப்புக் கொடுத்தது. அதற்கு உங்களுக்கு மிக்க நன்றி.

எனினும் இந்த நான்கு நாள்களும் உங்களின் சேவை தடைப்பட்டுப் போனமைக்கு மன்னிக்கவும். நான் உங்களின் சேவைக்கான கணினிக் கட்டளைகளில் எந்தச் சேதத்தையும் உண்டுபண்ணவில்லை. மாறாக அவற்றில் இருந்த பல வழுக்களை இந்த நான்கு நாள்களிலும் சீர்செய்துள்ளேன்.அதற்காக நீங்கள்தான் எனக்கு நன்றி சொல்லவேண்டும். இதுதான் யூலியன் விட்டுச் சென்ற செய்தி! அதைப் படித்த கடுப்பில் யூலியன் மீது பொலிஸில் புகாரைப் பதிவு செய்தது நோர்டெல் நிர்வாகம். இதை... இதைத்தான் எதிர்பார்த்திருந்தோம்! என்கிற மாதிரியாகத் தொடையில் தட்டிக் கொண்டு யூலியனை வேட்டையாடக் கிளம்பியது அவுஸ்திரேலியப் பொலிஸ்.

ஔண்யன்

சர்ரென யூலியனின் வீட்டுக்கு முன்னால் பிரேக் அடித்து நின்றது பொலிஸ் கார். அதிலிருந்து இறங்கியவர்கள் எந்தவிதக் கேட்டுக்கேள்வியுமின்றி யூலியனை விலங்கிட்டுக் காரில் ஏற்றிச் சென்றனர்.


யூலியனும் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. மாறாக விலங்கிட்டு அழைத்துச் செல்லப்படும் போது கூட யூலியனின் முகத்தில் கேலி கலந்த புன்னகை நெளிந்தது. அந்தப் புன்னகைக்கான காரணம் அப்போது பொலிஸாருக்குத் தெரிந்திருக்கவில்லை. அது தெரியவந்த போது நிலைமை பொலிஸாரின் கையை மீறிப்போயிருந்தது.

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

MASSEY UNIVERSITY
NEW ZEALAND
Degree Programmes @ GISM Campus

BACHELOR OF INFORMATION SCIENCE
Computer Science, IT and Software Engineering

BACHELOR OF BUSINESS STUDIES
Accountancy, Economics, Finance, Marketing, Management and 10 other majors to choose from




யாழ் மண்ணில்
இலவச கருத்தரங்கு ஜனவரி மாதம் உ0ஆம் திகதி,யாழ்
இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்(மாலை 3 – 5மணி வரை)
கண்காட்சி – ஜனவரி மாதம் உ1ஆம் திகதி தொடக்கம் உ3ஆம் திகதி வரை,
யாழ் துரையப்பா மைதானம்

Services We Offer:
Bank Facilities, Accomodation Support, Visa & Transfers, Overseas Support, Career Guidance, Student Counselling and many other services

நேர்முகப்பரீட்சை 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை
GISM CAMPUS Nugegoda இல் நடைபெறும்.

Applications are now open for Jan 2011 intake
CLOSING DATE: 27th JANUARY 2011

GISM
GRADUATE INSTITUTE OF SCIENCE AND MANAGEMENT

HOTLINE
077-5167498

GISM Campus, 550 Old Kottawa Road, Udahamulla, Nugegoda, Colombo
Tele: +011 2835935/011 2811914
Email: info@gismlk.com
Website: www.gismlk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை, பிரிட்டிஷ் பெற்றோலியத்துறைத் தலைவர் ரொபர்ட் டட்லி (இடது) மாஸ்கோவில், அவரது இல்லத்தில் சந்திக்கிறார். (த)

# பலியானோர் எண்ணிக்கை 600 பிரேஸில் மழை தொடரும் அபாயம்

ரியோ டி ஜெனிரோ,ஜன.18

பிரேஸில் நாட்டில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுக்குப் பலியானோர் எண்ணிக்கை 600ஐ தாண்டியது. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட டெரசோ பொலிஸ் நகரில், மீட்புப்பணிகளை மேற்கொள்ள அந்நாட்டுஇராணுவம் விரைந்துள்ளது. தென் அமெரிக்க நாடான பிரேஸிலில் கடந்த பல ஆண்டுகளில்இல்லாதஅளவுக்குக் கனமழை பெய்து வருகிறது.

கடந்த வாரம் துவங்கிய இந்த மழை தொடர்ந்து நீடிக்கிறது. இன்னும் ஒரு வாரத்துற்கு மழை நீடிக்கும் என்று அந்நாட்டு வானியல் மையம் எச்சரித்துள்ளது.

இந்நிலையில் மழை மற்றும் நிலச்சரிவால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள டெரசோ பொலிஸ் நகரில், மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இராணுவம் விரைந்துள்ளது. மீட்புப் பணி, சடலங்களை அடையாளம் கண்டறிதல் மற்றும் மக்கள் இல்லாத இடங்களில் நடக்கும் கொள்ளைச் சம்பவங்களைத் தடுத்தல், தடைபட்ட சாலைகளைத் திறந்து விடுதல் ஆகிய பணிகள் இராணுவத்தின் முன் உள்ளன. எனினும், ரியோ டி ஜெனிரோ மாகாணத்தின் பல இடங்கள் மலைப்பாங்கான பகுதிகள் என்பதாலும், பல இடங்களில் மின்சாரம், தொலைபேசி, இணையம் இல்லாததாலும் அவற்றில் என்ன நடக்கிறது என்பதை விரைவில் தெரிந்து கொள்ள முடியவில்லை.

மேலும், நிலச்சரிவில் சிக்கிப் பலியானோரின் எண்ணிக்கை தற்போது 600ஐ தாண்டி விட்டது. ஆனால், கனமழை மேலும் நீடிப்பதால், பலி எண்ணிக்கை உயரக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. பல மலைப்பாங்கான பகுதிகளில் நிலம் இன் னும் ஈரப்பதத்தோடு இருப்பதால், பெய்துவரும் கனமழையால் மேலும் பல நிலச்சரிவுகள் ஏற்படக்கூடும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

# கிறிஸ்தவர்கள் படுகொலை; எகிப்தில் ஒருவருக்குத் தூக்கு

கொப்ட் கிறிஸ்தவர்களை படுகொலை செய்த நபருக்கு எகிப்திய நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம்ஆறு கொப்ட் கிறிஸ்தவர்களையும், ஒரு முஸ்லிம் காவல் துறை உத்தியோகத்தரையும் படுகொலை செய்த குற்றத்துக்காகக் குறித்த நபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மொஹமட் அஹம் ஹூசெய்ன் என்பவருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் ஆராதனைகளில் கலந்துகொண்ட நபர்கள் மீது குறித்த நபர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்தவர் ஒருவர் 12 வயது முஸ்லிம் சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமைக்குப் பழி தீர்க்கும் நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தக் குற்றச் செயல்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை எனக் குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

எகிப்தில் பத்து வீதமான கொப்டிக் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் எகிப்தின் அலெக்சான்ட்ரியா தேவாலயத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 23 கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# பாகிஸ்தானில் தலிபான்களின் கொடூரம்

பெஷாவர், ஜன. 18

பெண்களுக்கு எதிராகத் தலிபான் அமைப்பினரின் கொலை வெறி வெள்ளிக்கிழமையன்று ஒரு பெண் காவலரையும் அவர் குடும்பத்தினரையும் பலி வாங்கியது. தலிபான் பிடியில் சிக்கியுள்ள கைபர் பகுதியில் பல பெண்கள் பாடசாலைகளைத் தகர்த்த பின்னர், தலிபானின் வெறி வேலைபார்க்கும் பெண்களுக்கு எதிராகத் திரும்பியுள்ளது.

தலைமைக் காவலராக வேலை பார்த்து வந்த ஷம்ஷாத் பேகமைப் பல தடவைகள் வேலையை இராஜினாமா செய்யும்படி தலிபானியரால் மிரட்டப்பட்டார். ஆனால் அவர் வேலையை விடவில்லை.

வெள்ளிக்கிழமை இவர் வீட்டில் தீவிரவாதிகள் ரொக்கெட் குண்டுவீசித் தாக்குதல் நடத்தினர். பின்னர் கனரக துப்பாக்கிகள் கொண்டு தாக்கினர். சுமார் பன்னிரண்டு பேர் கொண்ட கும்பல் அந்த வீட்டுக்குள் புகுந்து சரமாரியாகத் துப்பாக்கியால் சுடத்தொடங்கினர்.

இதில் ஷம்ஷாத் பேகமும், அவருடைய இரு புதல்வர்களும் ஒரு புதல்வியும் கொல்லப்பட்டனர். அந்த வீட்டிலிருந்த அவருடைய கணவரின் சகோதரிகள் இருவரும் கொல்லப்பட்டனர்.

அவருடைய மற்ற இரு புதல்வர்கள், ஒரு புதல்வி ஆகியோருக்குக் காயமேற்பட்டது. சட்டம் ஒழுங்கற்ற இந்தப் பகுதியில் கடந்த மூன்றாண்டுகளில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தலிபான் இயக்கத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

தலிபானுக்கு எதிரான படையை உருவாக்கிய மாலிக் முகமது ஸலாம் கான் (வயது - 60) தலிபான் இயக்கத்தினரால் வியாழக்கிழமை பெஷாவரில் கொல்லப்பட்டார்.

ஸலாம்கானும் வேறு சில தலைவர்களும்வடமேற்குப் பாகிஸ்தான் நகரான பெஷாவரில் மசூதிக்கு வந்திருந்தனர். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் மசூதிக்கு வெளியே நடத்திய தாக்குதலில் ஸலாம் கானுக்கும் இன்னொரு தலைவருக்கும் காயம் ஏற்பட்டது.(த)

சாதனை படைத்த சிவபூமி மாணவனை வாழ்த்துகின்றோம்



சி.துஸந்தன் (தங்கப்பதக்கம் 100M ஓட்டம்)

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவனான செல்வன் சிவராசா துஸந்தன் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ஒலிம்பிக் தெரிவுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கம் பெற்று கிறீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளப் போவதையிட்டு பூரிப்படைகிறோம்.



சி.தனுஷன்
வெள்ளிப் பதக்கம்
(100M ஓட்டம், நீளம் பாய்தல்)



வி.விந்தகன்
வெள்ளிப் பதக்கம்
(50M ஓட்டம்)



பே.போல் டனீசியஸ்
வெள்ளிப் பதக்கம்
(100M ஓட்டம், நீளம் பாய்தல்)
(22-29 வயதுப் பிரிவு)

அத்துடன் இதே தெரிவுப் போட்டியில் கலந்துகொண்டு பதக்கங்களை வென்ற மேற்படி மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மூத்தோர்,
சிவபூமி முதியோர் இல்லம், தொல்புரம், சுழிபுரம்.

(109268)

### நைஜீரியாவில் வாக்காளர் பதிவு

நைஜீரியாவில், தற்போது குட்லக் ஜோனாதன் அதிபராக இருக்கிறார். அதிபருக்கான பொதுத் தேர்தல், வரும் ஏப்ரலில் நடக்க இருக்கிறது. இத்தேர்தலில் ஓட்டளிப்பதற்கான வாக்காளர் பதிவு நேற்று துவங்கியது. இதில், ஏழுகோடிபேர்பதிவு செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒலிம்பிக் போட்டிக்குச் செல்லும் சிவபூமி வீரனுக்கு எமது இனிய வாழ்த்துக்கள்



செல்வன்
சிவராசா
துஸந்தன்
(கோண்டாவில்
சிவபூமி பாடசாலை)

வாழ்த்துவோர்:
திருமதி சிவசக்தி சிவநேசன்.
இசை விரிவுரையாளர், லண்டன்.

சீட்டிழுப்பு இல. 2345
திகதி 16.01.2011

மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்
N 7 1 9 1 0 6

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | N | 7 | 1 | 9 | 1 | 0 | 6 | ரூபா. | 11,242,283/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 7 | 1 | 9 | 1 | 0 | 6 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | - |
| 2ம் பரிசுகள் | | | 1 | 9 | 1 | 0 | 6 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 06 |
| 3ம் பரிசுகள் | | | | 9 | 1 | 0 | 6 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 74 |
| 4ம் பரிசுகள் | | | | | 1 | 0 | 6 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 762 |
| 5ம் பரிசுகள் | | | | | | 0 | 6 | ரூபா. | 100/= | பரிசுகள் | 7560 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 6 | ரூபா. | 20/= | பரிசுகள் | 75225 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 7 | 1 | 9 | 1 | 0 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 08 |
| 8ம் பரிசுகள் | | 7 | 1 | 9 | 1 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 75 |
| 9ம் பரிசுகள் | | 7 | 1 | 9 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 747 |
| 10ம் பரிசுகள் | | 7 | 1 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 7481 |
| 11ம் பரிசுகள் | N | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 30119 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா.
12,593,225.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,568,630.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline:2433631

முடிவுகளை அறிய
www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெல்சன் மண்டேலா இறந்தார்; வதந்தி பரப்பிய இணையத்தளம்



நியூயோர்க்,ஜன 18

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா . இவர் இனவெறிக்கு எதிராகப் போராடி அமைதிக்காக நோபல் பரிசு பெற்றவர். இவர் மரணம் அடைந்து விட்டதாக ஒரு இணையத் தளத்தில் செய்தி வெளியானதாக தெரிகிறது.

இதனால் தென்னாபிரிக்காவில் வதந்தி பரவியதைத் தொடர்ந்து பரபரப்பும் பீதியும் ஏற்பட்டது. இந்தத் தகவலை நெல்சன் மண்டேலா அறக்கட்டளை மறுத்தது. மண்டேலா நல்ல உடல் நலத்துடன் இருக்கிறார். விடுமுறையை மகிழ்ச்சியுடன் கழித்து வருகிறார். எனவே, இந்த அடிப்படை ஆதாரமற்ற வதந்தியை யாரும் நம்ப வேண்டாம்.

அறக்கட்டளையின் செய்தித் தொடர்பாளர் ஷெலோ ஹட்டாய் குறிப்படுகையில்: இது ஒரு வதந்தி எனவும் அமைதியாக இருக்குமாறு தெரிவித்துள்ளதோடு குறித்த இணையத்தளம்தான் தவறான செய்தியை பரப்புவதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த இணையத்தளம் பல பிரபலங்கள் மரணம் அடைந்ததாக ஜோக்குகளை வெளியிட்டுள்ளது. பாடகர் ரேதா பிராங்க்களின், நடிகர்கள் சார்லி ஷீன், ஜானிதிப், மெஹாகன் பரீமன் ஆகியோர் மரணம் அடைந்து விட்டதாகச் செய்தி வெளியிட்டுப் பின்னர் அது ஜோக் என மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.(த)

## ஈரானின் அணுத் திட்டங்களை பார்வையிடும் வெளிநாட்டுக் குழு

தெஹ்ரான்,ஜன 18

ஈரான் தனது அணுநிகழ்ச்சித் திட்டத்திற்கான ஆதரவினைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதன் ஒரு கட்டமாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் குழுவொன்று ஈரானின் அணுநிகழ்ச்சித் திட்டங்களைப் பார்வையிடுவதற்கான சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டுள்ளனர்.

வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லெண்ணத்தின் சமிக்ஞையாகவே தாம் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளதாக ஈரான் கூறியுள்ளது.

ஆனால், தற்பொழுது ஈரானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இராஜதந்திரிகள் குழுவில் அமெரிக்காவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், சீனா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஈரானின் அழைப்பை நிராகரித்திருந்தன.

தமது யுரேனியம் செறிவூட்டல் திட்டமானது திறம்பட நடைபெறுவதாக ஈரான் கூறியுள்ளது.ஈரானின் அணுநிகழ்ச்சித் திட்டம் சர்வதேச தடைகளால் பாதிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்கா கூறியதற்குப் பதிலளிக்கும் முகமாகவே ஈரான் இவ்வாறு கூறியுள்ளது.

இந்நிலையில், அல்ஜீரியா, கியூபா, எகிப்து, ஓமான், சிரியா, வெனிசூலா, அரபு லீக் தூதுவர்கள் ஈரானின் சில அணுவுலைகளைப் பார்வையிட்டுள்ளனர்.

எந்தவொருநாடும் தமது அணுவுலைகளை மற்றையவர்களுக்குக் காண்பிப்பதில்லை. அத்துடன், ஈரானின் அணுவுலைகள் அமைதித் தேவைக்கானவை என்பதை நிரூபிக்கும் சமிக்ஞையாக இது உள்ளதென ஈரான் அணு சக்தி அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சர்வதேசத்தின் தடைகள் ஒருபோதும் எமது அணுத்திட்டத்தினைப் பாதிக்கப்போவதில்லை எனவும் ஈரான் அணுசக்தி அமைப்பின் தலைவர் சலேஹி தெரிவித்துள்ளார்.

எமது செயற்பாடுகள் குறிப்பாக யுரேனியம் செறிவூட்டல் மிகவும் வலுவாக நடைபெறுகின்றது. செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் உற்பத்திஅதிகரித்து வருகிறது எனவும் சலேஹி தெரிவித்தார்.

ஈரானின் சர்ச்சைக்குரிய அணு நிகழ்ச்சித் திட்டம் குறித்த ஐ.நா. பேச்சுக்கள் நடைபெறவுள்ள நிலையில் ஈரான் இராஜதந்திரிகள் குழுவைத் தமது அணுத்திட்டங்களைப் பார்வையிட அனுமதித்துள்ளது.

(த)

## புகைபிடித்த சில நிமிடங்களிலேயே தீங்கு

புகை பிடிப்பதனால் சில நிமிடங்களிலேயே உடலுக்குத் தீங்கு ஏற்படுவதாக அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். புகை பிடிப்பதனால் உடலுக்குத் தீங்கு ஏற்பட வருடக் கணக்கு செல்லாது என சுட்டிக்காட்டியுள்ளனர். முதலாவது சிகரெட்டை புகைப்பிடிப்பதன் மூலமே உடலுக்குத் தீங்கு ஏற்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பட்டுள்ளனர். புற்று நோய் ஏற்படக் கூடிய சில வகை இரசாயனப் பொருள்கள் சிகரெட் வகைகளில் காணப்படுவதாகவும், அவை புகைபிடித்து சில நிமிடயங்களிலேயே உடலில் இரசாயன தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். புகைப்பிடித்து 15 முதல் 30 நிமிடங்களுக்குள் உடலில் மாற்றங்கள் ஏற்படுவதாகக் குறிப்பட்டுள்ளனர்.

## அதிஷ்டமான பெண் குழந்தை

கடந்த 11.1.2011ஆம் திகதி இந்த நூற்றாண்டின் மிகவும் அதிர்ஷ்டமான நாளாகக் கருதப்படுகிறது. காரணம். அன்றைய திகதி (11.1.2011) 5 ஒன்றுகளைக் கொண்டதாக அமைந்தது.

இதுபோல் அமைவது அபூர்வம். உலகம் முழுவதும் இதை உணர்ந்த பலர் பல நிகழ்ச்சிகளை அன்றை தினத்தில் நடத்தினர். பிரசவத்துக்காகக் காத்திருந்தவர்கள் கூட அன்றைய தினம் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என மருத்துவமனைகளில் தஞ்சம் புகுந்தனர். அன்றைய தினம் ஏராளமான குழந்தைகள் பிறந்திருக்கலாம்.

எனினும், அமெரிக்காவின் மின்னசோட்டா நகரில் பிறந்த ஒரு பெண் குழந்தை சிறப்பு அதிஷ்டசாலியாக கருதப்படுகிறாள். அதாவது அவள் பிறந்த நேரத்திலும் (காலை 1.11) 1ஆம் எண் ஆதிக்கம் செலுத்தியது. இதேபோல அமெரிக்காவின் மெரிடியன் நகரில் 1.1.2011 அன்று காலை 11.11 மணிக்கு டெய்லர் அஷ்டன் மார்க்ஸ் என்ற ஆண் குழந்தை பிறந்தது. இதன் பிறந்த திகதி, நேரத்திலும் 7 ஒன்றுகள் உள்ளன.

(த)

## பிரிட்டனில் புதிய தந்தையருக்கு 'ஜக்பொட்'

லண்டன்,ஜன 18

இனி பிரிட்டனில் புதிதாகக் குழந்தைகளைப் பெற்றுள்ள தந்தையர்களுக்கு பத்து மாதங்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறையளிக்க வேண்டும் என புதிய திட்டமொன்று துணை பிரதமர் நிக்கிளேக்கினால் முன்மொழியப்பட்டுள்ளது.

குழந்தைகள்கள் மீதான அக்கறையும் பிரிட்டன் குடும்பங்களின் பாரம்பரியமும் காக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த புதிய திட்டத்தினை முன் மொழிவதாக நேற்றிரவு நடைபெற்ற தொழிலதிபர்கள் கூட்டத்தில் துணைப் பிரதமர் நிக் கிளேக் பேசியது தொழிலதிபர்களுக்குத் திகைப்பை உண்டாக்கியுள்ளது.

தற்போது பெண்களுக்கு வழங்கப்பட்டு வரும் 12 மாத மகப்பேறு விடுமுறையை பெண்கள் மட்டுமே முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்றில்லாமல் தம்பதிகள் இருவரும் இதைப் பிரித்துக் கொண்டு விடுமுறை எடுத்துக் கொள்ள அனுமதியளிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரிட்டனில் தற்போதைய முறைப்படி பெண்களுக்கு 90 விழுக்காடு ஊதியத்துடன் ஆறு மாத கால மகப்பேறு விடுமுறையும் வாரத்திற்கு 125 ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் என்ற சட்டப்படியான ஊதியத்துடன் 33 வார கால விடுமுறையும் அளிக்கப்பட்டு வருகிறது. தந்தையர்களாகிய ஆண்களுக்கு ஊதியத்துடன் கூடிய இரண்டு வார விடுமுறை கொடுக்கப்படுகிறது என்பது குறிப்படத்தக்கதாகும். (த)



பிரான்ஸ், நஷனல் பரன்ட் கட்சியின் தலைவராகப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மகிழ்ச்சியுடன் மரைன் லி பென்.

## ரஹ்மானுக்கு அமெரிக்கத் திரைப்பட விருது



நியூயோர்க்,ஜன 18

இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு அமெரிக்கத் திரைப்பட விருது கிடைத்துள்ளது. இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் ''27 அவர்ஸ்'' என்ற ஆங்கிலப்படத்துக்கு இசை அமைத்து இருந்தார். இந்தப் படத்தில் ''இவ் ஐரைஸ்'' என்ற பாடலை ரஹ்மான் இசையில் பொப் பாடகர் டிடோ பாடியிருந்தார். இந்த பாடலுக்கு இசை அமைத்ததற்காக ரஹ்மானுக்கு அமெரிக்காவின் திரைப்பட விருது கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள 'பிலிம் கிரிடிக்ஸ் அசோசியேசன் சார்பில் சாய்ஸ் மூவி' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. 'தி சோசியல் நெற் வேர்க்' என்ற படத்துக்கு சிறந்த படத்துக்கான விருதும், அந்த படத்தின் இயக்குநர் டேவிட் பன்செருக்கு சிறந்த இயக்குநர் விருதும், தி கிங்ஸ் ஸ்பீக் படத்தில் நடித்த கோவிலின் பர்த்துக்கு சிறந்த நடிகர் விருதும், கிளாக் ஸ்வேன் படத்தில் நடித்த நாலி போர்ட் மேனுக்கு சிறந்த நடிகைக்கான விருதும் கிடைத்துள்ளது.

விருது வழங்கும் விழா ஹொலிவூட்டில் நடந்தது. இதில் ஏ.ஆர்.ரஹ்மான் மற்றும் சிறந்த கலைஞர்களுக்கு விருது வழங்கப்பட்டது. ஏ.ஆர்.ரஹ்மான் ஏற்கனவே உலகின் மிக உயரிய விருதான ஒஸ்கார் விருதுகளைப் பெற்றுள்ளார். 'ஸ்லம்டாக் மில்லியனர்' படத்துக்கு இசை அமைத்ததற்காக 2 ஒஸ்கார் விருதுகள் அவருக்குக் கிடைத்தது. லண்டனில் அவருக்குக் 'கிராமி' விருதும் வழங்கப்பட்டது. தற்போது லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள திரைப்பட அமைப்பு விருது வழங்கி உள்ளது.

(த)

## புதிய அரசு அமைக்க வேண்டும்

**- நேபாள ஜனாதிபதி**

காத்மண்டு,ஜன 18

தேசியக் கட்சிகள் கருத்தொற்றுமையின் அடிப்படையில் வரும் 21ஆம் திகதிக்குள் புதிய அரசு அமைக்க வேண்டும் என்று நேபாள ஜனாதிபதி ராம் பரன் யாதவ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேபாளத்தில் 2010, ஜூன் 30 ஆம் திகதி அப்போதைய பிரதமர் மாதவ் குமார் நேபாள் பதவி விலகினார்.

அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட தற்காலிக அரசின் பிரதமராக நேபாள் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதையடுத்து, நாட்டின் இரண்டாவது பெரிய கட்சியான நேபாளி காங்கிரஸ், பிரதமர் வேட்பாளராக ராம் சந்திர போதயாளை நிறுத்தியிருந்தது.

தொடர்ந்து பிரதமரைத் தேர்ந்தெடுக்க இதுவரை 16 முறை வாக்கெடுப்பு நடந்தும் ஒரு தீர்மானம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பிரதான எதிர்க்கட்சியான பிரசண்டா தலைமையிலான ஐக்கிய நேபாள கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும், போதயாளுக்கு எதிராக வாக்களித்து வந்தன.

இதனால், கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை ஏற்படுவதற்காக, போதயாளை போட்டியில் இருந்து விலக்குவதாக நேபாளி காங்கிரஸ் கட்சி கடந்த வாரம் அறிவித்தமை குறிப்படத்தக்கது.(த்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிழற்குடை இல்லாமையால் பயணிகள் நிர்க்கதி

பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பஸ் பயணிகளுக்காக மந்திகையில் அமைக்கப்படிருந்த நிழற்குடை அகற்றப்பட்டமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். மந்திகை மருத்துவமனைக்கு சிகிச்சைகளுக்கு வருவோரே இந்த நிழல் குடையை பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் குறித்த நிழற்குடை இன்மையால் நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார், வயோதிபர்கள், பொது மக்கள் எனப் பலரும் நிர்க் கதிக்கு உள்ளாகியுள்ளனர்.

இக் குறைபாடு விரைவாக நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (ம-237)


## கைமாறிய படிவங்கள்

14.01.2011 வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் எமது நிறுவனத்தில் புகைப்படப் பிரதி எடுத்த போது அங்கு வைக்கப்பட்டிருந்த உமாமகேஸ்வரனின் கதிர் வெல்டிங் வேக்ஸ், டச்சுவீதி, சாவகச்சேரி என்னும் பெயரில் உள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமப் படிவங்களும் தவறுதலாக எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. இதனைத் தவறுதலாக எடுத்துச்சென்றவர்கள் கையளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ரிஷி தொலைத் தொடர்பகம்,**
கண்டி வீதி, சாவகச்சேரி. (பிரதேச செயலகம் முன்பாக)

## கடை வாடகைக்கு தேவை


யாழ்.நகருக்குள் பிரதான வீதிகளில் ஒன்றை முகப்பாகக் கொண்ட 150 சதுர அடி விஸ்தீரணம் உள்ளதும் வியாபார நிலையம் ஒன்றை அமைக்க கூடியதுமான இடம் தேவை. (மாத வாடகை 10,000)
தொடர்பு : 0750417512
0213207323

## STUDY FOR A DOUBLE DEGREE IN TBILISI, GEORGIA

**CORRECTION**

Please refer to advertisements appeared at Pages 11 and 14 of "UTHAYAN" on 07.01.2011 and 09.01.2011 respectively
The CORRECT E-mail address of the above advertisements should read as follows:
**Email:nino.ositashvili@iliauni.edu.ge**

## அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்



**'விஸ்வகீர்த்தி'**

**திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன்**
(J.P)

எமது சமூகத்தின் சிறந்த சேவையாளரும், கிளிநொச்சி மாவட்டத் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரும் சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் எமது ஆலய அபிவிருத்திச் செயலகத்தின் கௌரவ நிர்வாகக் காரியதரிசிகளில் ஒருவரும் மற்றும் எமது ஆலயத்தில் பல திருப்பணிகளைச் செய்து வருபவருமான திரு.ஜெ.சத்தியேந்திரன் அவர்கள் சிறந்த சமூக சேவையாற்றியமைக்காக யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவாகி "விஸ்வகீர்த்தி" விருதுப் பட்டத்தை கொழும்பில் நடைபெற்ற சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் 5 ஆவது ஆண்டு விழாவில் கௌரவ சிரேஷ்ட அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த அவர்களிடம் இருந்து பெற்றுப் பெருமை சேர்த்ததையிட்டு எல்லாம் வல்ல ஸ்ரீ சட்டநாதப் பெருமானின் அருளுடன் அவரும் அவரது குடும்பமும் நீடூழி வாழ்ந்து மேலும் பல உயர்வுகள் பெற்று அவரது சமூக, சமய, தென்னை அபிவிருத்திப் பணிகள் சிறப்பாகத் தொடர வேண்டும் என வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

15.01.2011

**ஆலய அபிவிருத்திச் செயலகம்,**
**ஸ்ரீ சட்டநாத சிவன் கோயில், நல்லூர்.**



கன்னாகம்/ மானிப்பாய் வட்டம்/ இணுவில்/ திருநெல்வேலி வட்டம்/ மல்லாகம் - தெல்லிப்பழை லயன்ஸ் கழகங்கள் இணைந்து கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும்

WE SERVE

## விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண்பரிசோதனை முகாம்

காலம் : 19.01.2011(போயா தினம்) புதன்கிழமை
நேரம் : காலை 7 மணி
இடம் : ஐயண்ணா சனசமூக நிலையம்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

பரிசோதனை மேற்கொள்பவர்:
யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர்
**வைத்தியகலாநிதி எஸ்.குகதாசன்** அவர்கள்

சுன்னாகம் மேற்கு, கந்தரோடை மற்றும் அயல் கிராமங்களில் வாழும் நலிவுற்ற மக்களை பயன்பெற வேண்டுகிறோம்.

★ குறிப்பு: வன்னியிலிருந்து மீளக்குடியேறியுள்ள மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு கீழுள்ள கழகங்களின் தலைவர்களுடன் தொடர்புகொண்டு முன்பதிவை மேற்கொள்ளலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| லயன் P.மகாதேவா | லயன் S.J.செல்வராஜா | லயன் C.இலகுநாதன் | லயன் K.C.ரமேஸ் | லயன் R.ராமச்சந்திரன் |
| சுன்னாகம் | மானிப்பாய் வட்டம் | இணுவில் | திருநெல்வேலி வட்டம் | மல்லாகம்-தெல்லிப்பழை |
| 021-3214825 | 0776014748 | 021-2225354 | 0776043794 | 0777318151 |




அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயிலில் எதிர்வரும் 20.01.2011 வியாழக்கிழமை தைப்பூசத் தினத்திலே மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராய் பல்லாயிரக்கணக்கான மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத்தில் திருவீதியுலா வரும் நிகழ்வும் விசேட மேளக்கச்சேரியும் இடம்பெறும்.

★ யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்து பக்தர்கள் கலந்துகொள்வதற்காக ஆலயத்தினரால் இலங்கைப் போக்குவரத்து சபையினரின் விசேட பஸ் சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

அடியார்கள் அனைவரும் வந்து முருகப்பெருமானின் அருளைப் பெறுவீராக.

**Happy Travels & Tours**
Luxary Video Coach
Jaffna Colombo
Contact Address
Richard Book Shop, Ramalingam Road,
Mudamavadi Thirunelvely, Jaffna
Jaffna 0772288217 Colombo 0773264668

**குமரன் கட்டடப்பொருள் விற்பனையாளர்**
கல், மணல், சிமெந்து, கம்பி ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
கந்தசுவாமி கோயிலடி, இணுவில் மேற்கு, இணுவில்.
T.P: 0774002263
0771754667

**சிவா ஸ்ரோர்ஸ்**
மட்டுவில் வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர்
சகலவகையான கட்டடத் தேவைகளுக்கான சல்லி பெற்றுக்கொள்ளலாம்.

**விதுர்சிகா ஸ்ரோர்ஸ்**
இணுவில் மேற்கு.
அனைத்து வகையான பாடசாலை, வீட்டுச் சமான்களை மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

BLACK&DECKER DEWALT

## யாழ் நகரில்

## இலவச பராமரிப்புச் சேவை முகாம்



பழைய உபகரணங்களிற்கான விசேட 25% மாற்றீட்டு விலைக்கழிவு

மின் வலு சக்தி உபகரணங்களுக்கு மட்டும்

- இலவச பரிசோதனையும் பராமரிப்புச் சேவையும்
- பழுதுபார்ப்புக் கட்டணத்தில் 50% தள்ளுபடி
- உதிரிப்பாகங்களின் விலைகளில் 25% தள்ளுபடி
- விசேட பரிமாற்றச் சலுகை
- மின் வலு சக்தி உபகரணங்களின் செயற்பாட்டை அவதானிக்கும் வாய்ப்பு
- சரியான மற்றும் பாதுகாப்பான பாவனைக்கு ஆலோசனைகள்

**நந்தலால் இரும்பகம்**
இல. 29, ஸ்டான்லி வீதி, யாழ்பாணம்.
2011 ஜனவரி மாதம் 19ம் 20ம் திகதிகளில்

**சுந்தர்சன்**
யாழ் வீதி, மானிப்பாய்.
2011 ஜனவரி மாதம் 21ம் 22ம் திகதிகளில்

மு.ப 9.00 முதல் பி.ப 4.00 வரை

DELMEGE CONSTRUCTION PRODUCTS

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்
**டெல்மேஜ் கொன்ஸ்ட்ரக்ஷன் புரடக்ட்ஸ் தனியார் நிறுவனம்**
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.
**உடனடி அழைப்பு: 077 1095270**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

JAN 2011 TO JUN 2011

20

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி.மா. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி.மா. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2011

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 195 | சீட்டிழுப்புத் திகதி 16.01.2011

வெற்றி இலக்கங்கள்: 07 17 21 46 | சுப்பர் இலக்கம்: 11

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 1,24,82,000/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 99275 | ரூ. 20/= | ரூ. 1,985,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 1 இலக்கத்துக்கும் | 9009 | ரூ. 40/= | ரூ. 360,360/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 7655 | ரூ. 100/= | ரூ. 765,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 2 இலக்கங்களுக்கும் | 687 | ரூ. 200/= | ரூ. 137,400/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 171 | ரூ. 1,500/= | ரூ. 256,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 3 இலக்கங்களுக்கும் | 9 | ரூ. 3,000/= | ரூ. 27,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதேனும் 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 1,24,82,000/= | |
| மொத்த எண்ணிக்கை | 116807 | | ரூ. 4,532,260/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. **12,783,350/=** உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
Website: www.dlb.lk

## மரண அறிவித்தல்

### துரையப்பா (நடராசா) சுதேசன்



நவரத்தினராசா வீதி, கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், (ஆஸ்பத் திரி வீதி) Dispensary Lane, உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா சுதேசன் (16.01.2011) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா (நடராசா) மற்றும் இரத்தினேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற தயாளன் மற்றும் நகுலாதேவி (ஜேர்மனி), பத்மினிதேவி, சாந்தினி, தயாளினி (சுவிஸ்), ரமேசன், குகபாலன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராஜகுலேஸ்வரா (சுதுமலை), ஜெயபாலன் (கண்ணன் - உரும்பிராய்), சிவகுமாரன் (பாபு - உடுவில்), ஜெயராசா (கோண்டாவில்), வனசா (இணுவில்) ஆகியோரின் மைத்துனரும், கோபிகா, டொரித்தியா, கத்தரின், மயூரன், ஹரிஸ்சன், நிசாந்தி, மதுரா, சியாந், கிருத்திகா, தமிக்கா, காயத்திரி, ஐங்கரன், யானிக் ஆகியோரின் அன்பு மாமனும் மதுஸ்சனின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2011) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணிக்கு தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கொலன்னாவ எரிபொருள் குழாய் சேதம்

கொழும்பு,ஜன 18

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் கனிய எண்ணெய்யை துறைமுகத்தில் இருந்து கொலன்னாவ எரிபொருள் களஞ்சியசாலைக்கு எடுத்து செல்லும் இரண்டு குழாய்கள் செயலிழந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய களஞ்சிய நிறுவகம் தெரிவித்துள்ளது

இந்த குழாய் வழியின் தாழ்வான பகுதியில் எண்ணெய்யை எடுத்து செல்வது கடினமாக உள்ளதாக நிறுவகத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் எம். ஆர். டபிள்யூ சொய்ஸா தெரிவித்துள்ளார்

சட்டவிரோத குடியேற்றங்கள் காரணமாகவே இந்த குழாய்கள், தாழ்வடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

எனவே, இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகளை அகற்றி அவர்களுக்காக மாற்று இடங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக சொய்ஸா குறிப்பிட்டுள்ளார்.

(த)

## பூநகரி பிரதேச சபை

பொதுச்சந்தைகள் இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான
**மீள்கேள்வி கோருதல் - 2011**

பூநகரி பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுச் சந்தைகள் இறைச்சிக் கடைகள் 01.02.2011 முதல் 31.12.2011 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான 07.12.2010 உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 26.01.2011 பிற்பகல் 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 26.01.2011 பிற்பகல் 4.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி:- 27.01.2011 முற்பகல் 10.00 மணி

பொதுச் சந்தைகளில் மீன் மரக்கறி சந்தைகளும் மிதிவண்டி மற்றும் வாகன தரிப்பிடங்களும் உள்ளடங்கும்.

2011 ஆம் ஆண்டு பொதுச்சந்தைகள் இறைச்சிக்கடைகள் விபர அட்டவணை

| தொ.இல | குத்தகைகளுக்கான கடை விபரம் | ஆரம்ப கேள்வித்தொகை (VAT + NBT நீங்கலாக | மீளளிக்கக்கூடிய கேள்வித்தொகை | மீளளிக்க முடியாத கேள்வித்தொகை (VAT + NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|
| இரணைதீவு உப அலுவலகம். | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி பொதுச்சந்தை | 60000.00 | 2000.00 | 500.00 |
| 2 | நாச்சிக்குடாச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 12000.00 | 2000.00 | 500.00 |
| 3 | நாச்சிக்குடாச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 12000.00 | 2000.00 | 500.00 |
| 4 | 19ம் கட்டை பொதுச்சந்தை | 18000.00 | 2000.00 | 500.00 |
| 5 | கிராஞ்சி பொதுச்சந்தை | 12000.00 | 2000.00 | 500.00 |
| 6 | வலைப்பாடு பொதுச்சந்தை | 12000.00 | 2000.00 | 500.00 |
| 7 | நாச்சிக்குடா கடற்கரை மாட்டிறைச்சிக்கடை | 412500.00 | 2000.00 | 500.00 |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 8 | மண்ணித்தலை பொதுச்சந்தை | 6000.00 | 2000.00 | 500.00 |
| 9 | முட்கொம்பன் பொதுச்சந்தை | 6000.00 | 2000.00 | 500.00 |
| 10 | பூநகரி பொதுச்சந்தை | 60000.00 | 2000.00 | 500.00 |
| 11 | பூநகரிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 12000.00 | 2000.00 | 500.00 |
| 12 | பூநகரிச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 12000.00 | 2000.00 | 500.00 |
| 13 | பூநகரிச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 572000.00 | 2000.00 | 500.00 |
| 14 | பள்ளிக்குடாச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 458000.00 | 2000.00 | 500.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 15 | ஜெயபுரம் பொதுச்சந்தை | 84000.00 | 2000.00 | 500.00 |
| 16 | ஜெயபுரம்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 12000.00 | 2000.00 | 500.00 |
| 17 | ஜெயபுரம்சந்தை கோழியிறைச்சிக்கடை | 12000.00 | 2000.00 | 500.00 |

கி. துரைசிங்கம்
செயலாளர்,
பிரதேச சபை
பூநகரி

## தேவை

சிறிய அளவிலான தனியார் அலுவலகமொன்றுக்கு பெண் எழுது வினைஞர் தேவை. புதன் (19.01.2011) மாலை 4 மணிக்கு நேரில் வரவும். யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதியில் இருப்பவர்கள் மட்டும் வரவும்.

517, நாவலர் வீதி,
வைமன் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

கமலநாதன் டெனிசியா 837244170v இராச வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்பவரது தே.அ.அ வங்கிப் புத்தகமும் கிளிநொச்சி மக்கள் வங்கிக்கும் 55ஆம் கட்டைக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**0776849095**

## கோழிக் குஞ்சு விநியோகம்

No1 ஒறிஜினல் பிறிமா பேட்டுக் குஞ்சுகள் 20-01-2011 காலை விநியோகிக்கப்படும்.
முன்பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். T.P:-021 2226944

## Short Period Success

இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multinational) கம்பனிக்கும் அதன் கிளைகளுக்கும் முகாமைத்துவத்துக் கான ஆள்சேர்ப்புகள் இடம்பெறுகின்றன. தாங்களும் O/L, A/L சித்தி பெற்றவராயின் சர்வதேச ரீதியான பயிற்சியுடன் உயர்ந்த சம்பளமும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
Mr.Udaya:-0717494735, 0214915550
Srikanth:-0770771377

## தேவை

கணினிக் கல்வி நிறுவனத்துக்கு தளபாடங்கள் தேவை.
[illegible]
தொடர்பு:-077 6393747

## கைதடி அருள்மிகு ஒக்கலை விநாயகர் ஆலயம்

கண்டி வீதி, கைதடி.

**ஆலய திருப்பணி வேலைகள் கேள்வி கோரல்**

வேலைகள் விபரம்:

**01. வர்ணம் தீட்டல்**
**02. கதவுகள் செய்தல்**

வேலை பற்றிய மேலதிக விவரங்களை நேரில் அறிந்து விண்ணப்பிக்கலாம். மேற்குறித்த வேலைகளுக்கான விண்ணப்பங்களை 01.02.2011 இற்கு முன் தேவஸ்தான அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

பரிபாலன சபை,
கைதடி அருள்மிகு ஒக்கலை விநாயகர் ஆலயம்,
கைதடி.

## ACCOUNTANT

A first and foremost star class hotel built under B.O.I., situated in the centre of JAFFNA town seeks a dynamic and versatile individual for the above position.

The ideal candidate should possess the following

Fully or partly qualified in CIMA/CHARTERED/ACCA or equivalent together with minimum 3 years post qualifying experience at senior managerial level.

Computer literacy and experience in the computerized system are mandatory.

Should posses good management skills, be a team player and have the ability to communicate at all levels.

Apply immediately with CV


Excellent carrier prospect and salary commensurate with experience.

**General Manager**

*TILKO JAFFNA CITY HOTEL PVT. LTD.*
*70/6, K.K.S. Road, Jaffna.*
*Email; citystarkb@gmail.com.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணம் யாழ்ப்பாணத்தில்



யாழ்பாணம், ஜன.18
ஐ.சி.சியின் உலகக் கிண்ணம் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கம் மேற்கொண்டுள்ளது.

நேற்று இரவு யாழ்ப்பாணத்தை வந்தடைந்த ஐ.சி.சி உலக்கக் கிண்ணத்துடன் பெரிய பந்தும் எடுத்து வரப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணத்துடன் ஐ.சி.சியின் பிரதிநிதிகள் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதிநிதிகள் ஆகியோரும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

ஐ.சி.சியின் உலகக் கிண்ணத்தை மக்கள் பார்வைக்கு வைக்கும் நிகழ்வு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அண்மையில் காலி முகத்திடலில் ஆரம்பித்துவைத்தார். அதன் பின்னர் உலகக்கிண்ணம் பல மாவட்டங்களில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த வரிசையில் இக் கிண்ணம் நேற்று இரவு யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டது.

இது இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ்.போதனை வைத்தியசாலையின் முன்பாக யாழ். மணிக்கூட்டு வீதியில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும். இது தொடர்பான ஆரம்ப நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மணிக்கூட்டு வீதியில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், ஆர்வலர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.சி.சியின் உலகக் கிண்ணம் யாாழ்.மாவட்டத்துக்கு எடுத்து வரப்படுகின்றமை இதுவே வரலாற்றில் முதற்தடவை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-23)



இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் சிரேஷ்ட உதைபந்தாட்ட லீக் அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்ற பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியினருக்கு நேற்று யாழ்.நகரில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வெற்றிக் கிண்ணம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது வீரர்கள் ஜனாதிபதியுடன் நிற்பதைக் காணலாம்.

# தேசிய கூடைப்பந்தாட்டத்தில் யாழ். ஆண்கள் அணி மூன்றாமிடம்

யாழ்பாணம், ஜன.18
இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய 48ஆவது தேசிய மட்ட சிரேஷ்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக்கொண்டது.

கண்டியில் நேற்று முன்தினம் ஆண்கள் பிரிவினருக்கான மூன்றாம் இடத்துக்கான போட்டியில் யாழ்.மாவட்ட அணி குருநாகல் மாவட்ட அணியுடன் மோதியது. இதில் யாழ்.மாவட்ட அணி தன்னை எதிர்த்து விளையாடியது. குருநாகல் மாவட்ட அணியை 64:27 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிகொண்டது.

யாழ்.மாவட்ட அணி சிரேஷ்ட்ட மட்டப்போட்டிகளில் முதல்முறையாக பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-23)

### உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு

# தமிழக வீரர் அஷ்வினுக்கு வாய்ப்பு; ரோஹித், ஸ்ரீசாந்துக்கு கல்தா!



அஷ்வின்

சென்னை, ஜன. 18
உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் தமிழக வீரரான அஷ்வின் இடம்பிடித்துள்ளார். அதேவேளை, பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரரான ரோஹித் சர்மா மற்றும் வேகப்பந்துவீச்சாளரான ஸ்ரீசாந்த் ஆகியோருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான 15 வீரர்கள் அடங்கிய இந்திய அணி நேற்று சென்னையில் வைத்து அறிவிக்கப்பட்டது.

இந்தியக் கிரிக்கெட் அணி தேர்வுக் குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் தலைமையில் நேற்று சென்னையில் நடந்த கூட்டத்திற்குப் பின்னர், இந்தியக் கிரிக்கெட் சபை செயலர் சீனிவாசன், உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய வீரர்களின் பெயர்களை அறிவித்தார்.

தற்போது சச்சின், ஷேவாக், கம்பீர், பிரவீன்குமார் ஆகியோர் காயமடைந்துள்ளனர். எனினும், அவர்கள் உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் உடல் தகுதி பெற்றுவிடுவர் என்பதைக் கருத்திற்கொண்டு அவர்களும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணி விவரம் வருமாறு:- டோனி (அணித்தலைவர்), சச்சின், ஷேவாக், கம்பீர், விராத் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா, யுவராஜ், ஹர்பஜன், சஹீர்கான், பிரவீன்குமார், முனாப் பட்டீல். நெஹ்ரா, அஷ்வின், பியுஸ் சாவ்லா, யூசுப்பதான்.

# வோஸ்னியாக்கி, ஷரபோவா, நா லீ 2ஆவது சுற்றுக்கு முன்னேற்றம்



வோஸ்னியாக்கி

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் பெண்கள் பிரிவில், கரோலின் வோஸ்னியாக்கி, ஷரபோவா, நா லீ ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

நேற்று ஆரம்பமாகிய ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில், உலகின் முதல் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ஆர்ஜென்ரீனாவின் துல்காவை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடிய வோஸ்னியாக்கி 6-3, 6-4 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

அதேவேளை நடைபெற்ற இன்னொரு ஆட்டத்தில் டென்னிஸ் உலகில் கவர்ச்சி நங்கையாக வலம் வருபவரும் தரவரிசையில் 16ஆவது இடத்தில் உள்ளவருமான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, தாய்லாந்து வீராங்கனையான தமரைனை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் ஷரபோவா 6-1, 6-3 என்ற நேர்செற் கணக்கில் வென்றார். இந்த வெற்றிமூலம் அவர் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் 11ஆவது இடத்தில் உள்ள சீன வீராங்கனையான நா லீ, சுவிட்ஸர்லாந்து வீராங்கனையான சொவியா அர்விட்ஸனைச் சந்தித்தார் முதல் செற்றை எளிதாக வென்ற நாலி, இரண்டாவது செற்றைச் சற்றுச் சிரமத்தின் மத்தியில் வெற்றிபெறவேண்டியதாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸ்பா - யூனுஸ்கான் நிதான ஆட்டம்; நியூஸிலாந்துக்கு பாகிஸ்தான் பதிலடி!

வெலிங்டன், ஜன. 18

நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில், மிஸ்பா உல் ஹக் - யூனுஸ்கான் ஜோடியின் நிதான ஆட்டம் காரணமாக பாகிஸ்தான் அணி, எதிரணிக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக ஓட்டங்களைச் சேர்த்துள்ளது. நியூஸிலாந்து அணி அடித்த 356 ஓட்டங்களையும் தாண்டி 376 ஓட்டங்களை பாகிஸ்தான் அணி சேர்த்தது.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில், கடந்த சனியன்று இரண்டாவது ஆட்டம் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 356 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 134 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அஷார் அலி 62 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

நேற்று 222 ஓட்டங்கள் பின்னிலையுடன் மீண்டும் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி, அஷார் அலியை விரைவாகவே இழந்தது. அவர் மொத்தமாக 67 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்து சென்றார்.

அஷார் அலியின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து இணைந்த யூனுஸ்கான் - மிஸ்பா உல் ஹக் ஜோடி நின்று நிலைத்து சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்து, அணியை வலுவான நிலை நோக்கி நகர்த்தியது.

சிறப்பாக ஆடிய யூனுஸ்கான் 73 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து சென்றார். அப்போது பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 286 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

பின்னர் வந்த அஸாட் சபீக் ஓட்டமெதுவும் பெறாமல் வந்த வேகத்திலேயே 'பெவிலியன்' திரும்பினார். அவரைத் தொடர்ந்து அட்னன் அக்மல் (22), அப்துல் ரெஹ்மான் (5) ஆகியோரும் சிறிது நேரம் களமாடிவிட்டு ஆட்டமிழந்து சென்றனர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த மிஸ்பா உல் ஹக், ஓர் ஓட்டத்தால் சதத்தைத் தவற விட்டார். அவர் 99 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார்.

அவரைத் தொடர்ந்து வந்த உமர் குல் (19), தன்வீர் அஹ்மட் (7) ஆகியோரும் ஆட்டமிழந்து நடையைக்கட்ட, பாகிஸ்தான் அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 376 ஓட்டங்களைப் பெற்றது. வாஹப் ரியாஸ் 7 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், மாட்டின், வெற்றோரி ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும், சௌத்தி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 20 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி, நேற்று ஆட்ட நேரம் முடியும்போது விக்கெட் இழப்பின்றி 9 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. குப்தில் ஓர் ஓட்டத்துடனும், மக்கலம் 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாளாகும்.



யூனுஸ்கான் - மிஸ்பா

## இந்திய-தென்னாபிரிக்க அணிகள் கேப்டவுனில் இன்று மோதல்!

கேப்டவுன், ஜன. 18

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான 3ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கேப்டவுனில் இன்று நடைபெறவுள்ளது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது.

டர்பனில் நடந்த முதலாவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.

ஜோகன்னஸ்பேர்க்கில் நடந்த 2ஆவது போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்நிலையில் மூன்றாவது போட்டி இன்று கேப்டவுனில் நடைபெறவுள்ளது.

2ஆவது போட்டியில் இந்திய வீரர்களின் பந்து வீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. இதனால் இந்திய அணியின் வெற்றி தொடரும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

அதேவேளை, துடுப்பாட்டம் மிகவும் மோசமாக இருந்தது. இதனால், துடுப்பாட்ட வீரர்கள் தமது திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

ஜோகன்னஸ்பேர்க் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றியின் விளிம்புவரை வந்தே தோற்றது. இதனால், அந்த அணி தொடரை முன்னிலைப்படுத்தும் விதமாக வெற்றி பெற முழுத் திறமையுடன் விளையாடும்.

அந்த அணியின் வேகப்பந்துவீச்சாளரான டிசோட்சோபே இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்குக் கடும் சவாலாக விளங்குகிறார்.

இரு அணிகளும் 63ஆவது ஆட்டத்தில் இன்று பங்கேற்கின்றன. இதுவரை நடந்த 62 போட்டிகளில் இந்தியா 23 ஆட்டங்களிலும், தென்னாபிரிக்கா 37ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளன. 2 ஆட்டங்களுக்கு முடிவு இல்லை.

இன்று மோதும் இரு அணி வீரர்கள் விவரம் வருமாறு:-

இந்தியா:-

டோனி (அணித்தலைவர்), முரளி விஜய், யுவராஜ் சிங், கோஹ்லி, ரெய்னா, ரோஹித் சர்மா, யூசுப்பதான், ஹர்பஜன்சிங், சஹீர்கான், முனாப்பட்டேல், நெஹ்ரா, பார்த்தீவ் பட்டீல், அஸ்வின், சாவ்லா, ஸ்ரீசாந்த், இஷாந்த் சர்மா,

தென்னாபிரிக்கா:-

ஸ்மித் (அணித்தலைவர்), அம்லா, கிங்ராம், டிவில்லியர்ஸ், டுமினி, மில்லர், பர்னல், ஸ்ரெய்ன், போத்தா, டிசோட்சோபே, மோர்கல், பெலுசிஸ், இம்ரான் தாகீர், பீற்றர்சன்.

### ஆரம்பமானது ஆஸ்திரேலிய டென்னிஸ்;

## முதல் சுற்றில் பெடரர் வெற்றி!



பெடரர்

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்தொடரின் முதல் சுற்று ஆட்டங்களில், ரோஜர் பெடரர், அண்டி ரோடிக் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

2011ஆம் ஆண்டின்முதலாவதுகிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டித் தொடரான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்ண் நகரில் நேற்று ஆரம்ப மாகியது. நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில், தரவரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் சுவிட்ஸர்லாந்து வீரரான ரோஜர் பெடரர், ஸ்லோவோக்கியாவின் லூகஸ் லாக் கோவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ரோஜர் பெடரர், எதிராளியைப் பயங்கரமாகத் திணறடித்தார்.

இறுதியில், 6-1, 6-1, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். இந்த வெற்றி மூலம் அவர் இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

அதே வேளை நடைபெற்ற இன்னொரு ஆட்டத்தில் தரவரிசையில் 8ஆவது இடத்தில் இருக்கும் அமெரிக்க வீரரான அண்டி ரோடிக், கிரேஸ் வீரரான ஜான் ஹயீக்கை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் அதிரடியாக ஆடிய அண்டி ரோடிக், 6-1, 6-2, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.



32 நாள்களே

உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள். எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை. பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள். எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்.... எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள். சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"



சங்கானைக் கல்விக் கோட்டம்
சைவத்திருமுறை விழாவும் சைவநெறித் தொண்டுபடு செயல் நிகழ்ச்சிப் பரிசளிப்பு விழாவும் - 2010

இடம்:- யா/வட்டு மத்திய கல்லூரி
காலம்:- நாளை (19.01.2011) புதன்கிழமை காலை 8.30 மணி
தலைவர்:- திரு து. எங்கரசு அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், சங்கானைக் கல்விக்கோட்டம்)

நிகழ்ச்சி நிரல்

காலை 8.30 மணி
சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் பூஜையும் வழிபாடும்.
காலை 8.45 மணி
சங்கரத்தை பிட்டியம்பதி அம்பாள் ஆலய வழிபாட்டுடன் திருமுறைச் சுவடிகளும் நாயன்மார்களின் திருவுருவப் படங்களும் பாடசாலையின் விழா மண்டபத்துக்கு எடுத்து வருதல்.
காலை 9.00 மணி
மங்கள விளக்கேற்றல்
இறைவணக்கம்
வரவேற்பு நடனம்: யா/வட்டு மத்திய கல்லூரி மாணவர்கள்
வரவேற்புரை: திரு ஆ.பேரின்பநாயகம் அவர்கள்
(அதிபர், யா/அராலி இந்துக் கல்லூரி)
அருளாசிகள்:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்)
தலைமையுரை: திரு து. எங்கரசு அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானைக் கல்விக் கோட்டம்)
வாழ்த்துரை: உயர்திரு ஆ.இராஜேந்திரன் அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
திருமதி தே.பாபு அவர்கள்
(பிரதேச செயலர், வலி, மேற்கு பிரதேச செயலகம், சங்கானை)
சிறப்புரை:- திரு தி. சிவதட்சணாமூர்த்தி அவர்கள்
(ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வடமாகாணம்)
மாணவர் நிகழ்ச்சிகள்
பண்ணிசை புராண படனம் கதாபிரசங்கம்
பரிசில் வழங்கல்
நன்றியுரை: திரு ந. சபாரத்தினசிங்கி அவர்கள்
(அதிபர்,யா/வட்டு மத்திய கல்லூரி)
விழா சிறப்பு வாழ்த்துக்கள்
முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்
மக்கள் வங்கி - சங்கானை

**Sales Executive**

**For immediate recruitment**

As we extend our Sales & Services to the Jaffna Peninsula, we are looking for young, dynamic males who are capable of selling:-


**Food Processing & Packaging Machinery.**

**The ideal candidate should possess:-,**
- Sound communication skills in Tamil as well as English.
- GCE/AL with physics
- Age: Less than 28 years
- Should be able to travel North and East extensively and report to Colombo office.
- Computer literacy
- Driving / riding license

An attractive remuneration package together with other benefits for the right candidate. Send us your CV immediately by e mail.

**CMC Engineering Export GmbH**
346, Nawala Rd, Rajagiriya. Tel : 0112806776/9
E mail : colombo@cmc.slt.lk

கண்ணீர் அஞ்சலி



மா. சிவஞானசுந்தரம் J.P
(உத்தரவுபெற்ற நில அளவையாளர், இணுவில், அச்சுவேலி)

எமது சங்கத்தின் முன்னாள் உபதலைவரும், நீண்டநாள் உறுப்பினருமாகிய மா.சிவஞான சுந்தரம் அவர்களின் மறைவையொட்டி எமது சங்கத்தின் சார்பில் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் சங்கம்
(வட பகுதி)

(109275)

## ஊரிக்காடு சடலம்; இந்தியத் தூதரகம் தமிழக அரசுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டில் மீட்கப்பட்ட ஆண் ஒருவரின் சடலம் தொடர்பாகத் தமிழக, பாண்டிச்சேரி அரசுகளுக்கு இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

மீட்கப்பட்ட சடலம் இந்தியருடையதாக இருக்கலாம் என்று பருத்தித்துறை நீதிமன்றம் கருதி, அந்தச் சடலம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத்தூதரகத்துக்கு அறிவித்திருந்தது.

இதையடுத்து இந்த விவரம் யாழ். துணைத்தூதரால் தமிழக, பாண்டிச்சேரி அரசுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-ஐ)

## யாருடைய சைக்கிள்கள்?

யாழ்ப்பாணம், ஜன.18

சுன்னாகம் பொலிஸாரினால் அநாதரவாகக் கிடந்த நிலையில் கடந்தவருடம் மீட்கப்பட்ட இரண்டு சைக்கிள்களை உரியவர்களிடம் ஒப்படைக்க மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி கடந்த 12.08.2010 அன்று இரவு சுன்னாகத்தில் மீட்கப்பட்ட (555 56900 என்ற இலக்கமுடைய) சைக்கிள், கடந்த 03.10.2010 அன்று இரவு சுன்னாகத்தில் மீட்கப்பட்ட (5610411) சைக்கிள் என்பனவே உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஒ-10)

## அழகியல் பாட செயல்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்படவிருந்த ஜீ.சி.ஈ. (சாதாரணதர) அழகியல் பாட செயல்முறைப் பரீட்சை நடைபெறும் தினங்கள் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகள் நடைபெறும் சரியான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

## வடக்கு கல்வி அமைச்சு மருதனார்மடத்தில்

யாழ்ப்பாணம், ஜன.18

வடமாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணக் கல்வி அமைச்சு என்பன நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு தமது செயற்பாடுகளை மருதனார்மடம், வலிகாமம் கல்வி வலய கட்டடத்தில் சம்பிர பூர்வமாக ஆரம்பிக்கின்றன.

இந்த நிகழ்வுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வித் திணைக்களம், வடமாகாணக் கல்வி அமைச்சு - என்பன கேட்டுள்ளன.

(ஒ-10)

O/L தகமையுடன் மருத்துவத்துறையுள் புகும் வாய்ப்பு

"CERTIFIED MEDICAL ASSISTANT"(An US Curriculum)

சான்றழிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி புதிய பிரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.(Batch -#3)

CMA
US Curriculum

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு03)

Quality Assured

A pathway for Private Nursing

தனியார் வைத்தியசாலைகளில்,பல்தேசிய மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் Nursing Staff,Admins, Medical Sales Rep,Marketing Rep போன்ற வெற்றிடங்களை உடன் நிரப்புவதற்கான 6 மாத கால கல்வி நெறி.



After O/L
6 Months Training

City Guilds Qualified

MBBS வைத்திய விரிவுரையாளர்களால் லாவா வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.

Lava Hospitals
பயிற்சியின் பின் வேலை உறுதிப்படுத்தப்பட்டது.

தகமைகள் : O/L 4 பாடங்கள் சித்தி,நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி. குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே.

பதிவுகளுக்கு முந்துங்கள். விபரங்கள் நேரடியாக மட்டும் வழங்கப்படும்

**Knowledge Universe®**
Malaysian College of Business and IT
Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info
லவா வைத்தியசாலை மேல்மாடி

## மரண அறிவித்தல்

### முருகேசு பொன்னுத்துரை

*(இளைப்பாறிய பரிசோதகர்·இ.போ.ச.)*



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலில் வசித்து வந்தவருமான முருகேசு பொன்னுத்துரை (இளைப்பாறிய பரிசோதகர் இ.போ.ச.), நேற்று 17.01.2011 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - பொன்னு தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற வேலாயுதம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் இரத்தினதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகலிங்கம், செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் இரத்தினேஸ்வரி, மாதவர், அப்புத்துரை, மாரிமுத்து ஆகியோரின் சகோதரனும் புஸ்பராணி, ஜெகநாதன், சுசீலாதேவி, ஜெயக்குமார், கமலகுமார், சத்தியபாமா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவலிங்கம், ஸ்ரீகௌரி, பரஞ்சோதி, நந்தவதனி, மாலினி, சசிகலா, தியாகராசா ஆகியோரின் மாமனும் பாபு, வேவி, மதூரன், வாரணி, முரளி, சிவநாதன், பவானி, இமையானி, சொற்குமரன், அபிராமி, ஜெசிபா, ஜெனனி, ஜெனேபன், மதுஷா, தேனுஷா ஆகியோரின் பேரனும் தர்சிகனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம்பின்னர்அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
முனியப்பர் கோயிலடி,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

◆ வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளீரே!

எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்**

**தைப்பூச நாளில் (20-01-2011 வியாழன்) ஆரம்பம்**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- கைவேலை
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (Hair Dressing & Styling)
- பூவேலை
- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- Saree Work

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகளும் நடைபெறும்.

- தையல் அறிவு அற்றவர்களுக்கான 6 மாத தையல் (உடை தயாரித்தல்) பயிற்சிகள்.

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ் சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய கால்கோள் விழாக்கள்

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களைச் சேர்த்துக்கோள்ளும் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார். (ஏ-10)

***

யாழ்ப்பாணம், ஜன.18

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கால் கோள் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

***

யாழ்ப்பாணம், ஜன.18

கட்டுடை சைவ வித்தியாசாலையின் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ற-302,100)

***

வடமராட்சி, ஜன.18

பருத்தித்துறை, தட்டாதெரு மெதடிஸ் தமிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி. பாமா நவரத்திம் தலைமையில் நடைபெறவுள்ளது.

***

யாழ்ப்பாணம், ஜன.18

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் கால்கோள் தினவிழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 8.45 மணிக்கு பாடசாலை அதிபர் என்.தன பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

***

வடமராட்சி, ஜன.18

பருத்தித்துறை, தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

***

யாழ்ப்பாணம், ஜன.18

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையின் கால் கோள் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி அ.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ற-302)

***

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ். புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தின் கால்கோள் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

***

யாழ்ப்பாணம், ஜன.18

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

***

வலி.வடக்கு, ஜன.18

தெல்லிப்பளை தந்தை செல்வா தொடக்க முன்பள்ளி மாணவர்களின் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் க.காராளசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-86)

***

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ். விக்னேஸ்வர ஆரம்பப் பாடசாலையின் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிமை காலை 9.30 மணிக்குக் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

***

வடமராட்சி, ஜன.18

நெல்லியடி மெதடிஸ்தமிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் ந.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-236)

***

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரியின் கால்கோள் விழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

***

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ். இருபாலை சீ.சீ.த.க. பாடசாலையின் கால்கோள் விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி.க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ந்துள்ளன. கறிமிளகாய் ஒரு கிலோ 500 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. கிழக்கில் லேசான மழை பெய்த போதும் வெள்ளம் வடிந்து கொண்டிருக்கின்றது.

கிழக்கில் 90 சதவீதமான பாடசாலைகள் நேற்றுத் திறக்கப் பட்டன. வெள்ளம் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள் தங்கியிருக்கும் பாடசாலைகள் இன்னும் ஓரிரு தினங்களில் திறக்கப்படுமென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வயல் காணிக ளில் வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படுகிறது.

## நமது நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருத்தித் திட்டங்களை சில ஊடகங்கள் வெளிப்படுத்துவதில்லை. வெளிநாடுகள்தான் அபிவிருத்திகளை மேற்கொள்கின்றன என அவைசெய்தி வெளியிடுகின்றன. வெளிநாட்டின் உதவியுடன் அபி விருத்திப் பணிகளை மேற்கொண் டாலும் அந்தக் கடனை அரசு வட்டியும் முதலு மாகத் திருப்பிக் கொடுக்கவேண்டும். குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இன, மத, குல வேறுபாடுகளை உண்டுபண்ணும் அரசியல்வாதிகளை இனம்கண்டு மக்கள் ஓரங்கட்ட வேண்டும்.

வடக்கின் அபிவிருத்தியானது துரித கதியில் நடைபெற்று வருகிறது. ஏனைய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணி களைப் போல வடக்கிலும் மேற்கொள்வோம்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். எனவே சமா தானம், சமத்துவம், சௌபாக்கியம் எப்போதும் இங்கு நிலைக்க வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியைக் குழப்ப வடக்கிலும், தெற்கிலும் பாதாள உலகக் கோஷ்டியினர் சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த நாட்டில் இனிமேல் பயங்கர வாதத்துக்கு இடமளிக்கப்படமாட்டாது. அப்பாவி மக்களாகிய உங்களைப் பாது காப்பதே எனது கடமை. நீங்கள் என்னை நம்பலாம்.

வடபகுதியில் சுகாதாரம், மின்சாரம், வீதி, வீடமைப்பு என பல்வேறு அபிவிருத்திகளைப் பலகோடி ரூபா செலவில் எதிர் காலத்தில் முன்னெடுக்கவுள்ளோம். அவ்வாறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க அரசிடம் நிதியில்லாமல் போனாலும் வட்டிக்குப் பணம் எடுத்தாவது அதனை மேற்கொள்வோம். இன, மத வேறுபாடுகளை மறந்து ஒரு தேசியக் கொடியின் கீழ் ஒன்றுபட்டு இலங்கைத் திருநாட்டைக் கட்டியெழுப்புவோம். இன்றைய இந்தத் தேசிய பொங்கல் விழாவை ஒழுங்கு செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பாராட்டுகிறேன். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கிற்கு மட்டுமல்ல, இந்த இலங்கை நாட்டின் முழுவதிற்கும் சொந்தமான அமைச்சர் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது என்றார் ஜனாதிபதி.


## உள்ளம் நெகிழ பதினாறாம் ஆண்டு நினைவலைகள்

மனம் மகிழ
05
★
04
★
1926



உள்ளம் நெகிழ
15
★
01
★
1995

திதி: பூர்வபக்க சதுர்த்தசி

அமரர் **ஏரம்பு சோதிலிங்கம்** (மண்டைதீவு - 8)

கட்டழகும் கண்டோர் மயங்கும் பொன்னிறமேனியும்
கனிவான பார்வையும் கம்பீர நடையும் கொண்ட எம்
செம்மல் கண்ணை இமை காப்பது போல எம்
குடும்பத்தைக் காத்து கலங்கரை விளக்காக இருந்து எம்மை
வழிநடத்திய அன்புத் தெய்வமே, நீங்கள் மறைந்து
பதினாறு ஆண்டென்ன பலநூறு ஆண்டானாலும் மாறாது
எம்துயர் மறையாது உங்கள் நினைவுகள்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்ற

2/2, 1ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
நீராவியடி.

குடும்பத்தினர்.
சோ. இலட்சுமிகாந்தன்,
சோதி சுந்தரலிங்கம்

## மரண அறிவித்தல்

### தங்கராசா திருச்செல்வம்



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா திருச்செல்வம் (பாலநாகம்மாள் ஆலய பூசகர்) நேற்று (17.01.2011) திங்கட்கிழமை காலை சிவபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா தங்கராசா தங்கரத்தினம் தம்பதிகளின் புதல்வரும், திருமதி ஜெயதேவி அவர்களின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம், சிவம், இராஜசிங்கம் (தபாலகம் சங்கானை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாதம் ஜெயபாலன் அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கராச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகலிங்க சுவாமி வீதி,*
*சங்கானை.*
(ச-574964)

*தகவல்:*
க.இராஜசிங்கம்
(சகோதரன், தபாலகம் சங்கானை)

## யாழ்.ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை கால்கோள் விழா

தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று (18.01.2011) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை நூலக மண்டபத்தில் இடம்பெறும்.

ஸ்கந்தா சமூகம்,
கந்தரோடை சுன்னாகம்

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி தில்லையம்பலம்

எமது பிரதேச சபை தலைமைப் பணிமனை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி **செ.சுசீலாதேவி** அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் சின்னத்தம்பி **தில்லையம்பலம்** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலி.கிழக்கு பிரதேச சபை
[illegible]

## மரண அறிவித்தல்

### நாகமுத்து நடராசா



கோண்டாவில் மேற்கு, பாடசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்போது கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கில் வசித்தவருமான நாகமுத்து நடராசா நேற்று (17.01.2011) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலம் சென்ற யோகம்மாவின் அன்புக் கணவரும் காலம் சென்றவர்களான சோதிப்பிள்ளை, நல்லமுத்து, செல்லையா, ராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரோஜினிதேவி, யோகராசா, குலமணிதேவி, யோகேஸ்வரன் திருச்செல்வம், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற புவனேஸ்வரன், மற்றும் சுதந்திரேஸ்வரன் ரேவதி (ஆசிரியை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணானந்தா, குகேந்திரன், சுபாசினி, கமலராணி, சிவசக்தி, சுகுமாரி, காந்திமதி, சிவசிதம்பரம் (அதிபர் யா/கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனன், சிவானி, லக்ஷிதன், ஆர்த்தி, மணிவண்ணன், கிருத்திகன், திவாகரி, தேவகரி, ஜானுதி, ஜனதன், ஜதிர்சன், ஜனுஜா, ஜனார்த், ஜெனுசா, கஜன், சஜனி, கிருஷிகா, கிரிஷன், ஆரபி, மகிழ்நன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.01.2011) செவ்வாய்க்கிழமை பி.ப ஒருமணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோணாவளை வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்*
*தொ.பே.: 021 3211123*
(109290)

*தகவல்:*
ந.திருச்செல்வம் (மகன்)
பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியமனப் பத்திரங்களின் பின்னரே தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம்

## அதற்கு முன்னர் இல்லை என்கிறார் ஆணையாளர்

கொழும்பு, ஜன.18

நியமனப் பத்திரம் கோரப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் எமக்கு இல்லை. நியமனப் பத்திரம் தாக்கல் செய்த பின்பு தேர்தலை ஒத்திவைக்க அதிகாரம் உண்டு.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடந்த கலந்துரையாடலிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலையால் கிழக்கு மாகாணத்திலுள்ள மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டும், இடம்பெயர்ந்தும் உள்ளனர்.

இந்த நிலையில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுத் தாக்கலுக்கான திகதியை பிற்போடுமாறு பல்வேறு அரசியற் கட்சிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

தேர்தலை ஒத்தி வைப்பதற்கான அதிகாரம் எனக்கு இல்லை. சட்டத்தில் அதற்கான திருத்த மூலங்களோ, இடமோ இல்லை.

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே தனக்கு அந்த அதிகாரத்தை பாவிக்க முடியும். ஆகையால் தற்போது தேர்தலை ஒத்திவைக்க முடியாது.

கிழக்கில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலையால் தேர்தலை ஒத்தி வைக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது – என்றார்.

அனைத்து மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ஒ-ஐ-15)

# நகரில் பலத்த பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

ஜனாதிபதியின்வருகையையொட்டி நேற்றும் நேற்றுமுன்தினமும் யாழ். நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின் விசேட பாதுகாப்புப் பிரிவினர் மட்டுமன்றி வெளியூர்களில் இருந்து வரவழைக்கப்பட்ட பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் வீதிகளில் பாதுகாப்புப் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

குறிப்பிட்ட சில வீதிகள் போக்குவரத்துக்கும் தடை செய்யப்பட்டிருந்தன. (ஒ)

## பௌர்ணமி கலைவிழா

கிராமியக் கலை, பண்பாடு விழுமியங்களை மேம்படுத்தும் வகையில் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பௌர்ணமி கலைவிழா ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் நடத்தப்படவுள்ளது.

இவ்வகையில் முதலாவது பௌர்ணமி கலைவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## உள்ளூராட்சி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலுமுள்ள தேர்தல் ஆணையாளர்கள், பிரதித் தேர்தல் ஆணையாளர்கள், தெரிவத்தாட்சி அதிகாரிகள் உள்ளிட்டோரை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க நேற்றுக் கொழும்பிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுகளின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான திகதி, வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கான இறுதித் திகதியான வரும் 27ஆம் திகதியன்று அறிவிக்கப்படும்.

தேர்தல் செயலகத்தில் நேற்று நடைபெற்ற பேச்சுகளில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் ஏற்கும் ஒழுங்கு விதிகள் தொடர்பாக அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அதிகாரிகளுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தல் வழங்கினார் என்று மேலதிக தேர்தல் ஆணையாளர் கூறினார்.

இந்தச் சந்திப்பில் தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க, பிரதித் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, மேலதிக தேர்தல் ஆணையாளர் டபிள்யூ.பி.சுமணசிறி உள்ளிட்டோருடன் தேர்தல் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஒ-சி)

## யாழ்ப்பா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிபாலசுந்தரம் நிமோஷா (வயது 31) காயமடைந்தார். தொடைப் பகுதியில் குண்டு துளைத்த நிலையில் இரவு 8.30 மணியளவில் அவர் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் வீட்டில் கணவருடன் உரையாடிக் கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். தேடுதல் நடவடிக்கைகளும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. உடனடியாக யாரும் கைது செய்யப்பட்டார்கள் என்று தகவல் இல்லை. மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ-3-10)

# இலங்கைப் பிரச்சினையில் தலையிடக்கோரி தமிழகத்தில் இருந்து டில்லிக்கு நடைபயணம்

சென்னை, ஜன. 18

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் தலையிட்டு, அதனைத் தீர்த்து வைக்குமாறு கோரி தமிழ் நாட்டில் இருந்து இந்தியத் தலைநகரான டில்லிக்கு நடைப்பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12 மணியளவில் ஸ்ரீபெருபுதூர் ராஜீவ் காந்தி நினைவு இடத்தில் இருந்து இந்த நடைபயணம் ஆரம்பமானது.

தமிழகத்தில் நிலைகொண்டுள்ள ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்தினர் இந்த நடை பயணத்தினை ஏற்பாடு செய்திருந்தனர். கணிசமான அளவு மக்கள், புழல் அகதிகள் முகாமிலுள்ள பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ். ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.

100க்கு மேற்பட்ட ஈ.என்.டி.எல்.எவ். உறுப்பினர்கள் சீருடையுன் அணிவகுத்து நிற்க அவர்களது கட்சிக் கொடியை அசைத்து இந்திய ஆளும் கட்சியான காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.அன்பரசு ஊர்வலத்தைத் தொடக்கி வைத்தார்.

"இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ராஜீவ் காந்தியினால் அமுல்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப் பந்தமே சரியான தீர்வு. அப்படி ஒரு அருமையான தீர்வை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முதலில் ஏற்று கொண்டார். பின்னர் வைகோவின் பேச்சைக் கேட்டே பிரபாகரன் அதை மறுதலித்தார். அது மட்டுமல்ல, முல்லைத்தீவில் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வைகோ அமெரிக்கா சென்றார். அங்கு ஒபாமாவைச் சந்தித்தார்.

அமெரிக்க உதவி கிடைக்கப் போகிறது எனச் சொல்லி பிரபாகரனைச் சமாதானத்துக்கு வர விடாமல் வைகோ தடுத்தார். வைகோ புலிகளின் கைக் கூலி" என்று தெரிவித்தார்.

ஊர்வலம் டில்லியைச் சென்றடைந்ததும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் தலையிட்டு அதனைத் தீர்த்து வைக்கும்படி சோனியா காந்தியிடம் மகஜர் கையளிக்கப்படும் எனவும் ஈ.என்.டி.எல்.எவ். தெரிவித்துள்ளது. (சி)

வரலாறு
திரு SS.தாஸ்
A/L 2012
ஞவி, ஆயிறு 12pm
A/L 2011
ஞவி, ஆயிறு 1pm
A/L 2013
ஞவி, ஆயிறு 2pm
Paper Class
ஆரம்பம்: புதன் 5.50pm
யூனிவேர்சல்

திருநெல்வேலியில் மேல் மாடிவீடு வாடகைக்கு
நவீன முறையில் அமைக்கப்பட்ட நான்கு அறைகள் மாபிள் பதிக்கப்பட்ட Hall சகல வசதிகளும் கொண்ட மேல்மாடி வீடு மட்டும் வாடகைக்கு விடப்படும். யாழ்.பல்கலைக்கழக மாணவிகளுக்கும் அல்லது அலுவலகத்திற்கும் கொடுக்கப்படும்.
தொடர்பு:- K.மோகநாதன் T.P:
50/1, பலாலி வீதி, திருநெல்வேலி. 0213210423

வீடு வாடகைக்கு
யாழ்.நகரில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். நிறுவனங்கள், N.G.O களுக்கு மட்டும் வழங்கப்படும். வாகன தரிப்பிட வசதியுண்டு.
மேலதிக விவரங்களுக்கு:- 0779932630

விசேட பஸ் சேவை
Abishek Travels
[illegible] இன்று 18.01.2011 [illegible] இன்று இரவு 7.30க்கு புறப்படுகின்றது. [illegible] 1500/=
தொடர்புகளுக்கு:-0771372119

KALAI VANI INSTITUTE - KOPAY
English Medium Classes => Grade - 6
தரம் 6 மாணவர்களுக்கான ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பம்.
இடம்: கலைவாணி கல்வி நிறுவனம், கோப்பாய்.
ஆரம்பம்: 20.01.2011 தைப்பூச தினத்தன்று
நேரம்: 4.00 pm
ஆங்கில மொழிமூலம் பயில விரும்பும் தரம் 6 மாணவர்களே தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

Micro System Development Centre
Jaffna Road, Manipay.
கணனி வகுப்புக்கள் ஆரம்பம்
19.01.2011, 21.01.2011.
Diploma Courses,
Certificate Courses,
Kid's Courses.
Tel. No: 021 3218462
Mobile. No: 077 2487082



பதவி வெற்றிடம்
பாதுகாப்பு அலுவலர்கள்
எமது நிறுவனத்தில்
பகல், இரவு நேரத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
அனுபவம். தகுதியின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தகுதி. தராதரச்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
முகாமையாளர்
ஒன்லைன் உதயன்
359. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
Online உதயன்
www.onlineuthayan.com
Phone & Fax : 021 222 0549 E - Mail :admin@uthayan.com, online@uthayan.com

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% பயிற்சி நெறி
◆Chip & Card level Trouble shooting ◆Assembling ◆Variours Mother Board Handling ◆Upgrading ◆Fault Finding ◆Repairing ◆Servicing ◆Printer, Scanner & Com device management ◆Software Installation ◆Configuring Internet Interfacing & Trouble shooting ◆Networking & Etc...
பயிற்சிநெறி முடிவில் கம்பியூட்டர் ஹார்ட் வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதம்
விபரங்களுக்கு நேரில் பயிற்சி ஆரம்பம் 19.01.2011
Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
T.P: 021 2225170

கற்சுமி வெளியீடு - 2011
அரிவரி ⑤ தரம் 1 புதுமுக மாணவர்களுக்கும் முன்பள்ளி பாலருக்கும் உரிய செயற்பாட்டு நூல்.
சுட்டிப் பரணி ⑤ தரம் 1, 2, 3, 4, 5 மாணவர்களுக்குரிய அலகுரீதியான தவணைக்குரிய முழுமையான வெளியீடு. (4 பாடங்கள்)
✱ 25க்கு மேற்பட்ட புதிய வெளியீடுகள் இப்பொழுது உங்கள் வழமையான புத்தகசாலைகளில்.
✱ மற்றும் எமது வழமையான வெளியீடுகள் விரைவில் வெளிவரும் பெறவிரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்ளவும்.
"உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்"
கற்சுமி வெளியீடு
166, நாவலர் வீதி, யாழ். 0212227442

உள்ளூர் நிகழ்வுகளை
உலகறியச் செய்வோம்.
உங்களுடைய பிறந்தநாள், மணநாள் போன்ற மங்கல நிகழ்வுகளையும், நீத்தார் நினைவுகள், கண்ணீர் அஞ்சலிகள் முதலிய நிகழ்வுகளையும்
உடனுக்குடன் தூர தேசத்து உறவுகளும் அறிந்து கொள்ள..
குறைந்த கட்டணத்தில் வியாபார விளம்பரங்கள் செய்வதற்கும் சுடச் சுடச் செய்திகளுக்கும், உள்ளூர் தகவல்களுக்கும்
Online உதயன்
www.onlineuthayan.com
Phone & Fax : 021 222 0549 E - Mail :admin@uthayan.com, online@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org